உ

கடவுண் மாமுனிவர்
அருளிச் செய்த

# திருவாதவூரடிகள் புராணம்

(மூலம் மட்டும்)





இலவச வெளியீடு:

பதிப்பவர்: தா. தவசிங்கம் கோவிற்கடவை
த. முத்துலட்சுமி

கடவுண்மா முனிவர் அருளிச் செய்த

# திருவாதவூரடிகள் புராணம்

([illegible])



[illegible]
புராண விரிவுரையாளர்
[illegible]

திரு. [illegible]

ஞானவி த. மூத்துவடிவேல் அவர்களின்

[illegible] இலவச வெளியீடு

[illegible] பதிப்பிக்கப்பெற்றது

உ

கடவுண்மா முனிவர் அருளிச் செய்த

# திருவாதவூரடிகள் புராணம்

(மூலம் மட்டும்)




விசேட சிரேஸ்ட கணக்குப் பரிசோதகர்
புராண விரிவுரையாளர்
வேழமுக அடிகள் ஆகிய

**திரு தாமோதரம்பிள்ளை தவசிங்கம்**


## துணைவி த. முத்துலட்சுமி அவர்களின்

மரணபரியந்த இலவச வெளியீடு


''விஜயா பிறிண்டேர்ஸ்'' ல் பதிப்பிக்கப்பட்டது

உ

# முன்னுரை

இப்புராணம் ஆலாசிய மான்மியத்துள் அடங்கும். சைவ சமயமே மெய்ச்சமயம் என தர்க்கரீதியில் வாதித்து ஸ்தாபிக்கப்பட்டது. தாயுமானவரும் பொய்ச்சமயம் புகுதல் வேண்டா என்றார். சமயகுரவர் நால்வருட் பரமகிருபானுவாகிய திருவாதலூரடிகள் திவ்வியசரித்திரத்தைவிரித்துரைப்பது. கடவுண்மாமுனிவரால் அருளிச் செய்யப்பட்டது. சிவசின்னங்கள் ஸ்ரீபஞ்சாட்சர மகிமை திருவாசக திருமுறை விளக்கி கூறிவிப்பது' சைவசித்தாந்த இலக்கியமாகியது நான்கு பாதங்களை தனிய விளக்குவது. ஏழுவகைத் தீட்சைகளையும் தெளிவிப்பது. சிற்றின்ப வாசனையற்று பேரானந்தக் கனியை அளிப்பது. பந்தமறுமெல்லை பார்த்து பக்குவ ஆன்மாவை ஆட்கொள்ள பரமேஸ்வரரே குருவாக எழுந்தருளல். பரமுத்தி கொடுப்பது, சிவாலய தரிசனம், சிவத்தொண்டு விழைதல், சுயமதஸ்தாபனம் பரமதகண்டனம் செய்தல், ஈழமகாராசா மகள் புத்தகுரு சைவர்களாமை காட்டப்பட்டது. திருவாசகம் முற்றோதல் நடைபெறும் மார்கழி மாதம் திருவாதிரையில் ஓதப்படும் புராணபடன பராயணம் இடம்பெறும். துறவிகள் — ஞானிகள் சித்தர்கள் சுவாமிகள், ஆச்சாரியார், சந்நியாசி அடிகள், ஆண்டி. பரதேசி என வகுக்கப்படும். மேலோர் இருடிகள் முனிவர் ஞானிகளின் மதங்களைசைவசமய சம்மதமாக ஒப்பிடுதல் தவறு. சோழமகாராசா பெயரும், ஈழமகாராசா பெயரும், புத்தகுரு பெயரும், தபோதனர் பெயரும் உரைகளில் காணப்படவில்லை.

ஆரம்பத்தில் சுன்னாகம் அ. குமாரசாமிப்புலவர் உரையும் மட்டுவில் ம. க. வேலுப்பிள்ளை உரையும் கிடைத்தன. பின்பு உரைநடைகள் வெளிப்படவில்லை. சுழிபுரம் வழக்கம்பரை பஜனைசபை திரு. மருதபிள்ளை ஆசிரியரின் பொழிப்புரையும், டாக்டர் நா. கனகரத்தினம் அவர்களின் மூலப்பிரதிகளும் தேடி வாங்கலாம்.

புராணபடன நாட்டம் குறைந்துள்ளது

காரணம்:-

1. காசுவாங்கி கூலியாக பிழைப்பாக படித்தல்

2. உடை சீர்கேடு, சிறப்பின்மை, அவாவின்மை

3. சிவசின்னம் அணியாமை, மக்கள் அறித்தல் கொடாமை

4. வாசிப்போர் கேட்போர் இல்லாமை

5. ஆன்மீக வாழ்க்கை கைவிடுதல்

6. உரை நடை எழுதல் அச்சடித்தல் கைவிடல்

7. சுயநலம் தர்ம சிந்தனையில்லாமை தன் வீரம் பேசல்

புராண படனம் சேவை செய்வது அதிகமாக ஆசிரியர்களே அவர்களே மனம் வைக்கவேண்டும். ஆனால் வெட்கப்படுகிறார்கள் சிறிது நேரம் சமயசேவை செய்ய முன்வரவேண்டும். சுலபமான விடயம் தற்காலம் குருவும் வேண்டாம் தீட்சை கேட்கலாம் விடலாம். நன்றாக உடுத்து கிழக்கே நோக்கி சிவசின்னத்துடன் அமர்ந்து பொலிவாகப் பயன் கூறலாம். வடக்குநோக்கி வாசிக்கலாம். நீங்களே படிக்கலாம். உரியகாலங்களில் மாமிசம் கைவிடலாம். கடும் சட்டம் தேவையில்லை. வாழ்வில் ஒருபங்கு கடவுள் சேவை தேவை. ஊக்கம் எடுங்கள் பணம் இருந்தால் பரிபாலனம் செய்யலாம். மனம் இருந்தால் பக்திசேவை கலியுகத்தில் செய்யலாம். கல்வியின் பயன் உழைத்தல், சேவை செய்தல் ஆகும்.

யாழ்ப்பாணப் பராம்பரியத்தை கைவிடமாட்டீர்களென நம்புகிறேன்.

இப்படிக்கு

**வேழமுக அடிகள்**

# திருவாதவூரடிகள் புராணம்

அச்சுப்பதிவு பிழை திருத்தம்

| | | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| முகவுரை | | சைவர்களாமை | சைவர்களானமை |
| | | அறித்தல் | அறிவித்தல் |
| மனோரம்மிய வாழ்க்கை பக்கம் | II | தோட்டமே | தேட்டமே |
| | III | வளர்ந்தவர் | வளர்த்தவர் |
| | | ஆனல் | ஆனால் |
| | | தந்தை | தந்தையை |
| | VI | லொறி | லோறி |
| | VI | கூறுவிட்டார் | கூறிவிட்டார் |
| | V | Certificats | Certificates |
| | | Comnerc | Commerce |
| | | உள்கை | உள்ளக |
| | VII | சூட்டாகச் | கூட்டாகச் |
| | | பயணம்ம் | பயணம் |
| புராணம் செய்யுள்எண் | | | |
| காப்பு | 6 | தொண்படும் | தொண்டுபடும் |
| | | நல்கிதென | நன்கிதென |
| மந்திரி | 1 | விடத்றை | விடத்தை |
| | 3 | வாதவூரர் | வாதவூர் |
| | 17 | நாகமெட்டு | நாகமெட்டும் |
| | 22 | தருமுன்னர் | தருமுணர் |
| | 26 | விளம்பின | விளம்பினர் |
| | 27 | வன்தினல் | வன்திறல் |
| | 38 | மேன்மை | மேன்மைகொடு |
| | 39 | உளைந்துதய | உடைந்துதய |
| திருப்பெருந்துறை | 47 | புழுகு | புனுகு |
| | 53 | ஒண்குடல் | ஒண்குடை |
| | 57 | வதிநதி | மதிநதி |
| | 74 | பிடிக்கவில்லை | இருந்த நங்குரு |
| | 82 | அகல | அகல என்றார் |
| | 132 | செல்பாக | செல்விபாக |
| குதிரையிட்ட | 41 | புனைந்த | புனைந்த |
| | 48 | மிகந்க் | மிகக் |
| | 54 | துயவன் | தூயவன் |
| | 53 | செய்ய | செயல் |
| | 65 | ரித்தலும் | எரித்தலும் |

| | | | |
|---|---|---|---|
| மண்சுமந்த | 7 | தடமதுல் | தடமதில் |
| | 18 | தம்பொத் | தம்பொற் |
| | 26 | என்னுடையாய்ன்னு | என்னுடையாயின்னு |
| | 35 | ருன்றெனும் | குன்றெனும் |
| | 42 | கொண்டையாக | கொட்டையாக |
| | 49 | அழைதலும் | அழைத்தலும் |
| | 73 | மன்னிவ்வாறு | மன்ன னிவ்வாறு |
| | 84 | தொழிமி | தொழிமின் |
| | 85 | தீங்கல் | தீங்ககல் |
| திருவம்பல | 42 | கிவிரவும் | விரவும் |
| | 43 | இராப்பகல்இரண்டுதரம் | ஒன்றுஇல்லை |
| | 47 | முன்தலம் | முன்தவம் |
| | 51 | பேறையாய் | பேதையாய் |
| திருவடி | 16 | நற்றம் | நற்றவம் |
| | 17 | மன்கன்று | மன்றகன்று |
| | 25 | நண்ணுலம் | நண்ணுவம் |

# மனோரம்மிய வாழ்க்கைச் சுருக்கம்

## வாழ்க்கை:

கல்வியும் நல்லோர் இணக்கமும், உயர் உழைப்பும் மங்கல கேசியும், ஆன்மீகமும், சற்பூத்திரரும் இணைந்தால் பக்குவ மனம் உவந்து திவட்டா வாழ்வு மலரும். மண்ணில் நல்லவண்ணம் வாழலாம். வாக்கு, மனம், செயல், அன்பும், நேர்மையும், துணிவும் அறிவும் கொண்டு செயலாற்றவேண்டும் இளமைதொட்டு முதுமை வரை இறைவன் கருணை முக்கியம் என்றும் குறைவில்லை. வீரம் வஞ்சகம், பொறாமை முதலிய தீயஎண்ணங்கள் குடும்பமே உய்ய வழியில்லை. ஆங்கிலத்தில் சோட் பிக் அப் என்பார்கள் சிந்தித்து வாழவேண்டும்.

## பிறப்பு:

கோவிற்கடவை வேலர் சங்கரர் மரபில் தோன்றிய திரு. கணபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை அவரது பாரியார் தெய்வானைப்பிள்ளைக்கும் பிள்ளையாக அருந்தவப்புதல்வனாக பூமியில் செனித்தேன். எனக்குப்பின் மூன்று பேர் இருவர் விண் ணுலகு எய்தினர் ஒரேஒரு அன்புக்கு அழைக்க அருமைத் தங்கை ஒன்று உண்டு. பத்து வருடம் மகவில்லாமல் வேழமுகன் அருளால் உதித்த திருச் செல்வங்கள். அதனால்தான் ஆண்டவன் சோதனைத் துன்பங்கள் அதிகம் உளவாம். யான் சோதனைகளில் பாஸ் பண் ணித் துறவியானேன் என் தங்கை நோயுற்று விரக்தியானாள். பிள்ளைகள் காப்பாற்றும். காரணம் திருமணம் செய்த இடங்கள் அசுர கூட்டம் மேலது விதியினை விலக்கு நீரினர் யாவர். அனுபவிக்க வேண்டும்தானே.

## தெய்வத் தந்தை:

அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம் என்ற கூற் றுக்கு சிலரே உளர். மற்றவர்கள் போட்டோ எடுக்க வணங்கப்படு வார்கள். தந்தையொடு கல்விபோம். கல்விக்கு தந்தையே முக்கியம் அத்தந்தை கல்வி கொடாவிடில் பெற்றதினாலாய பயன் என் பிரயோசனம் இல்லை. தந்தையின் குணம் மைந்தர்க்குண்டு என்பது விந்துவின் விளைவு. ஆகவே தந்தையின் அறிவு, ஒழுக்கம், ஆற்றல் வாழ்வுமுறை நல்லதாக அமையுமானால் பிள்ளைகள் வாழ்வு மலரும்

மலேசியா சிறுவயதிலே சென்ற தந்தை லண்டன் மற்றிகுலேசன், கணக்கியல், வர்த்தகம், இன்சூரன்ஸ் சுருக்கெழுத்து, தட்டெழுத்து பயின்று காஸ்வோக் கம்பனியில் உயர்குமாஸ்தாவாக பணியாற்றினார். முதலில் குதிரைவண்டி வாங்கியவர் இவரே. சகல சாஸ்திர வாகட நூல்கள் உள்ளவர். தன் உத்தம மைத்துனியை தந்தை விருப்பப்படி திருமணம் செய்து 16 ஆண்டுகள் மலேசியாவில் இல்லறம் நல்லறமாகவும் மருமகன் செல்லையாவை படிப்பித்தும் தொழிலாக்கியும் கூட வாழ்ந்தவர். உலக மகாயுத்தத்தின் போது நன்றாக உழைத்தபின் ஊர் திரும்பினார். நிலப் பிரபுவாக உயர 22 காணிகள், வயல்கள், தோட்டங்கள் வாங்கினார். பிள்ளைகள் சிறுவர்கள் காலம் வர வீடு கட்டலாம் என்று நினைத்தார். போட்டியும் சுரண்டலும் கூடிய கிராமம். ஏவுகணைகளால் குடும்பத்தில் பிரச்சனைகள் உண்டு. சகோதர பாசங்களும் கூடினால் பிள்ளைகளைத் தாக்கும். திடீரென மனைவியார் (தயார்) மூன்றுநாள் மலேரியா சுகவீனமுற்று காலமானார். தந்தையார் தனித்தார், ஏக்கமுற்றார். பிள்ளைகளுக்கு உதவி நாடினார் நன்றிகொன்ற இனம் மறந்து விட்டது. 10 வருடஎல்லையில் ஒற்றி வழக்கில் பல காணிகள் பறிபோயின. கூடநின்றவரை ஏமாற்றாமல் கீழ்க்கோடு மட்டும் வழக்குப் பேசியவர். எஞ்சிய காணிகளில் நாம் இன்றும் வாழ்கின்றோம். புதுக்க காணிகள் யாரும் வாங்க வில்லை போதும்.

## ஏன் தெய்வமானார்?

1. காளை வயதில் கன்னியிழந்தும் குடி கூத்தியில்லாமல் மறுமணம் செய்யாமல் பிள்ளைகளுக்காக வாழ்வை தியாகம் செய்தவர்.
2. பஞ்சபாதகங்கள் என்றுமே தெரியாது. நேர்மை, ஒழுக்கம், பண்பு, கண்ணியம், கட்டுப்பாடு உடையவர் வீணாகப் பணம் செலவழிக்கவில்லை.
3. துணிவு காடையர் கைவசம் காவல் உண்ணாமல் உண்டு வாழ்ந்தவர்.
4. கிராமம் உயர பல பணிகள் செய்தவர் ஊர் அறியும். கடன் படார்.
5. மற்றவர்கள் போல் முன் நின்று தன் பிள்ளைகளுக்கு வீடு, வீடு சீதனம், நகை கொடுத்து திருமணம் செய்து வைத்தார். அவர் தோட்டமே இன்றும் உதவுகிறது.
6. நேரானவர் வளைவு இல்லை. நிமிர்ந்த நடை, மலர்ந்த முகம் பிள்ளைகளை சிறகுகளால் மூடி பேணி வளர்த்தவர். 50வாளி தண்ணீர் அள்ளி முழுக வார்ப்பார் சோறு 15 வயதுவரை தீத்தியவர்.
7. பாடசாலை கட்டி, இரு சங்கக்கடை உருவாக்கி, ஆலயம் நடாத்தி பூரியாகி, பல நிறுவன அங்கத்தவராகி புகழ் பூண்

டவர். சான்றோர் அரசியல் தலைவர்கள் செல்வாக் குடையர். பக்தியும் எளிமை வாழ்வும் கடைசியில் நடத்தியவர், பல தர்ம இலவச காரியங்களைச் செய்து வாழ்ந்தவர். போட்டி பொறாமை வஞ்சகம் மறந்தும் மன்னித்தும் உயர்ந்தவர். வேட்டைத் திருவிழாவில்கட ராசிக் குடை கிழித்தெடுந்தவர் திரு அனுராத புர சுப்பையாவுடன் துணைநின்று தீண்டாமையில் வெற்றி பெற்றார் இவரும் மறைய தீண்டாமை தீண்டிற்று ஆலயம் நடத்த முடியாமல் பரிபாலன சபையின் கையில் விழுந்தது

8. கிட்லர் போன்றவர் பிள்ளைகளுக்காக உண்பது நாழி உடுப்பது நான்கு முளம்

9. தங்கை பாவம் படிப்பிக்க மாமிமார் விடவில்லை. சமைக்க வேண்டிய சூழ்நிலை ஆனால் அன்பாக வளர்ந்தவர் ஆனல் எனக்கு போதியளவு கல்வி வசதி தந்து அடி அகோரத்தில் வளர்த்தார் செல்லமாக வளர்த்தால் குளப்படி அதிகந்தானே. அவரின் செல்வாக்கினால் வலிய உத்தியோகம் கிடைத்தது. இப்படியும் தந்தை கிடைக்குமா? அரிது.

## அருமைத் தவத் தாய் (தாயொடு அறுசுவை போம்)

தந்தை திருமணம் செய்ய உறுதிபூண்டு மொட்டை அடித்தவர். கடவுள் பக்தி பூண்டவர். பிள்ளையில்லா வரம்கேட்டு பிள்ளையார் கொடுமுடிக்கு கல்லெறிந்து கிடைக்கப்பட்டபிள்ளை தவம் அழுது கும்பிடுவார். நேரகாலம் சமைப்பார். பப்பா கோபி அம்மா முற்கோபி சண்டையில் ஒற்றுமை அன்பு பப்பா மனைவிக்கு துரோகம் செய்யவில்லை கண்டபடி அடி, உதை, மிதி இல்லை. பப்பா சாகும்வரை நான்காண அம்மாவை நினைத்து அழுதவர் அம்மா இல்லாமல் பல கஸ்டங்கள் பட்டேன் என்பார். அம்மா பாவித்தி, அழகானவ, கணவனை மதித்து நடந்தவ. அவவின் பின்னிய றேந்தைகள் இப்பொழுதும் உண்டு தையற்கலை, கோலம், மனையியல் அழகுக் கலைகள் பழகியவர். நான்கு பெட்டி உடுப்புகள் உடையவர் அழகாக உடுத்து வீட்டில் இருப்பர் ஆனால் மாமியார் கொடுமை அதிகம். அம்மாவின் சகோதரங்கள், பிள்ளைகள் ஒத்தாசை உண்டு. பட்டறிவு இல்லை வறுமையில் வளர்ந்தவ வாழ்வில் உயர்ந்தார். தவம் இருந்து பெற்ற தவப்புதல்வன் தவசிங்கம். புண்ணியவதி எனக்கு 7வயதில் 3நாள் மலேரியா காய்ச்சல்வந்து திடீரென சுவர்க்கம் அடைந்தார். தந்தை ஆழ்ந்த கவலை அடைந்தார்

இருவரும் அருகில் பிள்ளைகள் உண்ணவைத்து உண்பர். எனது தங்கைங்கைக்கு 2வயது எப்படியான சோகக்கட்டம். மண்வீடு. மகாலிங்கம் களவு. இராமலிங்கம் சண்டியன் காவல். அன்று தொடக்கம் எனது பப்பா பிள்ளைகளை மரணம்வரை சமைத்துசாப்பாடு கொடுத்தவர். தன் பிள்ளைகளை பெருமை பேசி உளம் பூரித்தவர். எனக்கு காக்காய் வலி வந்து வருத்தம் மாறாது கடுமைவர இருவரும் தோள் சுமந்து ஏலாமல் பிள்ளையார் வாசலில் நேர்ந்து விட்டார்கள். தாயின் கடமை செய்ய முடியவில்லை. தந்தை மனம் நோகாமல் நடந்து என் கடமைகள் சரிவரச் செய்தேன்,

1. பப்பா விரும்பியவை கொடுத்தேன் பணம் அனுப்பினேன். காதலித்து ஓடவில்லை
2. பப்பா விரும்பிய பெண்ணை திருமணம் செய்தேன். 39 வயதிலும் மடியில் இருப்பேன். கொஞ்சி மகிழ்வேன்.
3. பப்பா சாகமுதல் ஒருபிழை விட்டேன்என்றார்தேற்றிவிட்டேன்
4. பப்பாசெய்த நன்மைகளை அறிந்து அவர் பாதம் வணங்கி பயணம் செய்வேன்.
5. பப்பா மனம் குளிர்ந்து என்மகன் தன்னை குறையவிடவில்லல தன்குணம் நற்குணமுடையன் வருந்தேன் என்று கூறுவிட்டார் திருப்தி அடைந்தார்.
6. பப்பா படிப்பில் ஊக்கம் தர பலதுறையிலும் படித்தேன் கல்வித் தெளிவும் செருக்கும் அதிகாரமும் கொண்டேன்.
7. பப்பா 6-1-76 ல் 75 வது வயதில் திடீரென சன்னிகாய்ச்சல் வந்து காலமானார். நான் கொழும்பில் உத்தியோகம் புதுக் குடும்பம் மரண முதல்நாள் வரமுடியவில்லை. குடும்ப நெரிச்சல்கள் உண்டு, திரு இ. வீரவாகு மருமகனும் இ. அமிர்தலிங்கமும் பப்பாவின் கடமைகள் செய்தார்கள். என் தங்கை குடும்பம் ஊஞ்சல் ஆட்டம் தகப்பனார் உண்ணாமல் கஸ்டப்பட்டார் நரைதலைக் கல்யாணம் தண்டவாளம் புரண்டது. எனது தங்கையின் கல்வி 5ம்-வகுப்பு எனது மைத்துனர் கல்வி 7ம்-வகுப்பு யமன் விதிப்படி வாழ்வு சுமைக்கடன் அளவாகச் செய்தேன்

துட்டகைமுனுவின் சுகபறுநிலை ஒரு பக்கம் கடல் - சண்டித்தனம் தங்கை பிள்ளைகள் அவலநிலை தந்தை நடுவில் நெரியல். மறுபக்கம் தமிழன் - என்குடும்பம் மாமி அடங்காப்பிடாரிகள், மைத்துனர் ரவுடிகள் என்நிலை தூக்குக்கயிறு. அதுதான் கல்வியறிவு, சூலம், குணம் கௌரவம், நல்லோர், கற்றோர் உறவு காடையர் கைவசம் வேண்டும். எனக்கு ஆறுதல், தேறுதல் தந்தவர்கள் தந்தையும் அவரது மருமக்கள், எனது பாடசாலைக்குரு திரு வண பென்சமின் அடிகளார்

**எனது கல்வி முறை:** வாழ்வு வளம்பெற இளமையிற் கல்

ஆரம்பக்கல்வி ஞானாசாரியா பாடசாலை 6ம் வகுப்பு தொடங்கி ஏச். எஸ். சி. வரை திரு இருதயக் கல்லூரி கரவெட்டி கல்லூரி அதிபர் வணபிதா பென்சமின் அடிகளார் கல்வி புகட்டல் ஒழுக்கம் மிக கட்டுப்பாடு பிரசித்த பிரம்படி நடக்கும். படிக்கும் காலத்தில் அதிபர் கட்டளையுடன் தந்தை அடிப்படிப்புடன் பல கோணங்களில் முன்னேறினேன். பேச்சாளர், மொனிற்ரர், கெட் பிறிவெக்ற், இல்லக் கப்ரின் (சிவப்பு) டிறில்கெட் வடமாகாண ஒழுங் காற்றுனர், பார்லிமெண்டில் எதிரிப்பக்கம் தலைமை (பாடசாலை) படிப்பு ஆண்டு முடிவு 1958. பல்கலைக்கழகம் கிடைக்கவில்லை. அரச தரப்பு சோதனை சித்திகள் இல்லை. தனியார் துறையை நாடினேன். தந்தையின் ஊக்கம் ஆக்கம் அளித்தது. 7½சனி முடிந் தது. முறிவு தெறிவு ஒன்று பட்டது. வர்த்தகக்கல்வி படிக்க கொழும்பு சென்றேன். மாதம் 150ரூபா/- கற்குமிடம் போலிரெக்னிக் இலங்கை தொழில் நுட்ப கல்லூரி, கொழும்பு. 1960 — 1970 வரை கற்றகல்வித் தகைமை பின்வருமாறு. யாவரும் ஊக்கமடையவேண்டும்

1. Final Institute of Bookkeepers London
2. ,, ,, , Commerce ,,
3. ,, Royal Society of Arts ,,
4. Inter Assn of Inter National Accountants ,,
5. ,. Institute of Chartered Secretaries ,,
6. ,, English Assn of Incometax ,,
7. ,, English Asst Teachers Cert Ceylon
8. Final Polytechnic Certificats ,,
9. English and Tamil Typing — School of commerce Maradana
10. Practical Sinhala — S. S. C.
11. German 5th std Latin 8th std — Embassies
12. பிரவேச பால பண்டிதர் - கலைவாணிக் கழகம் சுரவெட்டி

5-6-1970 திருமணம் 33 வயது சம்பளம் ரூ 300/- விடாமுயற்சி கணக் கெழுதல் வருமான வரி பார்த்தல். வெளியிட கணக்கு பரிசோத னைகள் மேலே உயர முடிவு படிக்க முடியவில்லை. தந்தை திருப்தியடைந்தார். உத்தியோக விடயத்திலும், குடும்ப விடயத் திலும் அக்கறை எடுத்தேன்.

**உத்தியோகம் வகித்தல்:**

1. லங்கா சேவீஸ் ஸ்ரேசன், பம்பலப்பிட்டி — கணக்கு குமாஸ்தா
2. மகாராஜா சமாஜம் — உள்கை கணக்கு பரிசோதகர்

வோட்றோட்ஸ் தோண்டன் அன் கொம்பனி · சிரேஸ்ட பரிசோதகர்

4 லொறி முத்துக்கிருஸ்ணா அன் கொப்பனி ஆரம்ப பரிசோதகர்.

பணஉதவி மீண்டு கொடுபட்டது.

1 செல்லையா செல்லம்மா — முத்தக்கா கொள்வனி தோட்டம்
2 கந்தர் சந்திரசேகரம் — அத்தான் அணிஞ்சிலடி

உத்தியோக சேர்ப்பு உதவியாளர்கள்

1 துன்னாலை தெற்கு திரு வ. திருநாவுக்கரசு ஓடிற்றர்
2 ஆனைக்கோட்டை திரு சு. சுப்பிரமணியம் பணிப்பாளர்
3 ,, திரு சு. நடேசன் குயின் கவுண்சில்
4 ,, திரு து. சிறிகாந்தா உயிர் நண்பன்
5 மல்லாகம் திரு ந. கிருஷ்ணமூர்த்தி ஓடிற்றர்

கணக்கு பரிசீலனை செய்த இடங்கள் — 9 மாகாணங்கள்

1 மட்டுப்படுத்தப்பட்ட கூட்டு வியாபார தனியார் கொம்பனிகள்
2 தேயிலை, தென்னை றப்பர் பெருந்தோட்டங்கள் ,,
3 உல்லாச நட்சத்திர கோட்டல் ,,
4 சட்டத்தரணி பத்திரிகை ,,
5 சபைகள், சம்மேளனங்கள், கிளப்புகள், கல்லூரிகள் (பிறைவேற்
6 சீமேந்து, மரம். மா யந்திரம், கடதாசி, பெற்றோல் போன்ற ஆலைகள் கூட்டுத்தாபனங்கள்
7 கூட்டுறவுத் திணைக்களம், உள்நாடு வெளிநாடு வங்கிகள் இன்னும் பல

புராண படனம்:

கந்தபுராணம் முழுவதும் திருவாதவூரடிகள் புராணம்.

துறவு:

காவி, கமண்டலம், உருத்திராக்கம், கெண்டி, பிச்சைப்பை, தண்டு, தாளம், மிருதங்கம், விபூதி, சந்தனம், குங்குமம், சிவ பூசை, அர்ச்சனை, தூபதீபம், பிரார்த்தனை, தவம் (செபம் தியானம்) குலதெய்வம் - பிள்ளையார் வழியாக சிவலிங்கவழிபாடு

# உன்னத உத்தியோக வாழ்க்கை

உயர்கல்வி, வேலை ஆரம்ப அனுபவம், பண்பு, பழக்கம், ஒழுக்கம் தொழில் உயர சேர்ப்பதற்கு முன்வந்தனர் உயர்தொழில் வோட்டுகுட்ஸ். நேர்மை. உயர்குணம் மேசைப் பழக்கம், பேச்சுக் கலை, எழுத்தாற்றல், நுண்ணறிவு, உடுப்பு ஒழுங்கு, கம்பீரம், துணிவு போன்றன நடமாட வேண்டும். பணிவு, வேலை ஆர்வம்' கஸ்டம், சமாளிப்பு, பொறுமை, பொறுப்பு உணரவேண்டும். நம் பிக்கை வளரவேண்டும். மூன்று வருட ஒரு முறை பதவியுயர்வு எவ் வேலையையும் பாரமெடுத்து குணமாகச் செய்து முடிக்க வேண் டும். அளவான குடி, போசனம், உண்மை, நட்பு உயரவேண்டிய 10 குணநலன்கள் பேண வேண்டும். யாழ் குடாநாட்டு வழக்கமான சுயநலம். லோபம், நிறைகுடி, சாப்பாட்டு அவா, கரவு, சூறையாடல் பணவாசை, கும்பிடுகள்ளம் யாவும் கைவிட்டு கறுவாக்காடு பரம் பரை பணக்கார சீலமான குணங்கள் நடைமுறை மேற்கொள்ள வேண்டும் குடிப்பதற்கு பப்பா அனுமதி கிடைத்தது. கூட்டுணர்வு தேவை. திறமை கடைப்பிடி, பரிசீலனைக்கு 5பேர் கூட்டாகச் செல் வோம். சம போசனம், பஞ்சணை படுக்கை அளவான குடி, வேலைப் பகிர்வு, உல்லாச பயணம். சமலாபம், 'பொழுது போக்கு யாவும் சீராக அமைப்பேன். தங்குமிடம் முகாமை பங்களா, உல் லாச விடுதி. கோட்டல்கள். கிளப்புகள், தனியார் வாகனம், அரச வாகனம், முதல் வகுப்பு ரயில் பிரயாணம் செப்பமாகச் செய்வோம் வேலை முடிந்தபின் உல்லாச பயணம்ம் நடைபெறும். பல பெரி யார்களுடனும், முப்படை அதிகாரிகள், மந்திரிமார்கள், முகாமை யாளர் பலருடனும் கௌரவமாகப் பழகுவோம். தேடிய உணவு வகை, உண்டிகள், பானங்கள், குடிவகைகள், மாமிசவகை யாவும் புறக்கணியாது மகிழ்ந்து அளவாக உண்போம் களிப்போம். மனை விக்கு தந்தைக்கு பணம் கொடுத்து மிகுதி வங்கியிலிடுவேன். ஆல யங்கள் கல்வி போன்றனவ தர்மம் செய்வேன். புகை, வெற்றிலை இல்லை. அறிவுள்ள நூல்கள் படிப்பது வாசிப்பது வழக்கம். என் னுடன் படித்தவர்கள் உயர்பதவிகள் வகிக்கின்றார்கள் சகலசேவை யிலும் காணலாம் இலட்சியம் வேண்டும். படிப்படியாக உயரவேண் டும். 1983ல் இனக்கலவரம் பின் வாடகை இடங்கள் எடுப்பது கஸ்டம், சலரோகம், தங்கை கல்யாணம் தக்குச்சம்பாதி. என் கல் கல்யாணம் கம்பர்மலை கொலை சண்டித்தனம் குடியழித்தல்பிரித்

தல் கெட்டவை ஓதல் கும்மாளம் அகங்காரம் அடிமைப்போக்கு யாவும் என் மனதை வாட்டின. குறையாடல் மறுபக்கம் வேதனை காடை மைத்துனர்கள் புறக்கணிப்பு பெருமை தனிப்போக்குந்துன் பம் 1989ல் வேலை ராஜிநாமா போதுமென்றமனம் உயர் வாழ்வு உயர் உத்தியோகம் செய்யமுடியாத சமூக நிலை பிள்ளைகள் பொறுப்பு இல்லை. எனது மருமக்களும் நல்ல செயல்முறை இல் லாதபடி பெற்றார் ஓதல், உதவியும் அற்றது யாவும் கைவிட்டேன் அமைதி நாடினேன் தற்காலப் பிள்ளைகள் பெற்றோர் போக்குகள் வெளிநாட்டுப் பணத்தால் கலியுக புரட்சியாக மாறிவிட்டன.

மனைவிக்கு முழுச்சுதந்திரம் கொடுத்தேன். அதனால் வீட்டுக்கவலை இல்லை எல்லாம் நன்றாக நடத்துவா நான் உழைப்பும், கேளிக் கையும் பொழுதுபோக்கு நூற்றுக்கு பத்துவீதம் தர்மம் செய்வேன். சந்தோஷ வாழ்க்கை நடத்தினேன் மனிதன் மன்னித்தும், விட்டுக் கொடுத்தும், தெரியாமலும் நடக்கவேண்டும். கண்டிக்கின்ற இடத் தில் அன்பு, புத்திமதி, பொய்யடி மூலம் 35 வயதுமட்டும் செய்ய லாம். குடிக்கலாம் சாப்பிட்டு படுக்கவேண்டும். கூத்தாடக்கூடாது.

## மனைவியின் திருமணம் வாழ்வின் பங்களிப்பும்

05-06-70 பப்பா பேசிய, ஆசீர்வதித்த, வணங்கிய திருமணம். பெயரே முத்துலட்சுமி அதேபோல் நிறம் நிறைவு நன்றாக உடை சுத்தம் நெருங்கிப் பழகல் நேரவேலைக் காரியம் உள்ளவ நேரத் துக்கு சாப்பாடு ஓடி உழைத்தேன் உல்லாசம் படம் பார்த்தல் வீட்டில் விதம்விதமான உணவு வகைகள். குதூகலமாக நிற்றல் என் வாழ்வை வழம்படுத்தின இலங்கையில் கண்டி திருக்கோணமலை திருக்கேதீஸ்வரம் மட்டக்களப்பு கதிர்காமம் நுவரெலியா போன்ற இடங்கள் சுற்றுலாவில் மகிழ்ந்தவள். நல்ல குடும்பம் விவாகம்செய்த செய்த ஒரு கிழமையுள் கொழும்பு கொண்டு போனேன். நன்றாக வாழ்ந்தோம். ஆனால் முத்துப்பிள்ளை மாமி எனது மாமி பூமி சூரியனால் பல பிரச்சனைகள் இவை அவவை வாழவிடவில்லை, எனது வருமானம் நகை பொருள் எல்லாம் அழிந்தது. பாவம் குழந்தை உள்ளம் கடுங்கோபி பின் அழுவா மறந்திடுவா. பிள்ளை யில்லாததால் சகோதரங்கள் தாய் விறாண்டினார்கள் உண்ணக் கொடுத்தேன். ஆனால் கவனமாக எட்டி வாழ்ந்தேன் இன்றும் அவவை செல்லக் குழந்தையாக அன்புடன் பராமரிக்கின்றேன்.

மனைவி சுகவீனம் நான் 3 புலன்கள் இழந்தேன். கடவுள்கொடை குறையவில்லை. என் குடும்பவாழ்வை கெடுக்க முயன்றவர்கள் 4 பேர். ஆனால் பரவாயில்லை.

எனது 48-வது வயதில் போதுமென்றமனம் தோன்றிற்று. புராணபடனம் உரை பயின்றேன். மதுரை சென்றேன் காவி தரித்தேன். மனைவியும் உடன்பட்டார். கட்டுக்கதை மனைவியை மாறச் செய்தது. பாகப்பிரிவினையால் சண்டைகள் வரும், நான் கைவிடவில்லை. 53-வது வயதில் 1989ம் உத்தியோகம் ராஜிநாமா செய்தேன். தற்பொழுது 62 வயது. ஊருடன் உழைத்தும்ஊதியமுமாக வாழ்கிறேன். கடன்படவில்லை கடமைப்படவில்லை.

## துறவு

தானாகவே வளர்ந்தது வெறுப்பில் இல்லை. பிள்ளை வேண்டாமென்று 15 வயது முதல் 33 வயதுவரை பிள்ளையாரை அழுது வணங்குவேன். தாயில்லாமல் பட்ட கஸ்டம் போதும். அழுது தேவாரம் படிப்பேன். பல்லிகள் ஒலமிடும். தாய் தவம் செய்த தவப்பிள்ளை பிள்ளையார் கொடுத்தவர். அதனால் அவர் பின்தொடர்ந்தார். 1980-ல் தவவாழ்வு விரும்பினேன். படிப்படியாக மேற்கொண்டேன். மதுரையில் சொக்கநாயகி சமேதர சொக்கநாதரை திருவாதவூரர் பிறந்த ஆலயம் சென்று அழுதுவணங்கினேன் குன்றக்குடி அடிகள்ார் தீட்சையும் ஆசீர்வாதமும் பெற்றேன். காவி உடை உடுத்தேன் மாலைகள், உடுக்கு, கெண்டி, கமண்டலம் யாவும் வாங்கினேன், 1987ல் லிங்கம் ஸ்தாபித்தேன். இடையருந்தவம் மேற்கொண்டேன். கடவுள் இளமையில் கல்வி உயர் உத்தியோகம் மங்கலமனைவி உன்னத உழைப்பு பக்குவமனம் புராண உரை கூறல் துறவு எல்லாம் தந்து முப்புலன்களை எடுத்து ஆட்கொண்டார். மண் விலகியது பொன் பிரிந்தது பெண் சுகவீனம் யான் சுகவீனம் ஒற்றுமை வாழ்வும் கொடுத்தார். 1990-ல் இருந்து 1997 வரை மைத்துனர் நடராசாவின் ஆமி தந்தர பிரிவினைக் கோலங்கள் மகன் வந்ததும் மாறிவிட்டார். எனது தங்கையும் பிள்ளையும் 4வருடம் கைவிட்டவர்கள் இப்பொழுது தம்பியின் வழிக்கு வந்தனர். 1998-ல் யாவும் பாரம் கொடுத்தேன். இல்லற துறவு தனிமையாக இனிமை காண்கின்றேன். சொல்லொனா இரகசியம் நோயும் சுகமும் உண்டு. யாரும் என்னைப்பராமரிக்க வேண்டுமென்று நான் எண்ணி நடக்கவில்லை. என்கடமைகள் செய்தேன் கைவிட்டேன் ஏமாறாதே ஏமாற்றாதே தன்வினை தன்னைச்சுடும் ஒட்டப்பம் வீட்டைச்சுடும்.

நான் ஆண்டி பரதேசியல்ல, செபம் தியானம் பூசை மனம் வாக்கு செயல் ஒன்றுபடச் செய்யும் மேலதாகிய தவம் கடவுள் தந்தது. காலம் கட்டங்களில் மூவாசை வென்றேன். புலன்களை அடக்கினேன் கூட்டம் கைவிட்டேன். வெளிச்செயல் அற்றேன் மௌனமானேன். கடமைகள் அன்புடன்செய்துவருகிறேன் நான் ஞானிகளை வழியவிடவில்லை. பிள்ளையார், சிவலிங்கம் இரண்டுமே மூலாதார தெய்வம் என்று வணங்குவேன், துன்பமில்லை. கவலையில்லை, பிரச்சனைகள் இல்லை. தவவாழ்வு 18 வருடங்கள், மிகுதி மறுபிறப்பில் தொடருவோம்.

## மனோரம்மியம் எங்கே?

1. உயர் கல்வி 2. கற்றபடி நிற்க 3. உயர் திருப்தி உத்தியோகம் 4, மங்கல நிறைவு மனைவி 5. போதுமென்ற மன வாழ்க்கை 6. ஆன்மீக சாதனை அமைதி 7 தேடிய செல்வம் நாடியே உதவும்.

வாழ்க வளம் பெறுக வையகம் உய்ய.

கணபதி துணை
திருச்சிற்றம்பலம்



# திருவாதவூரடிகள் புராணம்

**காப்பு**

பவளமால் வரையில் நிலவெறிப் பதுபோல்
பரந்தநீற் றழகுபச் சுடம்பில்
திவளமா துடன்நின்று ஆடிய பரமன்
சிறுவனைப் பாரதப் பெரும்போர்
தவளமா மருப்பொன்று ஒடித்தொரு கரத்தில்
தரித்துயர் கிரிப்புறத் தெழுதும்
கவளமா களிற்றின் திருமுகம் படைத்த
கடவுளை நினைந்துகை தொழுவாம்.

1 இதந்தரு மடந்தையொடு இயைந்துயிர் உடப்பு போல்
விதப்படு உலகங்களில் விரிந்தொளி விளங்குவார்
மதங்கமொடு துந்துபி வளங்கெள முழங்கவே
சிதம்பர நடம் பயில் செழுங்கழல் இறைஞ்சுவாம்

2 ஆடக சிதம்பர அணங்குமை அணங்கிலா
நாடகன் அனந்தசுகம் நன்குபுனை பங்கினாள்
ஏடக மணம்பொருவ எங்கணும் இயைந்துளாள்
பாடகம் இலங்குசிறு பங்கயம் இறைஞ்சுவாம்

3 துங்கமத கும்பவுயர் தும்பிமுகர் தப்பிசீர்
தங்குஞெகி ழம்சிறு சதங்கைகள் புலம்பவே
மங்கையுமை கண்குளிர வந்துலவு கின்றதாள்
அங்கைமலர் கொண்டுமிகும் அன்புடன் இறைஞ்சுவாம்

4 தென்பொதிய மாமுனி சிறக்கவருள் எண்ணெண்
இன்பவிளை யாடல தெனும்கடலுள் நாயேன்
மின்பயிலு மாமதுரை மேவுதமிழ் மாறன்
துன்பமற நல்குகதை சொல்லலுறு கின்றேன்

5 அற்புதன் இருந்தருள் பெருந்துறை அடைந்தே
சிற்பரம் உணர்ந்துதிரு வாசகம் உரைப்பார்
முற்பகல் அருந்தவம் முயன்றுபெறும் அன்பால்
உற்பவம் ஒழிந்தமை மொழிந்திடர் ஒழிப்பாம்

6 கொண்டலன கண்டனருள் கொண்டுதமிழ் பாடித்
தொண்படும் அன்பர்செயல் சொன்னநெறி தன்னால்
வண்டமிழ் தெரிந்தவர்கள் மற்றெனுரை குற்றம்
உண்டெனினும் நல்கிதென உள்ளுவர்கள் எள்ளார்

## மந்திரிச் சருக்கம்

1 முக்கணொரு நான்குபுய ஐந்துமுக முன்னோன்
சொக்கனருள் நன்மைபெறு தொன்மைதிகழ் நன்னாடு
அக்கடுவி டத்தறையரனுக் கருள்வ தென்றே
மைக்கடலில் வைகல்ஒழி வைகைவள நாடு

2 நீண்டகயி லைக்கிறை நிகழ்த்தவரு ளாலே
பூண்டமுனி மெய்த்தமிழ் புகன்றதிரு நாடு
மூண்டபகை செற்றுலகம் முற்றுமர சாளும்
பாண்டியன் நலங்குலவு பாண்டிவள நாடு

3 மேவுமூர் வளம்பலவும் மிகுந்துள நாடதனில்நலம்
பாவுமூர் பழமறைதேர் அந்தணர்கள் பயின்றுளவூர்
தாவுமூர் விடையேறி தாங்கியவூர் அங்குறையும்
தேவரு ரினும் மேன்மை சிறந்ததிரு வாதவூரா

4 அந்நகரில்மறையோரில் அருள்புனைமாத் தியர்குலத்தில்
தன்னிகரில் சைவநெறித் தலைவனவன் தனித்தேவி
மின்னனையாள் திருவயிற்றில் மென்கொடிபங் கினன்
அருளால்
தென்னவன் செங்கோன் முதல்வர் திருவாவதா ரஞ்
செய்தார்

5 பொய்மையாம் உலகின்மாயப் பொங்கிருள் அகல அன்
னோர்

தம்மையாழ் நரகில்தள்ளும் சமயதா ரகைமழுங்க
எம்மையாள் உடையானன்பர்இதயதாமரைகளெல்லாம்
செம்மையாய் மலரஞான தினகரர் உதயம் செய்தார்

6 மருவாத நெறிபூண்ட மத்தனெனும் புத்தனுடன்
பெருவாது வென்றுசிவன் பெருநாமம் மிகவளர
ஒருவாத பிறவியில் சென்று ஒருநாமம் உறாதவர்க்கு
திருவாத வூரரெனும் திருநாமம் தரித்தார்கள்

7 தவமெனும் பெரியவித்துள் தங்கியே அங்குரித்து
பவமெனும் பங்கநீங்கிப் பயிலருட் குருத்துண்டாகி
அவமெனும் களைகள்நீங்கி ஆக்குவோன் அருளால் உண்
மைச்
சிவமெனும் விளைவுண்டாக வளர்ந்தது தெய்வச்சாலி

8 தேனினொடு கரும்பினெழும் செழும்பாகும் முக்கனியும்
ஆனின்றும் பாலுமுடன் அளவியுளம் களிகூர
ஈனமிகும் பலயோனிப் பிறவியெனும் பசிதீர
ஞானவமுது உண்பார்க்கு நயந்தமுது நுகர்வித்தார்

9 காயமுடன் உயிர்முயலும் கருமமெலாம் பரன்அருளால்
தூயமனத் துணர்ந்துவினைத்தொகுதியெழுதிநாடோறும்
ஆயதுயர் சகமளிக்கும் யமன்கணக்கில் அரும்பாவத்
தீயசிகை இல்லார்க்குச் சிறந்தசிகை வருவித்தார்

10 குவலய மங்கையைநீடு கோலஞ்செய் தரும்பொன்னும்
நவமணியும் குவைசெய்து நன்குடன்மங் கலநாளில்
தவமணமும் திருநீற்றின் தன்மணமும் தவறாத
சிவமணமும் பெறக்கல்விச் செல்விமணம் புணர்வித்தார்

11 இதுநூல்மற் றல்லதுநூல் இல்லையெனும் அறுசமய
விதநூலும் தலநூலும் விரிந்தபுரா தனநூலு
பொதுநூலென் றுலகனைத்தும் புகழ்மறை நூலும்சைவ
முதுநூலும் தரிப்பார்க்கு முந்நூலும் தரித்தார்கள்

12 மிக்கலையும் செழுநீரும் மதிக்கலையும் மிலைக்குமவர்
அக்கலையும் தோளர்புலி அதட்கலையர் நல்லருளால்
ஒக்கலையும் பிறக்கலையும் ஒழிந்திடுமா கமகலையும்
எக்கலையும்கற்றுணர்ந்தார்ஈரெட்டாண்டெல்லையினில்

13 உழைக்கரனுக் கன்பாகி உண்மையறிந்து உலகமெலாம்
பிழைக்கவருட் கவிபாடும் பெரியவர்தம் செயலெல்லாம்
தழைத்தகலைத் தமிழ்மாறன் தக்கோர்கள் உரைக்க-
வறிந்து
அழைத்துரிமைத் திறம்நல்கி அகலாநண் பாயினான்

14 சங்கோலம் இடும்பழனத் தறம்புடைசூழ் வாதவூர்
எங்கோவின் செய்கையறிந்து இயல்புடையாரெனநாடிப்
பொங்கோத வேலைநிலம் புரந்துபெரும் பகைதுரந்து
செங்கோலை முறைநடத்தும் செழுந் தலைமைத் திறம்
நல்கி

15 தென்னவன் பிரமராயன் என்றநள் சிறந்தநாமம்
மன்னவர் மதிக்கநல்கி வையகம் உய்வதாக
மின்னவ மணிப்பூ ணாடைவெண்மதி கவிகைதண்டு
பொன்னவிர் கவரிவேழம் அளித்தனன் பெருநைநாடன்

16 இந்திரச் செல்வம்போல இயைந்துள இன்பமெய்தி
மந்திரத் தலைமை பூண்ட வண்புகழ் வாதவூரர்
தந்திரத் தொகுதி சூழ தாரகா கணங்களோடும்
அந்தரத் திழிந்து மண்மேல் அமர்ந்த வெண்மதிய
மொத்தார்

17 பெருங்கடனாகநீதி பெருக்கியே தருக்கு நல்கி
இருங்கட கத்தோள் மேல்வைத் தீண்டருள் பூண்ட
கோவும்
கருங்கட னாகமெட்டும் காளமா நாகமெட்டு
பரங்கெட உலகபாரம் பரித்தனர் திருத்தம் மிக்கார்

18 காதலித்தறஞ்செய் வோர்க்குக் கவசமும் கண்ணுமாகி
ஏதிலர்க் கிடும்பையாகி இறைஞ்சினர்க் கின்பமாகி
ஆதுலர்க் கன்னையாகி அரனடிக் கன்புமிக்கார்
பூதலத் திறைவனாணை பொதுவற நடத்துநாளில்

19 பற்பல பொருளாயுள்ள பாசமும் அதனை மேவி
உற்பவ பேதமான உடம்புயிர் ஒடுங்குமாறும்
அற்புத புத்திமுத்தி அளித்தருளாலே மேலாம்
தற்பரன் நடத்துமாறும் உணர்ந்தனர் சைவநூலின்

20 அவ்விய மனத்தினாலே அனைத்துரு வங்கள்கூடி
இவ்வுயிர் பிறந்துமீள இறந்திடும் என்றிரங்கி

வெவ்வெயில் வருத்த முற்றார் மென்னிழல் விரும்புமா
போல்
நவ்வியும் மழுவுமேந்தும் நம்பனுக் கன்புமிக்கார்.

21 தீத்திற வினையினாலே சிறைப்படு உயிரை எல்லாம்
பார்த்தனர் உலகவாழ்வில் பயனிலை என்று தேர்ந்து
கூத்தினர் தன்மைவேறு கோலம்வேறு ஆகுமாபோல்
நீத்தனர் மனதில் முன்போல் நிகழ்தினர் வழுதிநீதி

22 வரமுடன் புவியில் தோன்றும் மறையவர்க் கிறைவர்
உண்மை
தருமுன்னர் வென்னும் நாலாம் சத்திநி பாதமெய்தி
பரமவஞ்சேழுத்தும்ஒன்றாம் பராபரம் உணர்த்தும்ஞான
குருபரன் திருத்தாள் சென்று கூடுதல் வேண்டுமென்று

23 மற்கட விலங்கு தன்னால் வளங்கெழு விளவின்மேவு
நற்கனி கொள்ள வேண்டி நயந்துகல் எறிவார் போலச்
சற்குரு உளனோ என்று நாடுவார் தர்க்கம் எல்லாம்
சொற்கலை ஞானசைவர் தம்முடன் சொல்லல் உற்றார்

24 வளங்கெழு புவியினுள்ள வாவியும் காவுமோடி
விளக்கிசை வண்டு தண்தேன் மிகுபலர் தேடுமாபோல்
உளங்கொள நிமலன் நன்நூல் ஓதினர் உண்மை எல்லாம்
அளந்தறி வுணர்ந்தநீரர் யாவரென்று ஆயுநாளில்

25 மேதகு வனிதையர் எங்கனும் வீசியகவரி அசைந்தெழ
மாதவ முனிவர்கள் அந்தணர் மாசறுகவிஞர் செறிந்திட
ஏதமில் மதிகுல புங்கவன் ஏர்கெழு மணிமுடி யிந்திரன்
ஆதவன் மிசையெழ வந்தரியாசனம் அதனில்இருந்தனன்

25 தாதகி மார்ப நெடும்புவி சார்தரும் ஆழ்கடலின்கரை
தீதில மாதுரகங்கொடு சீர்கெழுமாரியர் வந்தனர்
ஏதமிலாயது கண்டனம் யாமெனவேதொழு தன்பொடு
மேதினி காவலன் முன்சில மேதகு தூதர் விளம்பின்

27 ஏவல் செய்வார்களில் இங்கிவரே பரிவானவர் என்றிகல்
மேவிய தூதரை வன்தினல் மீனவர்கோனும்மகிழ்ந்துபின்
வாவுநன் மாதுரகம் கொடுவாருமெனா உடலும் தனது
ஆவியுமாயரன் அன்புடையார்முக நாடிமொழிந்தனன்

28 மீனவர் கோன்மொழி யின்படி வேணியனேசர் இயைந்
தபின்
ஆனன சோதி டன்புவி ஆள்பவன் வாசிகொளும் படி
வானவி மானமெனுந்திரு வாழ்வுளகோவில்பு குந்துதன
ஈனமி லாநெறி வந்தபொன் ஏழேழு கோடி வழங்கினன்

29 விற்படை வெற்றி மடந்தையு மிக்க மலர்ந்திருவும்பயில்
மற்புய வெற்பினன் அங்கயல் வைத்தவலத்தன்வழங்கிய
பொற்பு மிகுந்த தனங்கொடு பொற்கவனப்பரி
கொண்டிட
நற்பய ணத்தை முயன்றனர் நக்கனை நெக்குணர்
கின்றவர்

30 மெய்த்தவர் உற்ற பெருந்துறைவித்தகரைக்குறுகும்படி
இத்தகு நற்பொருள் கொண்டுநீர் இப்படி யிற்செலும்
என்றலின்
அத்தகு புத்தி ஒழிந்துயிர் அற்புத முத்தி பெறும்படி
உய்த்துள சக்தி யுடன்பொரு ஒத்தனன் உத்தம பஞ்
சவன்

31 பற்றிலர் பெற்ற சிவன்கழல் பற்றின ரைக்கலை வண்
தமிழ்
உற்ற மலைக்கிறை வன்தனை ஒக்கமதித்தருள் கொண்
டலை
விற்றுவ சத்தன் நெடும்படைமிக்கபுலிக்கொடியன்படை
மற்றுள கொற்றவர் தம்படை வர்க்கமும் முற்கொடு
எழுந்தன

32 உக்கிரக நச்சுர கங்களின் உச்சிபணிப்ப அசைந்துடி
வைக்கும் உரத்தன வெங்கய மைக்கரி ஒக்கமலிந்தன
பக்கமும் முற்பிற குந்துடி பற்பல கொட்ட இயங்குவ
தக்க மனதில் விரைந்துள தத்துபரித்திரள் வந்தன

33 கொங்கணர் கலிங்கரொடு கொங்கர் துளுநாடர்
சிங்களர்கள் ஒட்டியர் தெலுங்கரொடு சீனர்
தங்குதிறல் மாளவர் மலாடர் தமில் ஒன்றாய்
எங்கணு மிடைந்தவர்கள் எண்ணமுடி வில்லார்

34 இத்திறம் எழுந்தபடை எங்கணு நெருங்கத்
தந்துபரி மீதுள தமிழ்க்கவிஞர் சூழச்

சித்திர மடந்தையர் திரண்டிரு மருங்கும்
மொய்த்துவர வீணைகுழல் முன்னரிசை கொள்ள

35 கட்டுமளகத்தினர் கனத்துள தனத்தர்
பட்டுடை மருங்கினர் பணிக்கவரிவீச
வட்டமதி வெண்குடை வயங்கமுர செங்கும்
கொட்டவுயர் காளமொடு கோடுகள் கறங்க

36 மிண்டியுள பாடகர் வியந்துகர வாரம்
கொண்டுபுடை சூழஎழில சேர்குழலர் பாடத்
தண்தரள மல்கிய தனிச்சிவிகை மேல்கொண்டு
எண்டிசை மிகப்புகழ் கயற் கொடி இலங்க

37 மங்கல தினத்தினொடு மாளிகை அகன்றே
துங்கமணி அக்கையணி சொக்கரை வணங்கி
அங்குவிடை பெற்றுமறை அந்தணரில் மிக்கார்
திங்கள்மர பிற்குரிசில் கோயிலுழை சென்றார்

38 சென்றுதமிழ் மாறனருள் பெற்றெழில் சிறக்கும்
வென்றிவள வண்புவியில் மேன்மை செல்வார்
குன்றனைய மாடமொடு கோபுரம் நெருங்கும்
நன்றிமது ரைப்பதியை நன்கொடு கடந்தார்

39 நெடுங்குட திசைக்கடன் நிறைந்தொலி சிறந்தே
உளைந்துதய நற்றிசையில் உற்றுவரு மாபோல்
மிடைந்தபதி யும்கடமும் வெற்புமிவை எல்லாம்
கடந்துவதி சென்றுபல காவத மகன்றார்

40 என்றுமுள பொன்றுமுடல் என்னும் நகர்தோறும்
சென்றவழி மாறியொரு தெய்வவழி செல்வார்
நன்றியுள முத்திபெற நம்பர்தம தன்பால்
அன்றுயர் பெருந்துறை அடைந்தபடி சொல்வாம்

உ

# திருப்பெருந்துறைச் சருக்கம்

1 பழமறை முழுதுணர் அந்தணர் பலர்தொழ நடமுயல்கின்றவர்
மழுவுழை கரமிசை கொண்டிட மருவிய கவுரிமகிழ்ந்திட

விழைதகு மிரசித பொங்கொளி விடுமுயர் கயிலை விலங்கலின்
அழகுறு தபனிய மண்டப மதனிடை அருள்கொடிமருந் தனர்

2 மதுமலர் கரமிசை கொண்டுநின் வழிவழி அடியவர் என்றுதம்
மதுமுறை தெரிய மொழிந்தெதிர் முறைமுறை முனிவர் வணங்கினர்
இதுபரன் அருளை வழங்குவ தெனஅரிபிரமர் எழுந்து நம்
பதநிலை பெறவருள் என்றிரு பரிபுர கழல்கள் பணிந் தனர்

3 பரவரு மணிகள் விளங்கிய பணவர வணியரன் அங்கமும்
மருவிய தரள வடந்திகழ் மதிநுதல் மலைமகள் அங்கமும்
இரவியும் மதியு மிருந்தென எதிரெதிர் இலகுதல் கண்டனர்
அரகர சிவசிவ என்றுளம் அயர்வுற அமுதனர் அன்பினர்

4 அடிமொழி மரமென நொந்துபின் அவனியில் விழுவ தொழிந்துநின்
உடனுறை பெருமை வழங்குவ துளதுகொல் எனநினை நெஞ்சொடு
மடலவிழ் கடிகமழ் ஐந்தரு மலர்பல முறைமுறை சிந்திமுன்
இடமி தெனமகிழ் இந்திரன் இமையவர் எவரும் இறைஞ்சினர்

5 திண்திறல் மிகுஞ்சுரிகை யுந்திகழ் பிரம்பும்
கொண்டருகு நின்றுதரு நந்தியருள் கூரப்
புண்டரிக மாதுபுவி மங்கையெழில் சிங்கா
அண்டர்மட வார்களுல கன்னைபுறம் மன்ன

6 துன்னுபல பூதர்கண நாதர்புடை சூழக்
கின்னரர்கள் கந்தருவர் கீதவிசை பாட
மின்னுமுடி மன்னுநதி வீசுதிரை நன்னீர்
என்ன ஒளிர் சாமரை எழுந்தழகு செய்ய

7 இந்தவள மல்குசபை இன்னல்கெட மன்னும்
தந்தைமணி மன்றிலுறை தாண்டவ பதத்தோன்

செந்தமிழில் வந்தசிவ ஞானவமுது உண்டாம்
அந்தமில் அருட்கடலை ஆண்டருள வேண்டி

8 மைத்தகடல் மண்ணவர்கள் தம்முருவில் வம்மென்று
அத்தகைய பக்தர்கண நாதரை அழைத்தே
சித்திதரு தேசிக சிறந்தவடி வங்கொண்டு
உத்தம நெடுங்கயிலை ஓங்கலது நீங்கி

9 கொன்னெறுழி தன்னுருவு கொண்டொருவர் தேடும்
பொன்னடி எனுஞ்சலச மண்மிசைப் பொருந்த
பன்னுமறை வல்லவர் பரிந்தழல் வளர்ப்பார்
மன்னுமொரு தெய்வீக வளம்பதியில் வந்தார்

10 வெம்பிறவி வேலைதனில் வீழ்பவர்கள் எல்லாம்
நம்புசிவ நாமமெனும் நற்புணை பிடித்தால்
எம்பரன் அருட்கரையில் ஏறுதுறை யாமால்
அம்புவி மொழிந்துள பெருந்துறை அதன்பேர்

11 ஈனமில் பெருந்துறை எனும்பதியின் ஞாங்கர்
கானமிகு புன்னைவளர் கந்தமுள சந்தம்
வானமுயர் சண்பக மரந்திகழ் நரந்தம்
தேனின முரன்றெழு செருந்திகள் பொருந்தி

12 கோடுகவி னும்பெரிய கோங்குமிக ஓங்கும்
பாடல நெடும்பலவு பைங்கமுகு தெங்கு
நீடளி இரைந்தெழு நிரைக்குரவு சூதம்
ஏடவிழ் செழுங்கவிர் இலஞ்சிகள் மலிந்து

13 மாக்கவின் மீதும்கலப மஞ்ஞைசிறை அன்னம்
கூக்குரல் செயும்கரிய கோகிலம் நெருங்க
மீக்குலவு மந்தியினம் உந்துதொறும் மேன்மேல்
ஆர்க்குஞிமிறு எங்கணும் அடர்ந்திசை தொடங்க

14 வீழ்ந்தநற வத்துளி விழிப்புனல தாகச்
சூழ்ந்துமுரல் வண்டினி இசை தோத்திரம் தாகச்
தாழ்ந்துமலர் ஏந்தியிறை தன்திருமுன் நின்றே
வாழ்ந்துருகு மன்பரென மன்னுமொரு பூங்கா

15 வாய்த்தவள மிவ்வகை வயங்குமதன் நாப்பண்
ஏத்தகு தவச்சினைகள் எங்கணும் நெருங்க
மீத்திகழ் அறக்குழை தழைத்துமிளிர் மெய்ம்மை
பூத்தறிஞர் போல்நெறிழில் பொருந்துமோர் குருந்தம்

16 ஆர்வமுடன் வந்தினம் அகப்பட அழைக்கும்
பார்வையென மாந்தர்படி வங்கொடு நடந்தார்
ஏர்வரு குருந்தமொடு இலங்குமுயர் காவில்
சேர்குவ மெனத்திரு வுளத்தருள் சிறந்து

17 வந்துதிகழ் தொண்டர்புடை சூழமகிழ் வெய்திக்
கொந்தலர் மலர்பொலி குருந்தடி பொருந்தி
அந்தமுதல் இல்லவர் அருள்தமிழ் உரைப்பார்
பந்தமறும் எல்லையது பார்த்தினி திருந்தார்

18 பொங்குபுனல் யாறுபல போய்விழு கடற்போல்
எங்குமுள நல்லுயிர்கள் எய்தும் ஒளியாகும்
திங்களணி வேணியர் இருப்ப அடி சேரும்
துங்கமறை யாளர்பலர் துன்னுநெறி சென்றார்

19 செம்மனத்து வாதவூர்ச் செல்வர் தமைப் புல்லாத
பொய்மயக்கம் தரும்பாசம் போலமலர்ந் தனபூவை
எம்மயக்கும் ஒழிப்பவருக்கு இனிப்பிறவிஇல்லை எனக்
கைம்மறிக்கும் அவர்போல மலர்ந்தன அங்குளகாந்தள்

20 விற்காட்டும் கரத்துமதன் அம்பாகி வெம்பிறவி
யிற்காட்டி யாவரையும் ஆதலம்செய் எம்பாவம்
நிற்காட்டி ஒழிப்பவர்யார் நீயருள்க எமக்கென்று
பற்காட்டி நிற்பவரபோல் மலர்ந்தனமென் பனிமுல்லை

21 பொற்புடைய தமிழ்பாடும் புண்ணியரைப் பொருளி
னுமாம்
சிற்பரன் உண்மையில் விழிக்கும் திருநயனம் சேர்தலி
னால்
நிற்பதுவாம் பிறவியிது என்றிரங்கி நீள்மரங்கள்
கற்பனையை உணர்ந்து மலர்க் கண்ணீர்கள் பொலிந்
தனவால்

22 முன்னைவினைப் பெருங்காடு மூடுறஜம் புலவேடர்
துன்னியலைத் திடர்செய்யும் துன்பவழி செல்லாமல்
உன்னருநற் சிவஞான உபதேசம் தமிழ்செய்வார்
இன்னவகைத் துளகானம் எய்தியவந் நெறிநீங்கி

23 விரிந்தகட லுக்கிடை விழுந்திடர் உழந்தே
திரிந்தவர் நயந்துகரை சென்றணுகு மாபோல்
வருந்தவுழல் வித்தவினை ஒத்தருள் வசத்தால்
அருந்தவர் பெருந்துறை மருகினில் அணைந்தார்

24 இந்தவுல கஞ்சிவன் இருக்குமுலகாகச்
சிந்தையருள் கொண்டு திருவாசகம் உரைப்பார்
பந்தமற அந்தமில் பரங்குறுக என்றே
வந்துள பெருந்துறையின் வண்மையுரை செய்வாம்

25 மாத்தியர் குலத்தலைவர் வன்பிறவி எவ்வம்
திர்த்துலக ஐயர்அருள் செயுமிடம் என்றே
தோத்திரமு ரைத்துமிசை வந்துசுரர் சிந்தும்
பூத்திரள் உதிர்ந்தவகை போன்றதலர் பொங்கர்

26 பேறறிந்து தவமுயல்வோம் என்று பெருந்துறை நாடி
ஆறியங்கி இளைக்குமவர்க்குஅளிக்கஎதிர்நிற்பவர்போல்
கூறுமின்ப நிழல்செய்து குறையாத பக்தியுடன்
நீறணிந்து சோறேந்தி நின்றனதுன் றியகைதை

27 நிலந்தனில்வந்து ஒருகுருந்த நீழலிலே எவ்வுலகும்
கலந்தபொருள் இருந்தடி கண்டுமனம் களிப்பெய்தி
துலங்கியதம் கண்ணீரும் சொரிந்துகரம் குவித்துமுகம்
மலர்ந்தபெருந் தவர்போல மலர்ந்தன புண்டரிகங்கள்

28 ஆன்றபயன் பிறர்நுகர அகத்தினிமை உளதாகத்
தோன்றியநல் அறிவினர்போல் துவன்றிஎழுந் தனகன்னல்
ஏன்றகுல மாதர்தமது இறைவர்முகம் நாடிலவர்
வான்றகைய நிலையென்ன வளைந்துவிளைந் தனசெந்நெல்

29 முலைக்கிரியும் கருங்கூந்தல் மொய்வனமும் அரணாகக்
கொலைப்புருவ வெஞ்சாபம் குனிந்து விழிக்கணை ஏவி
நிலைபடுநற் பொருள்தேட நினைந்துதவ நீள்நெறியில்
தலைப்படுவார் தமைவருத்தும் தன்மையினர் வயன்மாதர்

30 இன்னவகை மன்னிவளர் காவும்எழில் மேவும்
கன்னல்வய லுந்திகழ்தல் கண்டுவகை கொண்டே
இன்னலுடலம்பெற இனிப்புவியில் வாரா
மன்னவர் பெருந்துறை வளம்பதியில் வந்தார்

31 மாதவர் திரும்பதி புகுந்துழி மருங்கே
நாதனுறை தண்டலையில் நன்குபுனை தொண்டர்
ஓதுறு சிவாகம ஒலிப்பொலிவு கேளா
யாதிஃது அறிந்துரைமின் ஏவலர்கள் என்றார்

32 சென்றவர்கள் வந்துசிவ பக்தர்பலர் சூழக்
கொன்றைமுடி வைத்தகுண வெற்பைநிகர் ஒப்பார்
நின்றதொர் குருந்தமர நீழலில் இருந்தார்
என்றலும் மகிழ்ந்தனர் இனிப்பிறவி இல்லார்

33 ஏவலர் உரைத்தமொழி கேட்டரனை எய்தும்
ஆவலொடு காவினை அணைத்து அகம் மலர்ந்து
மேவிய மணிச்சிவிகை விட்டினி திழிந்தே
தேவர்பர வும்பரமர் தெய்வசபை கண்டார்

34 அண்டமெல்லாம் கடந்தபொருள் பகருநூலின்
அளவுரைப்பார் தெளிந்தயர்வார் ஆய்வாராகித்
தொண்டுபடுமடியார்கள் நூற்றொன்பால்மேல்
தொண்ணூற்றொன்பான் என்னும் தொகுதிசூழ
ஒண்டொடிபங் கினனிநப்ப விருப்பால் எய்தி
உடனுரைத்துச் சிவஞான முணர்வார் அன்பு
மண்டிய நெஞ்சினில் வணங்கி வணங்கார்போல
மந்திரியாம் மேன்மையுடன் வந்துநின்றார்

35 உருத்திரநற் றிருமணியை இலங்குகாதில் ஒண்சிரத்தில்
கந்தரத்தில் ஒளிகொள் மார்பில்
கரத்திலணிந் திலகுதிரு முண்டம் அங்கிக்கண்கரந்த
நன்னுதல்மேல் கவினச்சார்த்தி
திருத்திகழும் வேதியனார் அம்பொன் மேனி
திகழ்வதுகண்டு அகமகிழ்வார் செங்கைமீது
பொருத்தமுறும் புத்தக மேது ஐயா என்னப்
பொய்மையிலாச் சிவஞான போதம் என்றார்

36 என்றலுமே சிவமேது ஞானமேதிங் கிலங்கிடும்
போதமேதியம்பு வீரேல்
அன்றுவட நீழலில்வந் திருந்தார் நீரே
அடியேனும் உமக்கடிமை யாவேன்என்ன
நின்றசிவம் ஒன்றதனைத் தேர்தல்ஞானம்
நிகழ்போதம் தேர்ந்ததனை தெளிதலாமென்று
ஒன்றியநற் பொருள்வினவி நிற்பார் சிந்தை
உருகும்வகை உரைசெய்தார் உவமையில்லார்

37 உத்தமர் இன்னவாறிங் குரைத்தலும் உவந்து நாலாம்
சத்தினி பாதமெய்தும் தன்மையர் ஆதலாலே
அத்திரு மன்றுளாடும் ஐயரிங் கென்னை ஆள
இத்திரு மேனி கொண்டார் என்பது மனதில் எண்ணி

38 மின்னினு நிலைமையில்லாவிழுப்பொருள்யாவும் வேண்டேன்
உன்னடி யடைந்து நாயேன்உறுபவம்ஒழித்தல்வேண்டும்
என்னையின்று அடிமை கொள்வாய் எம்முயிர்க்கிறைவா என்று
முன்னுற வணங்கி நின்றார் முகமெல்லாம்கண்ணீர்வார

39 இவ்வகை புகன்று முன்னோன் முன்னுற இரங்கிநிற்ப
திவ்விய தரமேயான செய்தியர் என்றுநாடி
அவ்வடியவரின் மிக்கார் ஒருவரிவ் அடிமை தன்னை
வெவ்வினை அகற்றியாள வேண்டுமென்று இறைஞ்சி நின்றார்

40 கருப்புக நினையார்தம்மேல்கண்ணருள்செய்து நெஞ்சில்
பரப்புற மிதித்தல் வேண்டி எடுத்தபொற் பாதம் கொண்டு
திருப்புனை மறையோர் போற்றத் தில்லையம் பலத்தே நின்ற
அருட்பரா னந்தவாரி ஆதலின் அதற்கிசைந்தார்

41 அத்தகு பகலோன் முன்னர் அலர்செயும் அம்புசாதம்
ஒத்தவர் தம்மைநாடி உன்னையின் றடிமை கொள்ள
இத்தலத் தணைந்தோம் நீமுன் இயற்றிய தவத்தினாலே
சித்தம திரங்கல் வேண்டாம் எனத்திரு வாய்மலர்ந்தார்

42 வந்துநான் வறுமை யுற்றேன் மாற்றென திலம்பா டென்று
சிந்தையா குலமுற் றான்கைச் செழும்பொருள் ஈதல் செய்வாற்கு
இந்தநாள் அளிக்க வேண்டும் எனவிதி இன்மையாலே
அந்தநாள் இந்தநாள் ஆகஅடிமை கொண்டருளஎண்ணி

43 அத்தகு தொண்டர்க் கெல்லாம் அதிபராம் அவரை நோக்கி
இத்தவ முடையோன் எய்தும் இடரொழித்து ஆழ்வ திந்நாள்
வித்தக இதற்கு வேண்டும் கருமம்நீ விரைவில் செய் கென்று
உத்தம வடிவம் காட்டும் உண்மையார் உரைத்தல் செய்தார்

44 முன்னவன் புகன்றவாறு முயல்குவம் என்றே அந்த
மன்னிரும் தவத்தின் மிக்கார் வகைமலர் தெரியலாலும்
பொன்னிடை அழுத்திமுத்தம்புனைந்தபல்பட்டினாலும்
அந்நெடும் காவி ஞாடடாங்கானபூங் கோயில் செய்தே

45 செய்தநற் கோயிலூடு சிறந்தவாசனமும் சேர்த்து
மெய்தகு தொண்டர்க் கெல்லாம் மிக்கவர் இறைவற் சார்ந்து
கைதவம் உடையார் நெஞ்சில் கனவிலும் காணநில்லா
மைதரு களத்தாய் கோட்டம் சமைந்தது வாய்ப்ப என்றார்

46 ஆயிடக்குடபால் வெற்பில் ஆதவன் கரந்து ஞாலம்
பாயிருள் பரந்த பின்பு கடிகையோர் பதினைந் தாகி
மேயநல் உயிர்கள் எல்லாம் விழித்துயில் பயிலுங் காலை
தூயதொண்டர்க்கு மாயை தொலையுநல் அமையந் தோன்ற

47 இங்கிவன் தன்னை ஆளும் காலம் ஈதென்று தெய்வ
சங்கம தகன்று முன்னோன் மஞ்சனச்சாலை சார்ந்து
குங்குமம் புழுகு சாந்தம் குழைத்து மெய்முழுதும் பூசிக்
கங்கையின் நன்னீர் வாசம்கலந்தமென் பனி நீராடி

48 மெய்ப்புனல் துகிலால் மாற்றி விலைமதிப்பில்லா நல்ல
ஒப்பருஞ் செம்பட்டாடை உடுத்துயர் கோட்டம் எய்தி
செப்பிள் முலையாள்பாகன் தென்திசை அதனை நோக்கி
அப்பெரும் தவிசின் மேலங்கு அழகுற இருந்த பின்னர்

49 அண்டரும் மலர்தூய் ஏத்தும் அன்பரும் தூநீராடி
வெண்துகில் புனைந்துநீறு விளங்கிய மெய்யராகி
முண்டக மலர்த்தாள் வைத்து முத்திதந் தருளமேனி
கொண்டவர் திருமுன் சென்று குறிகியங் குவகைகூர்ந்து

50 விண்ணவர் அதிபன் பொற்றான் விளக்கியர்ச்சனை முன் செய்து
தண்ணறும் பனிநீர் தோய்ந்த சாய்ந்தமெய்ம் முழுதும் சாத்தி
வண்ணமென் கழுநீர்மாலைவளம் பெறஅணிந்துபின்னர்
கண்ணுறு பரிவுதீரக் கண்டுள மகிழ்ச்சி கொண்டு

51 பருப்புடன் நாளிகேரப் பழஞ்செழுந்துருவல் சேர்த்துச்
சருக்கரை கலந்து பாலில் சமைத்தநல் அமுது தன்னைத்
இருத்திய கனகக் கால்மேல் இலங்குபொற்கலத்தின்மீது
விருப்பொடு படைத்து நெய்யும் மிக்கமுக்கனியும்பெய்து

52 மாலயன் வலாரி மற்றை வானவர் பிழைக்க முன்னாள்
ஆலமுண் டவனேநல்ல அமுதமுண் டருளாய் என்று
சீலமா மகிழ்ச்சி பொங்கும் சிந்தையின் உரைப்பக்கால
காலனும் உண்டு நீரால் கரமலர் கழிஇய பின்னர்

53 வெள்ளிலை பழுக்காய் நல்கி விரைதரு தூபதீபம்
கொள்ளுதல் தேசு காட்டிக் கோலநல் நீறுசாத்தித்
தெள்ளொளி விளங்குமாடி திருத்தமுன் திகழ்வித் தெங்கும்
உள்ளவர் முடிமேல் ஓங்க ஒண்குடல் கவித்தல் செய்து

54 கற்றைவெண் கவரி செம்பொற் காம்புநீ டாலவட்டம்
பற்றியன் புடனேவீசிப் பரிவுடன் அடியார் சூழப்
பொன் தவி சிடையே மேவும் புண்ணியன் திருமுன்பைம் போது
உற்றகை உடனே வாதவூரர் அங்கிருந்த பின்னர்

55 மந்திரம் பதங்கள் வன்னம் புவனங்கள் தத்துவங்கள்
ஐந்துநற் கலைகள் என்னும் அறுவகை அகற்றி அந்தச்
சிந்தனைக் கரிய மேலைச் சிவத்துடன் அறிவு சேரத்
பந்தனை ஒழிவார் தம்மேல் பரிந்தருட் பார்வைசெய்து

56 எவர்க்குமெஞ் ஞானமாம் அஞ்செழுத்தையும் உணர்த்த
வேண்டி
அவத்தொழில் அகற்றி ஆழும்சிவத்தைமுன்னர்கமாறித்
தவப்பெரு வடிவம் கொண்டார் தண்டமிழ்பாடும்
அன்பர்
செவிப்புலின் வழியே சிந்தையுறத் திருவாய் மலர்ந்தார்

57 விரவும் அன்பொரு வடிவுகொண்டு அணைவார் விளித்த
பார்வையின் விளக்கின்முன் இருள்போல்
சுருதி செந்தமிழ் ஆக்கிய மொழியார்
தொலைவிலாதவெந் துயர்ப்பவம் ஒழிந்து
பரவி மென்பதம் பணிபவர் படிமேல்
படிய வீழ்ந்தனர் வாழ்ந்தனர் பரிவால்
மருவுமிங்கிவர் சென்னியில் இருதாள் மகிழ
வைத்தனர் லதிநதி முடிப்பார்

58 மன்னு முன்னுள உயிர்க்கரணங்கள் மாய்ந்து
பொய்முதலறிவு இழந்தருளால்
துன்னு மின்னருள் சிவகரணங்கள் தோன்றலால்
சுக வறிவதில் தோன்றிச்
சென்னியின் மிசை மேவியாபாதம் திருந்து
கண்ணிணை சேர்த்திரு கரத்தால்
உன்னல் செய்திடும் இதயமேல் அணைவித்து
உவகை கூர்ந்து மெய்யுணர்ச்சியில் எழுந்தார்

59 மேலை அத்தலத் திந்திரன் இமையோர்
மீதெலாம்பொழி விரைமலர் மழையே
போல இத்தலம் புதையவந் துதிரப்
பூதரும் கணநாதரும் புகழச்
சாலநற்குணம் புனையுநல் லடியார் தங்கள்
செங்கையில் ஒலியலும் தயங்கும்
ஆலவட்டமும் கவரியும் இருபாலசைய
மாமுனிக்கணம் அடிவணங்க

60 இருந்த அப்பெரும் கருணையன் எதிரே எய்தி
அன்புடை இயல்பினர் இறைஞ்சிச்
சிரந்தனில் தமதிருகரம் குவியாகச் சிறந்த
பேரருள் நிறைந்த சிந்தையாராய்
வருந்தி இத்தலம் அகழ்ந்துமேற் பறந்தும்
மால்அயன் தொழ அரியநீ அடியேன்
அருந்து யர்பவ மகற்றவிங் குருவம்
ஆவதேஎன அழுதுநெஞ் சழித்தார்

61 ஐயனே எனை ஆண்டருள்புரியும் ஆதியேஉமை அணிமழு
விருக்கும்
கையனே கொடுங்காலனை முனியும்காலனே இருகண்ணி
னுள் மணியே
செய்யனே அடிபோற்றி என்பெரிய செல்வமே அடி
போற்றி பொய்யினர்தம்
பொய்யனே அடிபோற்றி எவ்வுயிர்க்கும் போதமே அடி
போற்றி என்றழுதார்

62 அற்றைஞான்று இருள்வைகறை எனும்போது அணைத
லும்
பரமன் அருட்குரு வடிவம்
துற்றசாந்துடன் முயங்குசெய் கழுநீர்த் தொடையலின்
பொறாதெனத் துளங்கிக் சுமை
சுற்றுமான்கரத்து ஏந்திய இறைவன் கவின்கொள்
மார்பணி மலர்த்தொடை கழித்தங்கு
உற்றவான்துயர் அகன்று நல்லடியாருடன்
விளங்கினர் களங்கம் ஒன்றில்லார்

63 வாதவூருறை இறைவர்தம்பெரிய மாயை போல்இருள்
மாய்ந்துபின் அவர்பால்
போதமாகிவந்து உறுசுடர் விளக்கம்போல
ஏயினன் புணரியில் தோன்ற
வேதநாதர்தம் இருபதம் இறைஞ்சு மெய்ம்மையாளரை
வேறுகொண்டு இருந்தங்கு
ஓதும் ஆகமத் தறிவரும் பொருளை உரைக்க
வேநினைத்தார் அறமுரைத்தார்

64 களிம்பு தோய்ந்தசெம் பெனவுனை மருவும் கருமை
கூர்மலம் கண்டது கலக்கும்
பளிங்கு போன்றதுன் தன்மையம் மலத்தின் பற்றினால்
உடல் பலஎடுத் துழன்றாய்
வளங்கு லாம்புவனந் தொறும் செயுமுன்
வல்வினைப்பயன் வருமுறை நெறியே
அளந்து நாம்தர நுகர்ந்துமேல் நுகர்வும் ஆக்கியே
திரிந்தன மனஅழுக்கால்

65 செய்து ளோர்பெறும் வினைப்பயன் ஒருவர் சேர்க்க
வேண்டுவதில்எனின் இதுமேல்
எய்துமேலிது நுகர்வதென்று அறிவதில்லைநீ
வினையெனில் சடம் அறியா
உய்த்தலாகிய நன்னெறி உணரா உனையும்
உன்வினைப் பயனையும் உணர்ந்து
மைதவாமலம் ஒழித்தருள் அகலா வாழ்வு
நல்குவம் யாமென மதிப்பாய்

66 எவர்க்கும் இம்மலம் சேரவிங்கு ஒளியாது
இருப்ப தென்னில் இன்னல்கொள் பிறவித்
துவக்கெனும் தமதிருவினைப் பயனும் துலைபுகும்
பொருளென நிறை நிகர்த்தால்
அவர்க்கு நம்பதம் கொடுத்து இடர் ஒழிப்போம்
அது இலாதவர் அழுங்கி அவ்வளவும்
பாவப்பெருங்கடல் வீழ்வர் தம்பருவம்
பார்க்கும் எம்மையும் தம்மையும் பாரார்

67 என்று கூடும் இப்பருவம் என்றியம்பில்
யாமிருந்துள இடம்தொறு இறைஞ்சி
நன்றி சேர்சிவ புண்ணியம் புரியும்
நன்மையால் இது நணுகும் என்றறிநீ
மன்றி லானஎம் இயல்புனக் குரைக்கின்
மாசிலாவுரு மூன்று அவற்று அருவம்
ஒன்று பேரொளி ஒன்று அருவுருவம்
ஒன்றுதான் அருள்உருவம் என்றுணர்வாய்

68 இந்த மூன்றினில் உருவுனக்கறிய
இசைந்த பேரருள் இயம்பும் இவ்வுருவம்
வந்து யாவரும் பணிவதற் கெளிதாய்
வரமெலாந்தர வரும் அருவுருவம்
பந்தமாகிய மலவிருள் அகற்றும்
பரிதியாயுள பல்லுயிர்க் குயிராய்
அந்தமாதிகள் அளப்பரும் ஒளியாய்
அமலமாகும் அவ்வருவெனும் உருவம்

69 ஆவலால் எமக்காமலர் மரங்களாக்கல்
அம்மலர் பறித்தல் அம்மலரால்
தாவிலாவகை தார்பலசமைத்தல் தணப்பில்
எம்புகழ் சாற்றல் அன்புடன் நாம்
மேவும் ஆலயம் அலகிடல் மெழுகல் விளங்க
நல்விளக்கிடுதல் எம்மடியார்க்கு
ஏவலானவை செய்தல் இச்சரியை இயற்ற
வல்லவர்க்கு எம்முல களிப்போம்

70 கந்தவர்க்கமும் கிளர்மணப் புகையு கவின்கொள்
தீபமும் புனிதமஞ்சனமும்
கொந்த விழ்ந்தநன் மலரும் மற்றுளவும் கொண்டு
மாயையின் குணங்கள் ஒன்றிலராய்
ஐந்து சுத்திசெய்து அகம்புறம் இறைஞ்சி
அங்கியின் கடன்கழித்து அருள்வழி நின்று
இந்த நற்பெருங்கிரியை அன்புடனே
இயற்ற வல்லவர் எம்மருகிருப்பார்

71 முக்குணம்புலன் ஐந்துடனடக்கி மூலவாயுவை
எழுப்பி இருவழியைச்
சிக்கெனும்படி அடைத்தொரு வழியைத் திறந்து
தாண்டவச் சிலம்பொலி யுடன்போய்த்
தக்கவஞ்செழுத்து ஓரெழுத் துருவாம் தன்மை
கண்டருள் தரும்பெரு வெளிக்கே
புக்கழுந்தினர் எமதுருப்பெறுவார் புவியில்
வேட்டுவன் எடுத்தமென் புழுப்போல்

72 பரந்த வான்கலை முழுதும் ஆமகநூற் பகுதியும்பல
சமயசாத்திரமும் தெரிந்து தேர்ந்ததில்
வாய்த்த முப்பொருளின் செய்தியே பொருளென
மனந் தெளிந்து
புரிந்து போந்துள சிற்றறி வனைத்தும் போக்கி
அவ்வறி வெனச் சிவபோதம்
விரிந்து தோன்று நெஞ்சுடைய வித்தகரே
மேன்மையானநம் மெய்ப்பதம் பெறுவார்

73 உருப்பொலாதவர் இழிகுலத்தவர் நல்லொழுக்கம்
இல்லவரென்று நம்மளவில்
விருப்பிலாதவர் எனினும் மெய்ந்நீறு மிக்க
சாதனவேடமும் கண்டால்
தரிப்பிலாது சென்று எதிருற வணங்கி
தக்கபோனக மளித்தவர்க் களிதர
இருப்பர் தாமவர்க் கடியவர்க்கு கடியார்
என்பர்யான் எனதெனும் செருக்கறுப்பார்

74 விரிந்த சஞ்சித வினைகள் அன்புடன்நாம்
விழிக்க வெந்தன விரவுமிப் பிறப்பில்
பொருந்தும் வல்வினை உடலுடன் அகலும்
புந்திசேர் அருள் வருவினை போக்கும்
அருந்துயர்ப் பொருள் உயிர்உடம்புனவே அல்ல
நம்மனவாகும் இங்குனைப் போல்
இருந்த நங்குரு வடிவைநின் கருத்தில்
இருத்துவாய் பொருள் இதுவென மொழிந்தார்

75 அத்தனார் திருவாய் மலர்ந்தருளும்
அமல வாசகம் கேட்டகம் மகிழும்
பத்தனார் தமக்கெழு பிறப்பறுக்கும்
பாதமிதுரப் பணிந்தெதிர் எழுந்து
பித்தனான என்பிழைதனக் கிரங்கும்
பிஞ்ஞகா பேதமை உடையேன்
முத்தனாக மெய்காட்டினை எனவே மொழிந்து
அழிந்து கைம்முடிமிசைக் குவித்தார்

76 என்னவாக முன்னினைந்துள பொருளும்
இல்லதாகிய உடலமும் யானும்
நின்னவாக நின்னருள்கொடு நினைந்தேன்
நின்மலா எனநின்று நின்றுருகா
மன்னு தானைதம் மேலணி கலன்கள்
மதுரைமீனவன் வான்பொருள் இறையோன்
முன்னதாக வைத்திறைஞ்சினர் அறஞ்சேர்
முதல்வனார் முகமலர்வு கொண்டிருந்தார்

77 பெருந்துறை உறைவார் அன்பு பெறுந்திருவடியராகி
இருந்தவர்தம்மில் மேன்மை எய்தினர் முகத்தைநாடி
திருந்திய பொருளி தெல்லாம் திருப்பணிக் களியும் மேலாம்
அருந்தவர்க்குதவும்இல்லா தலர்ந்தவர்க்கருளும் என்றார்

78 தம்பெரு முதல்வர் சொல்லும் தகுமொழிப்படியேஉள்ள
செம்பொருள்யாவும் அன்பின் திறத்தினர் தொலைத்த பின்னர்

அம்பரன் அளித்தஞான மருந்தினை அருந்திப்பாச
வெம்பிணி அகற்றுமிந்த வித்தகர் முத்தரனார்

79 திருத்திகழ் சிவிகைக்கீழும் சிறந்த பொற்சிவிகைமேலும்
வரத்திரு மேவுதானை மன்னவன் என்ன வந்தார்
உருத்தெரியாத நீறும் கோவண உடையும் குஞ்சி
விரித்துளசிரமும் தூநீர்மிகப்பொழி விழியுமானார்

80 அன்புடன் நோக்கிநிற்பர் அழுவர் தொழுவர் வீழ்வர்
இன்புற எழுவர் பின்பால் ஏகுவர் இரங்கிமீள்வர்
நன்பகல் கங்குல்காணார் ஞானநல்லறிவே கொண்டு
கொன்புனைபித்தர்பாலர்பிசாசர்தம்கொள்கையானார்

81 மன்னுமிந் நிலைமை உற்றார் வன்படைச் சுற்றமாகி
துன்னினர்எல்லாம்வந்துதோன்றலைத்தொழுது நோக்கி
தென்னவன் முனியா முன்னம் செழும்பரித்திரள் கொண்
டேகல்
என்னும தொன்றும் தேரா இதுபழு தென்றிரங்கி

82 ஐயநீர் வருதல் வேண்டும்என்றவர் அழைத்தபோதில்
தெய்வ நீறணிவார் தானைத்திறத்தினர் தம்மைநோக்கி
மையலாம் உணர்வின் மிக்கீர் யாவர்நீர் மாயாபேதப்
பொய்யெலா உரைத்தல் வேண்டாம் போமினி அகல

83 என்னிவர் புகல்வதென்றே யாவரும் நின்றிரங்கி
துன்னுநற் தானைவீரர் தம்முளே துயரமெய்தி
பன்னுநம் மொழியும் கேளார் பரிவிலர் என்றுநீங்கி
தென்னவற் கின்னவாறு செப்புவோம் என்று சென்றார்

84 சென்றவர் வைகைநாடன் திருந்தவை முன்னர் எய்தி
வன்திறல் மன்னபோற்றி மாமதுரேசபோற்றி
என்றுபின் வாதவூரர் எய்திய செய்திஎல்லாம்
ஒன்றிய கவற்சிகூரும் உளத்தொடு ஓதலுற்றார்

85 நின்பெயர் புனைந்தோராகி நின்னொடும் கருமஞ்செய்
வார்
என்பவர் செய்கைதம்மை எங்ஙனம் யாங்கள் சொல்
வோம்
பொன்பொலி மௌலியாய்நின் புடைவிடை கொண்டு
போந்து
மன்பெரும் துறையாம் அந்தவளநகர் புகுந்தபின்னர்

86 அந்நகர் மருங்கோர் காவில் அணைந்துள குருந்தில்ஈசன்
தன்னடி யார்களாகும் தாபதர் பலருஞ்சூழ
மன்னியங் கொருவர் மேலாம் மாதவ வேடம்பூண்டு
முன்னுற இருத்தல் கண்டுமுடிவிலா மகிழ்ச்சி கொண்டு

87 அங்கவர் தாமும் தாமும் அன்பொடு சிலசொற் கூறி
சங்கர சிவனேபோற்றி என்றவர் தாளில் வீழ்ந்து
செங்கரம் குவித்து சென்னிசேர்த்துவந்தனைகள் செய்து
பொங்கொளி மணிப்பூணாடைபொருளெல்லாம்உவந்து நல்கி

88 குறைவிலா ஆடைநீத்துக் கோவண முடுத்துச் சென்னி
நறமயிர் விரித்து நீற்றை மெய்யெலாம் நயந்துபூசி
முறைமை யன்றிவைதாமென்று மொழிந்த எம்முகமும் பாரார்
நிறையழி பித்தரானார் நிருப என்றிலைஞ்சி நின்றார்

89 கேட்டலும் மதுரைமாறன்கிளர்ந்தமெய்முழுதும்வேர்வு
காட்டிட வெகுளி பொங்கிக் கண்கனல் வடிவமாகி
வாட்டிறன் மன்னர்க்கின்னவண்மையர்உளரேல் வையம்
ஈட்டுறு செல்வம் தானைஎவையில என்று நக்கான்

90 அடுபரிகொள்வான் ஈந்த அரும்பொருள் கவர்வதாகக்
கெடுமதி உரைப்பார் தம்சொல் கேட்டுமால் எய்தினானைக்
கொடுமைகொள் இந்தஓலை கொடுத்தொரு தினத்து நம்பால்
கடுநடைத் தூதரேகிக் கைக்கொடு வம்மின் என்றான்

91 ஏவலில் சென்றதூதர் எழிற்பெருந் துறையில் எய்தி
ஆவலில் சிவன்தாள் ஏத்தும்அண்ணலைக் கண்டிறைஞ்சி
மேவலர்க் குருமேறன்ன வெந்தொழில் வேந்தன் வாய்மை
காவலர்க்கதிபன் மாறன் திருமுகம் காண்க என்றார்

92 அற்றமில் கொள்கை மிக்கார் அரன்திரு முகமதன்றி
மற்றொரு திருமுகம் காணமனமிலர் இதன்மேலன்பு
பற்றிலர் பிறிதோர் ஓலைப்படியெடுத் துரைமினென்ன
உற்றதன் இயல்பு வல்லான் எழுதியதுவந்து சொல்வான்

93 தென்னவன் எழுதுமோலை தென்னவன் பிரமராயன்
என்னுநம் அமைச்சர் காண்க எல்லையில்தனம் கொண்
டேகிக்
கொன்னுறு பரிகொளாமல் கோவணம் கொண்டீர்ஈது
மன்னர்தம் கருமம்செய்வார் வண்மையென்று உவகை
உற்றோம்

94 வையக மன்னராகி வாழ்தலின் மனைகள் தோறும்
எய்திய உதரத்தீயால் இரப்பது பெருமை என்றும்
மெய்தகத் தம்மை யாண்ட வேந்தரைப் பிழைத்து வேறு
செய்வது பலிக்குமென்றும் தேர்ந்தநூல் துணிவும் கண்
டோம்

95 மன்னரை அடைந்து வாழ்தல் வஞ்சநஞ்சமிழு நாகம்
தன்னுடன் மருவிவாழும் தன்மை என்றுணர்த்தி ராயில்
துன்னுமிவ்வோலைகாணும்பொழுதுநம்தூதர்தம்மொடு
இன்னகர் வருகமாறன் எழுத்தென இயம்பிநின்றான்

96 மீனவன் எழுதும் ஓலைகேட்டபின் மின்பால் அன்பர்
ஆனவர் அடியார் எம்மை அடிமையா வுடையரல்லால்
தானெனக் கண்ணல் என்றும் தன்னையான் பிழைத்தே
னென்று
மாநில மன்னன சொன்ன தென்னெனமனத்தில் எண்ணி

97 அந்தகன் எழுதும்ஓலை கொண்டவன் தூதர்தாமும்
வந்தெமை அணுகமாட்டார் உடையவர் மதுகையாலே
வெந்தொரு கணத்தில் வீழமேவலர் புரங்கள் செற்றார்
தத்தமர் ஒருவர்க்கு அஞ்சத்தகுவரோ என்றுசாற்றி

98 போயரன் திருத்தாள் ஏத்திப் புண்ணிய வடிவேபோற்றி
ஆயிரம் சுடிகைப் பாம்பை அலரென முடித்தாய்போற்றி
மாயிரு ஞாலம்காக்கும் மன்னன் எழுதும் ஓலைப்
பாயிரம் இதுகேள் என்று மொழிந்தனர் பழுதிலாதார்

99 கேடிலா இயல்பினாரும் கேட்டிளமுறுவல் பூத்துப்
பாடலால் ஏத்தும் தெய்வப் பான்மையர்க் குவந்து சொல்வார்
பீடிலா தவர்போல் உள்ளம் பேதுறல் ஒழிதி இந்த
நாடெலாம் மதிக்க நாமே நற்பரித்திரள் கொண்டேகி

100 தென்னவற்கு அளித்து மீள்வோம் செழுந்திறல் தூத ரோடு
மன்னனைக் குறுகி என்பால் வரவிடும் ஓலை தன்னால்
முன்னுறக் கடிதுவந்தேன் ஆவணித்திங்கள் மூலம்
என்னும்மத் தினத்தில் இங்கே எய்துநற் பரிகள்என்பாய்

101 தொன்மதிக் குலத்து மன்னன்துயர் செய்வான் என்று சற்று
நின்மனக் கவற்சிகொள்ளா தொழிகென நீறுசாத்திப்
பொன்மணிக் கலன்கள் மிக்க பூந்துகில் பிறவுநல்கி
மன்மனத் துவகைகூர மந்திரிப் பான்மை செய்து

102 தென்திசைக் கதிபன் தன்பால் சென்றிது கொடுத்துக் காண்டி
என்றுமா மணியும் நல்கி ஏகென விடுத்தபின்னர்க்
கன்றகல் புனிற்றா என்னக் கசிந்திரு கண்ணீர் வார
நின்று நின் நிறைஞ்சி ஐயா நீத்தியோ என்று நொந்து

103 விழிப்புனல் சிந்தச்சிந்த விண்ணவன் விடைபெற்றேகி
சுழிப்புனல் கொழிக்கும்வாவி சூழ்பெருந் துறையைநீங்கி
வழிக்குறு துணையாயுள்ள வள்ளல் ஐந்தெழுத்தும் ஓதிப்
பழிச்சுறு தூதரோடு மதுரையம் பதியில் போனார்

104 மதுரை மன்னவன்முன் ஏகிமனமிலா வணக்கம் செய்து
கதிர்மதிச் சடையோன் ஈந்த கவின்கொள் மாமணிகைந் நல்கி
எதிருற நின்றபோதில் இன்புற வழுதிநோக்கி
விதிமுறை இருமிங்கென்ன இருந்தனர் விரிந்த நூலார்

105 விலைமதிப்பில்லா அந்தமேதகு மணியைப் பல்கால்
நிலையுற வியந்து நோக்கி நெஞ்சினுள் உவகை எய்தி
தலைவனைச் சிந்தையுள்ளே தரிப்பவர் தம்மைநாடி
சிலைமுகக் கரத்துமன்னன் செய்ததே துரைமின் என்றான்

106 மலக்கொடும் பகையை வெல்வார் மன்னவன் முகத்தை நோக்கி
நிலத்தொளிர் புகழின் மிக்காய் நீதருநிதி கொண்டேகி
இலக்கணக் குறைபாடின்றி ஈரிநகதியு முண்டாம்
குலப்பரி இனங்கள்யாவும்விலைக்குறக் கொண்டபின்னர்

107 அரும்பரித் தொகுதி எல்லாம் அணிதிகழ் மதுரைக் கேகப்
பொருந்திய தினமேதென்னப் பூசுரர் விதியில் தேர்ந்து
திருந்தும் ஆவணியாம் திங்கள் மூலநல்தின மாமென்ன
இருந்தனன் அதனை நாடிப் பெருந்துறை என்னுமூரில்

108 நின்படைச் சுற்றமெல்லாம் நீடுமிந் நகருக்கெய்தும்
அன்பினில் கடிதுமீண்டார் அவர்பெறும் படிறுகூற
மன்பெரு முனிவால் ஓலை வரைந்தனை அதனால் வந்தேன்
கொன்பரித் திரளிங் கெய்தும் கூறுமந்நாளில் என்றார்

109 என்பது கேட்டுமாறன் உம்பிடை எமக்குண்டான
மன்பெரு நண்புநீங்க நினைந்துள மனத்தார்சொல்லால்
அன்பிலர் போல ஓலைஎழுதினம் அதுகொண்டின்னே
துன்புறல் ஒழிவீர் என்று நன்மையாய்த் தொன்மைகூறி

110 கொன்னொடும் கோயிலூடு கொடுபுகுந் துரிமை கூர
தன்னருகிருத்தி மேன்மைதக்கநற் கலைகள் நல்கி
பொன்மணிக் கலங்கள் யாவும் புனையு மென்றளித்து முன்போல்
மன்னுள கருமம்கூறி மனையிடை ஏகும் என்றான்

111 தம்பெருமனையில் சென்று தாபதர் வைகப் பின்னர்
நம்பரிச் சமூக மெய்து நாளிரண் டென்னு முன்னர்
வெம்படைச் சுற்றம் நீங்கி இருந்துழி விரிந்த நேமி
அம்புவிக் கரசன் தன்முன் அமைச்சரில் ஒருவன் சென்று

112 போற்றியெம் பொருநை நாட போற்றியென்று இறைஞ்சிக்கூறும்
மாற்றமுண்டென்று நின்பேர் புனைந்துள வரிசை பெற்றோர்
சாற்றரும் துரகம் கொள்ள நேரியன் தலத்தில் சார்ந்து
நீற்றினன் அடியார் கையில் நின்பொருள்யாவும்ஈந்தார்

113 நின்பெருந் தூதரேகி எழுதுநின் ஓலைகாட்டும்
பின்புவந் துனது சீற்றம் ஒழித்துயிர் பிழைக்க எண்ணி
அன்பினர் போல நின்முன் குறுகி ஆவணி மூலத்தில்
நன்பரித் திரளிங் கெய்தும் நானுனக் களிப்பன் என்றார்

114 மற்றவர் மொழிந்த எல்லாம் பொய்யுரை மன்ன என்னச்
சொற்றமிழ் வைகைநாடன் தூதரைச் சுழித்துநோக்கி
அற்றமில் சுருதிவல்லார் அருள்பெருந் துறையில்எய்தி
உற்றவெம் பரிகள் உண்டேல் ஒல்லைவந் துரைமின் என்றான்

115 அருந்திறல் தூதரேகி அத்தினம் கடிது மீண்டு
வருந்திமுன் புகுந்து மன்னர் மன்னனை வணங்கி நின்று
பெருந்துறை என்னுமூரும் பிறவுள பதியும் தேடிக்
கருந்தடம் களிற்றுவேந்த கண்டிலம் பரிகள் என்றார்

116 பாங்குநின்று இன்னவாறு பகர்தலும் வெகுட்சி எய்தி
ஈங்குநம் கருமம் செய்வன் என்றிடர் செய்வான் தன்னைத்
தாங்கரும் துயரம் செய்து தகைந்துநம் தனத்தை எல்லாம்
வாங்குமின் தண்டலாளர் என்றிகல் மன்னன் சொன்னான்

117 மன்பெருந் தண்டலாளர் மறையவர் குலத்தில் மிக்கார்
முன்புநின்று இனைய சொல்வார்முனிவுடைமுகத்தராகி
நன்பரித் தொகுதி கொள்ள நயந்துமக்கு அந்நாளீந்த
தன்பொருள் எல்லாம் வாங்கச்சாற்றினன் சிற்றமன்னன்

118 மற்றிதன் பயன்யா தென்னின் மன்னவன் விடுப்ப வென்றி
உற்றவன் தூதர் வல்லை ஒண்பெருந் துறையில் எய்திக்
கொற்றவெம் பரிகள் காணார் மீண்டனர் கோவும் நும்பால்
பற்றியநேசம் விட்டான் பாரினி ஆளவொட்டான்

119 தனமினித் தருதல் வேண்டும் என்றுவன் தண்டலாளர்
சினமுடன் புகலவாளா இருத்தலும் தீமைகூரும்
நினைவுடன் அமைச்சர் வாழ்வில் நீக்கிமெய் வாக்கின் மன்னர்
தனியுற வலிதில் காவல் சாலையில் ஆக்கினார்கள்

120 சற்றுமுள் தளர்விலாத தன்மையில் வாதவூரர்
மற்றவர் செலுத்தச் சென்று வன்சிறைச்சாலை எய்த
நற்றவர் வருத்தம் காண நாணமுற் றொளிப்பான் போன்று
பொற்றடந் தேரில் வெய்யோன் போய்க் குடபால் மறைந்தான்

121 கள்ளுலா மிதழிமாலை கவின்பெற முடித்தவேணி
வள்ளலார் ஏவச்சென்று வழுதிமேல் வெகுட்சி கொண்டு
வெள்ளைவான் பிறைப்பல் தோன்ற விழுங்க அங்காத்த பேயின்
கொள்ளிவாய் அனையவண்ணம் கொண்டது செக்கர் வானம்

122 தெண்டிரை யுலகில் நல்ல திறத்தினர்க் குற்றதீங்கு
கண்டுணர் சிறியோர் போலநகைத்தன கவின் கொள் முல்லை
ஒண்டமிழ் வாதவூரர்க் குற்றதையுணர்ந்து துன்பம்
கொண்டவர் இதயம்போலக் குவிந்தன கமலமெல்லாம்

123 தென்னவன் வைத்தகாவற் சிறையினில் உறையும் தெய்வம்
அன்னவர் ஒருவர்காணில் நாணமுற் றயர்வார் என்றே
இன்னல் கொள்மனத்தாள் போல இருட்கரம் கொண்டு கூடல்
பொன்னகர் உள்ளார் கண்கள் புதைத்தனள் கங்குல் மங்கை

124 மன்பதை துரப்பதிந்த மந்திரித் தலைவர்க் குண்டாம்
என்பதும் உளதோ அந்தோ என்செய்தும் என்றிரங்கி
அன்பரை அகன்று நெஞ்சால் அழலெழ உயிர்த்து மாழ்கும்
துன்புடை மடவார் போலத்துயின்றிலர்மதுரையுள்ளார்

125 செம்மனப் புனிதர்க் குண்டாம் தீங்குதம் கிழமையாலே
ஐம்முகக் கடவுள்ஈன்ற அறுமுகற் குரைக்கு மாபோல்
விம்முசெஞ் சூட்டுமுட்டாள் வியன்சிறைச் சேவல் எல்லாம்
தம்மனை இடங்கள்தோறும் தழங்கின புலரிக்காலை

126 சிற்பர முணர்ந்து ஞானச் செந்தமிழ் ஓது நீதிப்
பொற்பினை யுடையோர் இன்னல் பொறாது சென்றுரைப்ப போல
விற்பொலி சடிலன் சூலவேலவன் ஆலவாயில்
அற்புதன் கோயில் முன்றில் ஆர்த்தன சங்கமெங்கும்

127 எம்மிறை பரியிலேறும் நாளிதோ என்று பார்க்கும்
செம்மலர் மடவா ளிட்ட திலகசிந் தூரம் போல
அம்மலை மிசையே வைகி ஆடகக்கிரிசூழ் போந்து
மைம்மிகு கடன்மேல் வந்து முளைத்தது வாலபானு

128 மண்கெழு செங்கோல் வேந்தன் வைகறை எழுந்துநீரால்
கண்கழல் விளக்கிமூழ்கிக் கண்ணுதல் பூசை செய்து
தண்கதிர் முத்தமாலை தரித்துநற் கலன்தள் தாங்கி
விண்கிளர் செம்பொற் கோயில் முகப்பினில் வீற்றிருந் தான்

129 வன்திற லாளர்எல்லாம்வாம்பரித்திரள்கள்கொள்வான்
சென்றான் அடியார்க் கீந்த செழும்பொருள் தாரீராகில்
இன்றுமை வருத்தம் செய்தும் என்றெறி வெயிலினூடு
நின்றிடு மென்ன நின்றார் நீள்பெரும் புகழின் நிற்பார்

130 அங்குநின் றிளைப்பார் தம்மையாண்ட ஆண்டகையை உன்னி
இங்குணர்ந் திலையோ நாயேன் இடும்பை என்றிரக்கம் எய்தி
சங்கவெண் குழையாய் மன்னன் தனக்கு வாம்பரிகள் ஈதல்
நங்கடன் ஆகுமென்று நவின்றசொல் பொய்மையாமோ

131 ஊனுடம்புடைய வாழ்க்கை ஒழித்துனக்கு அடிமை என்று
மாநிலம் புகலா நிற்ப வந்துனை அடைந்தேன் தன்னை
மீனவன் தன்பால் மீள விடுத்தனை வேலை நீருள்
ஆனபின் அந்நீர் ஆற்று நீரென ஆவ துண்டோ?

132 அறத்தனிச் செல்பாக! அன்பிலேன் நின்பால் என்று
வெறுத்திடின் அடியேற் கிங்கு வேறொரு துணையுமில்லை
செறுத்தவர் புரங்கள் எல்லாம் செற்றவர் அடியான் தன்னை
நிறுத்தினர் வெயிலில் என்றால் நின்புகழ்க்கேற்றமாமோ

133 வானநாடவர்க்கு மேலோய் வந்துனக்கடிமை இப்போது
ஆனநான் இடும்பையுற்றால் ஆருனக்கு அடிமையாவார்
செறுத்தவர் புரங்கள் எல்லாம் செற்றவர் அடியான் தன்னை
நிறுத்தினர் வெயிலில் என்றால் நின்புகழ்க் கேற்றமாமோ

133 வானநாடவர்க்கு மேலோய் வந்துனக்கடிமை இப்போது
ஆனநான் இடும்பையுற்றால் ஆனருக்கு அடிமையாவார்
நானெனா மனத்தார் சொல்லும் நல்லுரை அன்றி நின்ற
ஈனனா மொருவன் சொல்வ தேறுமோ உளத்தினென்றார்

134 அவத்தொழில் புரியா மேன்மை அன்பருக் கன்பு செய்து
பவக்கடலிடை விழாமல் பரிந்தருட் பார்வை நல்கித்
தவப்பெரு வடிவம் கொண்டு தானளித்தாளும் ஐயர்
செவிப்புலன் புகுந்த அன்பர் செப்பிய மாற்றமெல்லாம்

135 தாம்படு தோளிபாகன் கண்ணுதல் அண்ணல் என்பார்
தாம்படு துயரம் எண்ணி அத்துயர் தணிக்க வேண்டித்
தேம்படும் அலங்கல் மார்பில் தென்னவன் தனக்குத் தெய்வ
வாம்பரி அளித்தல் சொல்வாம் வல்வினைப் பகையை வெல்வாம்

* * * * *

திருப்பெருந்துறைச் சருக்கம் முற்றிற்று

# குதிரையிட்ட சருக்கம்

1 தந்தை எஃபவர் மைந்தர்வாதை தவிர்ப்பதேகடனாதலால்
அந்தம் இன்றியகாதல் அன்பர்அழுங்கல் கண்டபின் நரியெலாம்
வந்து வெம்பரி யாகவும் பரிவீரர் வானவராகவும்
சிந்தை கொண்டனர் அந்தமால்விதி தேடுவார் மதி சூடுவார்

2 தேசிலாநரி வந்துவந்து திரண்டு வெம்பரியானபின்
ஆசிலா இமையோர்கள் தாமுமமைந்த சேவகராயினார்
மாசிலாமணி மன்றர் ஆரியவாசி வணிகர் போலவே
ஏசிலாவுரு மாறினார் மறை இவுளியின்புற மேறினார்

3 சேடுகொண்டு திரண்டு வீரர்இரண்டு ஞாங்கர்சிறக்கவே
ஊடெழுந்துகள் இம்பர் எங்கணும் உம்பரும் கிளர் வெய்தவே
கோடுடன் துடிவிம்மநீடிய கூடல்சூழ்மதில் வாயில்வாய்
ஆடல் வெம்பரி கொண்டு சென்றனர் ஆதியார் உமை பாதியார்

4 அங்குநின்றவர் சென்றுநிம்ம அலங்கலானை வணங்கியே
எங்கணும்துகள் பொங்கிவிம்மஎழுந்துகாகள மார்ப்பவே
திங்கள் வெண்குடை மன்னஆரியதேசவெம்பரி இன்றுநம்
துங்கவன்மதிலின் புறத்த துவன்றிவந்த எனச்சொனார்

5 வாசியின் திறன்வந்தவென்றலும்வாதவூரறைஐயர்மேல்
நேசம்வைத்தவர் தம்மை முன்னர் அழைத்து நீழ்கலையாதிதந்து
ஆசில் வெம்பரிகாண வம்மினெனா எழுந்து எதிரடையலார்
கூசுதன்படை சூழவே இறை கோயிலின்புறம்எய்தினான்

6 வண்டுபடி அலங்கல் நெடுந்த டந்தோள் மாறன்
மணிச் சிவிகை மீதேறி மதுரை மூதூர்
கண்டிரு கண் களிக்கும்வகை ஆலவாயில்
கடவுளிடும் பரிவரவு காண்பான் எண்ணிச்
செண்டுவெளி தனில் போந்து பனிநீர் தோய்ந்த
செங்கழுநீர் மதுமாலை சிறந்து தூங்கும்
தண்தரள மணிப்பந்தர் நிழற்கீழ் அம்பொன்
தவிசின் மிசை இனிதிருந்தான் தானை சூழ

7 முத்தமிழின் திறநவிலும் புலவர்சூழ முதுமறையோர்
மங்கலச் சொல் முறையிற்கூறக்
கைத்திகழும் வளைபுலம்பக் கலன்கள் மின்னக்
கன்னியர்கள் இருமருங்கும் கவரிவீசக்
கொத்துலவும் பலமலரின் வாசந்தோய்ந்து
குலவுமிளம் தென்றல்வர மாதர்பாட
மெத்துமணி முத்தமெனும் அணிகள் பூண்டு
வெண்மதியின் தோற்றம்போல் வீற்றிருந்தான்

8 மங்குல்படி தடம்புரிசை வாதவூரர் மனங்களிப்ப
விழிகளிப்ப மறுவிலாத
திங்களெனும் தன் மரபு விளங்க என்றும்
திருநீறும் ஐஞ்செழுத்தும் சிறந்து மல்கச்
சங்கினுடன் காகளங்கள் முழவம் ஆர்ப்பத்
தயங்கி எழுந் துகள் உயர்வான் தன்மேல் செல்ல
துங்க நெடும் கடல்பரந்து வருதல் போலத்
துவன்றிவரு பரித்திரளின் தோற்றம் கண்டான்

9 அங்கிளர் மதுரையம் பதியில் ஆவணித்
திங்களின் மூலநாள் செறிதினத்தினில்
எங்கணும் நீறுமஞ் செழுத்தும் ஓங்கிடச்
சங்கரன் இடும்பரிச் சமுகம் வந்தவால்

10 தூத்திரள் மணிகெழு சோதி மாமுடிப்
பார்த்திபன் விழிநலம் பருக வீதியில்
கூத்தினர் செயலெனக் குலாவு வாம்பரிச்
சாத்தினர் வரும்பெரும் தன்மை கூறுவாம்

11 கட்டிய கரிகையர் கவின்கொள் வாளினர்
பொட்டணி நுதலினர் பொலஞ்செய் மேனியர்
பட்டுடை மருங்கினர் பவள நீள்வடம்
விட்டொளி விளங்கிய வியன்கொள் மார்பினர்

12 புன்மயிற் பீலியர் புலியின் தோலினர்
பின்மலர்ப் பாசிலை பிணைத்த குஞ்சியர்
வன்மொழி குரலினர் வயங்கு தூணியர்
வின்மலி கரத்தினர் வெறித்த பார்வையர்

13 பொன்னியல் குழையினர் பொலன்கொள் மாலையர்
பன்னிறச் சாத்தினர் பணைந்த தோளினர்
சென்னியில் கதிர்மணி இலங்கு சேடனைப்
பின்னிவிட் டுளதெனப் பிணைத்த குஞ்சியர்

14 தாங்கிய சுரிகையும் தயங்கு வேல்களும்
வாங்கிய சிலைகளும் கணையும் வாளுமாய்
ஞாங்கரில் இவர்வர நாப்பண் தோன்றினார்
தேங்கிய நதிமதிச் சென்னி அண்ணலார்

15 நச்சுரக உச்சிமணி நண்ணுமொரு வண்ணக்
கச்சிடை விசித்துள கவின்கொள் உடையவளும்
பச்சைமுழு நீலமொடு பன்னிற வடஞ்சேர்
செச்சைநிற மன்னிய திரண்ட இருதோளும்

16 ஒப்பரிய சட்டையும் உடுத்திலகு பட்டும்
தொப்பியும் முகத்திடை துலக்கமுளராகிச்
செப்பரு நலங்குலவு செண்டொருகை கொண்டே
இப்படியில் இப்படிவம் யாவர் உளர்என்ன

17 கட்டுபடி மீதின்மணி கச்சைமணி முன்பின்
இட்டஇரு பக்கமணி யின்னொலி புலம்ப
பட்டிலகு பக்கரை பனிக்கவரி எட்டும்
விட்டொளி விளங்கு மொருவெண் பரியிலேறி

18 வீசுகவ ரித்திரள் மிடைந்தொளிர மீதே
தேசொடு கவித்துள செழுங்குடை வயங்கப்
பூசல்புரி வெம்பரி பொருந்துபடை யூடே
மாசில்குல ஆரியரின் மன்னனென வந்தார்

19 மன்னவனும் இங்கிவர் வருந்தகைமை கண்டே
தன்னுள மகிழ்ந்திரு தடங்கண் இமையாமே
அன்னமெனும் ஊர்தி நெடு மாலரனை அல்லாது
இன்ன எழில் யாவருளர் என்றதி சயித்தான்

20 பண்ணிய தவத்துள பயன்பரியின் மீதே
நண்ணிய தெனத்தமிழ் நயந்தனர் வியந்தார்
எண்ணிய முடித்தனர் எனக்கருதி நின்றார்
புண்ணிய மறைத்தமிழ் புகன்றதிரு வாயார்

21 தூயசுடர் வேல்பல சுழற்றியெதிர் செல்வார்
வாயொலி விளைவிப்பார் இகல்வாளினை விதிர்ப்பர்
நேயமொடு தம்மிலணி நின்றுசமர் செய்வார்
ஆயினர் அரண்புடையில் ஆனபரி வீரர்

22 நீறுசிவ நீதிநிலை நிற்க உலகாளும்
மாறனும் மகிழ்ந்து தவமன்னரை அழைத்தே
கூறரிய வாரிய குலேசர் ஒருவீதி
ஏறும்வகை சென்றுரையும் என்றினிது சொன்னான்

23 என்னிவன் மொழிந்தனன் எனத்தமிழ் இரங்கா
மன்னிய அருந்தவரும் வாண்முகம் மலர்ந்தே
கன்னலை நலங்கொள்கனி யைக்குறுகி நெஞ்சால்
முன்னுற வணங்கிவிழி முத்துதிர நின்று

24 மன்றல்மல ரோனும்நெடு மாலுமுரு வேறாய்
அன்றுமுதல் இன்றுமறி யாதவகை நின்றாய்
வென்றிவிடை அன்றியுயர் வெம்பரியின் மீதே
இன்றுனை வணங்கமுனம் எத்தவம் முயன்றேன்

25 வந்தபடி இவ்வுரு வணங்குமிது அல்லால்
அந்தவடி வாகிலுனை யாரறிய வல்லார்
இந்தவகை கண்டடி யவர்க்கெளிமை என்றே
சிந்தைதனில் அன்பொடு தெளிந்தவுல கெல்லாம்

26 என்றுமுக மன்பல இயம்பி அருளாலே
வென்றிபுனை மீனவன் விளம்புமொழி சொன்னார்
கொன்றைமுடி யாரும் அதிசைந்து கொடைமாறன்
நன்றியொடு காணும்வகை நற்பரியு கைத்தார்

27 மன்னரவ பந்தமுடன் வட்டநெடு வீதி
என்னுமிவு ளித்தொழில்கள் யாவுமினி தேறி
உன்னுமன வேகமென ஓடுமுயர் பாய்மா
நன்னட மிடும்படி நடாத்திஎதிர் வந்தார்

28 வெம்பரியின் அன்னலை வியந்துதமிழ் மாறன்
கம்பமுடி எய்தவொரு கைவிரல் கழற்றா
அம்பொன் விலையில்லதொர் அருங்கலை அளித்தான்
எம்பரமர் செண்டிஞ் மிசை ஏற்றுநகை செய்தார்

29 ஏற்றவொண்கலையை நேசம்எய்தினான்ஒருவன்சென்று
காற்றென விரைவின் எய்திக் கடிதுதன் கரத்தில்வாங்கிப்
போற்றிலன் முடியின்மீது புனைந்திலன் என்று மாறன்
நீற்றினன் மறைப்பினாலே நெஞ்சிடை வெகுட்சி
கொண்டான்

30 வெளிப்பட அரியமேனி விண்ணவன் கண்ணும் நெஞ்சும்
களிப்புற வருதல் கண்டும் கண்டிலன் கன்னிநாடன்
ஒளித்துலகெங்கும் நிற்போன் உறுபவம் ஒழித்து ஞானம்
அளித்திடின் அன்றி யாவர் அவன்திறம் அறிய வல்லார்

31 எண்டிசை மன்னர் அன்பால் ஈந்தமென் கலைகள்யாவும்
செண்டிடைக் கோடல் அன்னோர் தேயநல் இயற்கை
என்றே
வண்டமிழ் வாதவூரர் மாமது ரேசன்நெஞ்சில்
கொண்டிடு முனிவுதீரக் குறைந்துமுன்நின்றுசொன்னார்

32 நலத்தகும் இந்த நீர்மை கேட்டபின் நயந்து மன்னன்
கலக்கமில் இவுளி நன்நூல் கற்றவர் தம்மை நோக்கி
இலக்கண விதியில் உள்ள இரும்பரி இழிவு மேன்மை
துலக்குற நும்மிநாடி எம்முடன் சொல்லு மென்றான்

33 சொற்றிகழ் துரகநூலின் துணிபொருள் உணர்ந்துளோ
ரும்
கொற்றவெம் பரிகட்குள்ள குற்றமும் குணமும் நாடிப்
பொற்றடங் கிரியின்மீது பொருகயல்பொறித்து மீண்ட
வெற்றிகொள் மன்னர் மன்னன் முன்னிவ விளம்பலுற்
றார்

34 தாவினைச்சந் திரகழியா மண்டா வர்த்தம்
தண்டையடி யிற்சுழியா முடலின் பக்கம்
மேவுசுழி கௌவகமாம காகா வர்த்தம்
மேன்மைதிகழ் முன்வளையச் சுழிதானாகும்
பரவுசெழும் கேதாரியடியிற் சேர்ந்த
பயனில் கொடுஞ் சுழிகேசா வர்த்தமாகும்
பூவமரும் கச்சையிற் பட்டடையே யாகப்
புகன்றசுழி யிச்சுழிகள் புணராவாகி

35 கொம்புகன்னம் திருகுகன்னம் நஞ்ச பாதம்
கொள்ளிக்கால் வெள்ளைக்கண் தீனிகுன்றா
வெம்புதழல் சுடலைமுகம் பரனேர்கண்ட
மண்டபப்பாழ் விலங்கிபல வண்டமாதல்
செம்பொறியா மக்கினிசித்திரக்கண் மூன்று
சிறந்தினிய மட்டிற்பால் அறுபால் என்றே
அம்புவியோர் மொழிந்தபழு திவையும் இன்றி
அடிநாலிற் குரமிரட்டை யாகாவாகி

36 சிரம்தனில் இரண்டுசெழும் துளைப்பில் நான்கு
சிறந்தவுரந் தனிலிரண்டு நுதன்மேல் ஒன்று
குரவமிசை நின்றசுழி ஒன்றினோடு
குலவிய வீரைந்துசுழி குறையாவாகி
நரிவெருகு கருங்காகம் அலகைஓரி
ஞாளிசெழும் கேழல் எனும் குரல்இன் றாகி
விரவுபெறும் திரைவேலை மங்குல் சங்கம்
விடை முழவம் போல்முழக்கம் மிகவுண்டாகி

37 உருத்திகல்செய் புலியுளியம் கழுதை செந்நாய்
ஒண்பூனை நரியினுடன் கரிய காகம்
தரித்தவழற் புகைநிறமும் புனையா வாகித்
தருக்கிமருத் தெனும்கவனத் தன்மை எய்தி
விரித்தகதிர் வெண்தரளம் திங்கள் நீல
மென்கமலத் தாதுசெழும் கனகம் காயா
வரத்தமலர் நல்லபசும் கிள்ளை போல
அமைந்த ஒளிதயங்கிய அங்கத்த வாகி

38 நெற்றியகன்று உயர்குரவம் படைத்து வெண்மை
நிறைந்துதமில் ஒத்திலகும் எயிற்றவாகித்
துற்றநறும் கந்தமிகச் சிறந்து நாவும்
சூதவிளம் தளிர்போலும் அருணம் தோய்ந்தே
உற்றவிரண்டு இமைமயிரும் தொகையுண்டாகி
உக்கிரமாம் விழிப்பார்வை உடையவாகி
முற்றுமெயில் தசையின்றி உள்வளைந்து
முக்கோண மெனத்திகழு முகத்தவாகி

39 உளையினுடன் தலைமயிரும் நிற மொன்றாகி
உரத்தினுடன் கழுத்துரக படமே போன்று
வளைசிறந்த தொனிபரந்து குவிந்துள் வாங்கி
மண்டலமுண் டாயுரம்கொள் குரங்கள் சேர்ந்து
கிளைகொள்நரம் புகள்கரந்து தசைதா னொன்றிக்
கிளர்முழந்தாள் நெளிந்துபதம் கெழும லின்றி
நெளிமுதுகு புனைந்து தொடை திரண்டு தண்டை
நீண்டுடலம் நெய்த்தநிற நீர்மையாகி

40 மிக்கசெழு மறைநாவில் கமலநாதன்
விழிப்புனலில் விண்ணோர்கள் எண்மர் தம்பால்
மைக்கடல்மேல் அமிர்தத்தில் அங்கிமீதின்
மல்குகருப் பையிலுலரக வண்டந் தன்னில்
தொக்கஎழு பேதமெனு இவற்றில் தோன்றும்
தொன்மையவாய் ஈரிரண்டு துணைத்தாள் நெற்றி
ஒக்கவெளுக் கும்பரிகள் உளவாய் வானில்
ஒண்புனலில் செல்லுநெறி உளவுமாகி

41 மங்காளன் சாரங்கன் கங்காநீலன்
மௌவழகன் கொங்காளன் சன்னசம்பான்
குங்குமச்சோரன் கரியான் நீலன் சாரன்
குலவுமள்ளான் உரஞ்சிவந்தான் நல்லான் பொல்லான்
தங்குகருங் கால்சம்பான் என்று கூறும்
தன்மையுள பன்னிறமும் புனைந் சாதித்
துங்கமிகும் பரியிவை யென்று அவற்றின் தன்மைத்
தொன்மை உரைத்தரசனை முன்தொழுது நின்றார்

42 நற்பரியின் இயல்புணர்ந்தோர் இன்னவாறு
நவின்ற மொழி கேட்டு நயந்து வெள்ளி
வெற்பனைய விடையேறி அளிக்கும் தெய்வ
வெம்பரிகள் யாவும் விலைமதித்த பின்னர்
பொப்புடைய தன்பொருள்மேல் எண்மடங்கு
போதுதலால் பொங்குமகிழ்வு எய்தி மாறன்
தற்பரனை முகநாடிக் கயிறு மாறித்
தருக துரகத்தொகுதி தம்மை என்றான்

43 காத்துல கனைத்தும் உய்யக்கண்ணருள் செய்யும் நீதிப்
பார்த்திவன் கருமம் செய்வார் பற்றியங் கரத்தில்வாங்க
சாத்தவர் தம்மில் ஆங்கோர் சால்பினர் கயிறு மாறிச்
ஈத்தனர் பந்தியூடு சேர்த்தனர் இவுளி எல்லாம்

44 திண்டிறல் கெழுவு நேமித் தென்திசைக்கிறையும் செய்ய
வண்டமிழ்க் கிறையும் காண வந்திடு திசையி னேசிப்
பண்டைநல் படிவமாகிப் பணிந்துவின் ணவர்கள் சூழக்
கொண்டலைப்பொருவுகண்டர்குலவுதம்கோயில்
புக்கார்

45 வாய்ந்தன பரிகள் நும்மால் என்றெழில் வாதவூரின்
வேந்தரை மனையிலேக விடுத்துள மகிழ்ச்சி கூர்ந்து
சார்ந்தமெய்த் தகைமையோரும் தானையும்சூழ ஏகி
ஆய்ந்த நற்றமிழில் வல்ல அரசனும் கோயில் புக்கான்

46 அத்தினம் அகல மாலை அனைதலும் பரிகள் எல்லாம்
நித்தன தருளினாலே நெடுங்குரல் நரிக ளாகி
மெய்த்தமிழ் மதுரைமூதூர் விழித்துயில் ஒழிந்திரங்கத்
தத்தமில் உடன்று கூடித் தனித்தனி களித்து நின்று .

47 நின்ற நின்ற நெடும்பரி யாளர்மேல்
சென்று வெம்பகை செய்து வெருட்டியே
துன்றுகின்ற துரங்கம் ஒருங்கொடு
கொன்று நின்றுயர் கூவிளிக் கொண்டவால்

48 வரைசெய் கோபுர மாடம் நெருங்கிய
அரச வீதியும் ஆவண வீதியும்
முரசவோசை முழக்கொழிந் தேமிகந்
குரைசெய் வாய்நரிக் கூக்குரலானதால்

49 பாடி ஆரணம் போற்ற மன்றில் பயின்று
ஆடி யார்விளை யாட்டின் புதுமையால்
ஓடி யாரும் ஒளித்திட வென்றொரு
கோடி யானது கூவு நரிக்குலாம்

50 துங்க மாறன் தொகுபடை வெங்கொலை
தங்குமாயுதம் தாங்கி எதிர்க்கவே
எங்கு மான நரிகளெல் லாம் கொடும்
சிங்க மாயமர் செய்யத் தொடங்குமால்

51 நீடுவாடை யிடம்தொறு நின்றணி
கூடு வார்மிகக் கூவி வெருட்டுவார்
ஓடு வாரொளித் தோடிப் புகுமிடம்
தேடு வாரெதிர் சென்றமர் செய்குவார்

52 எங்கள் ஆருயிர் காத்தருள் இன்றணி
திங்க ளாயெனத் தெய்வம் பராவுவார்
அங்க பாடம் அசைத்தரண் செய்குவார்
மங்கு லாடும் மதில்தலை ஏறுவார்

53 நற்றவச்செயல் நல்கில தானதோ
கொற்றவன் செய்ய கோல்கொடி தானதோ
இற்றி தன்பயன் என்னென இன்னணம்
உற்றிரங்கினர் கூடல்உளோரெலாம்

54 துயவன் துரகத் தொழிலாளர்கள்
கோயிலின் கடைக் கூக்குரல் செய்துபோய்
மாய வெம்பரி வந்தவெலாம்நரி
ஆயவென்று அரசற்கெதிர் கூறினார்

55 மாக்கள் ஓசையும் வாம்பரி ஓசையும்
கூக்கு லாவு குறுநரி ஓசையும்
மீக்கொள் மாமுடி மீனவன் தன்செவித்
தீக்கொள் வேலைச் செருகிய தொத்தவே

56 இந்த வாறொலி கேட்டிரு கண்தழல்
சிந்த ஆகம் சிறுவெயர்ப் பெய்திட
வந்த மாறன் வெகுட்சிகண்டு அண்ணலார்
வந்த மாய நரிப்படை மாற்றினார்

57 பொன்கொள் நாடன் புனைந்த நலந்திகழ்
மின்கொள் ஆரம் விளங்கிய மார்பினான்
தன்கணாகி நடப்பவர் தண்டல்செய்
வன்கணாளரை வம்மெனக் கூவினான்

வேறு

58 நரியினில் தொகுதி எல்லாம் நற்பரித் திரள்களாக்கும்
சரிதியைக் கொணர்திர் என்னத் தாடொழுது அவர்க
ளோடி
இருபிறப்புடையராகி இனிப்பிறப் பில்லார் தம்மை
விரைவினிற் குறுகி நும்மை அழைத்தனன் வேந்தன்
என்றார்

59 சித்தருக் கன்பு பூண்ட சித்தரும் முறுவல் செய்து
நித்திலத் தொளிபோல் மின்னு நீறெனும் சாந்துபூசிப்
பத்தருக்கு ஏவல் செய்வார் பதமலர் முடியிற்சூடி
முத்தமிழ்ப் பொருநை நாடன் முன்புசென் றருகுநின் றார்

60 மூட்டெழும் அழல்போல்மன்னன் முனிவுடைமுகத்தனாகி
ஈட்டுநம் பொருள்கள் எல்லாம் இரப்பவர் தமக்கு நல்கி
நாட்டுள நரிக ளெல்லாம் நற்பரி யாக்கி நம்முன்
காட்டினர் இவர்செய் மாயம் கண்டிரோ அமைச்சர் என்
றான்

61 தன்தொழில் வழுவினோர்கள் தமக்குறுதுயரம் செய்தல்
வன்திறல் அரசர்நீதி ஆயினும் மறைவல் லாளர்
சென்றுயர் தவத்தில் நிற்பார் தெரிவையர் விருத்தர்
பாலர்
என்றிவர்க்குறுகண்செய்வதுஎம்மனோ இயல்பன்றென்று

62 தண்டல்செய் வன்கணாளர் தங்களை நோக்கி நங்கண்
கண்டிட முன்னில்லாமல் கடிதினில் இவர்க்கொண் டேகி
மண்டழல் வெயிலினூடு வளைப்பினில்நிறுத்தி நம்பால்
கொண்டுள தனங்கள் எல்லாம் குறைவற வாங்கும் என்
றான்

63 வன்றிறல் ஏவலாளர் மற்றவர் தமைக் கொண் டேகி
ஒன்றிய வளைப்பினூடு நிறுத்தலும் உலகோர்போற்றும்
நன்றிகொள் வாத வூரர் நரியெலாம் பரிகளாக்கித்
தென்திசை நிருபற்கீந்த சித்தரை நினைந்து சொல்வார்

64 தொல்லையோர்இருவர்தேடும்சோதியேயாதுசெய்வேன்
தில்லையோர் பரவநின்ற தெய்வமே யாது செய்வேன்
இல்லையோ கருணை நின்பால் இன்றெனை அடிமை
கொண்டாய்
அல்லையோ தமியேன் இன்னல் அறிதியோ அறிந்தி
லாயோ?

65 பரித்திரள் நரியேயானபான்மைகண்டுஅடியேன் தன்னை
வருந்தினர் இதனை மாற்ற வல்லநீ வாரா யென்னில்
தரித்தனை விடத்தை என்னும் தனிமையும் புரங்கள் முன்னாள்
ரித்ததும் என்கொலொ என்றிரங்கினர் எவர்க்கும் மிக் கார்

66 நன்றிகொள் கடவுட் கங்கை நதியினை வைகையூடு
சென்றெழில் வாதவூரர் பேரிடர் தீரென்று ஏவி
அன்றொரு மடந்தைக் காளாய் அடியவர்க் கெளியார் கொன்றைத்
துன்றிய முடியின்மேல் மண்சுமந்ததும் உரைத்தல் செய்வாம்

குதிரையிட்ட சருக்கம் முற்றிற்று

# மண்சுமந்த சருக்கம்

1 தங்கிய அருளின் மிக்கார் தாம்படும் இடும்பை உன்னி
அங்கணர் அவன்பால் உற்ற அருந்துயர் அகற்றுகென்று
கங்கையை விடுப்ப ஏகிக் கடும் பெருக்கெடுத்துவைகைப்
பொங்கலைப் புனலாய் எங்கும் புரண்டது புணரியே போல்

2 சேந்த வெண்முத்த மூரல்செய்துநீர்க் கலைமேலார்த்துக்
காந்தளஞ் செங்கை வீசிக் கனதனக் குரும்பைகாட்டி
மாந்தளிர்ப் பதங்கள்மீது வருதிரை ஞெகிழ மார்ப்பப்
போந்துள கணிகை மாதர்ப் போன்றது வைகையாறு

3 திரைப்பெரு மருப்பினாலே செழுங்கரை இருபால்குத்தி
மரத்திரள் முறித்துச் சாலி வயலெலாம் அழித்துவாயால்
நுரைத்திரள் சிந்தி மீதே நுண்மணல் இறைத்து வண்டு
நிரைத்தலின் மதர்த்த வேழம் நிகர்த்தது வைகையாறு

4 மைத்திகழ் குழலாள் அந்த மலைமகள் முலையில் தோய
அத்தனை வருத்துமேன்மைஅனங்காயுதமென்றெண்ணி
ஒத்தெழுந் தொளிரும் கன்னல் உயங்குசெங் கழுநீர்க்
கஞ்சம்
புத்தவை அழிக்க வேண்டிப் புரண்டது பழனமெல்லாம்

5 வடம்படைத் துடையபார வனமுலை முகத்து மாதர்
இடுந்துகில் கடுகி வீழ்வதென நின்றழகு செய்து
தடம்படக் கிடந்த தெங்கின் தயங்கு செங்குரும்பைமீது
நெடும்புனல் திரைபோய் மீளநிவந்தது வைகையாறு

6 மீதெழு பரிதிகையால் விடும்கதிர் வெம்மை தீரப்
பூதல மடவாள் போர்க்கும் புதிய வெண்துகிலேபோல
யாதலர் பழனஞ் சோலை யாதெனப் பரந்து கஞ்ச
மாதுறை மதுரை மூதூர் மதிற்புறஞ் சென்று சேர்ந்து

7 தாங்கிய துவச வாயில் தடமதுல் இடியத் தள்ளி
ஆங்கெழில் மதுரை மூதூர் அழிப்பது போன்று செல்லப்
பாங்குள இடங்கள் எல்லாம் பரந்தது வைகை நன்னீர்
ஈங்கினிச் செய்வ தென்னென்று யாவரும் கவற்சி
கொண்டார்

8 மைக்கடும் களிற்றுத்தானை வழுதியும் கடிது நண்ணித்
தொக்கபொன் மலருமுத்தும் துகில் மணிப்பணியு நல்கித்
தக்கவண் புவியில் உள்ளோர் தமக்குயிர் என்னும்அன்னே
மிக்கநின் கோபமாறல் வேண்டுமென்று இறைஞ்கி நின்
றான்

9 கலைமதிக் குலத்துமன்னன் கன்னிநன் நாடன் கூறும்
தலைமைமிக் குடைய சொல்லால் தன்முனி வொழிதல்
இன்றி
மலையெனத் திரைகள் மேன்மேல் வருதல் கண்டு இது
என்னென்னா
நிலையுறச் சிந்தையுள்ளே நேடினான் நேடிப்பின்னர்

10 ஆதியாம் கடவுளெந்தை ஆலவாய் அமலன் மங்கை
பாதியான் சிறந்தபூசை பண்டையில் குறைந்ததுண்டோ
நீதியாம் தவத்தின் மிக்கார் நெஞ்சகம் புழுங்க மண்மேல்
தீதுயாம் செய்ததுண்டோ செப்புமின் அமைச்சர் என்
றான்

11 விளங்கிள மதிசேர் சென்னி வித்தகர் பத்தரான
வளந்திகழ் வாதவூரர் வருந்திய வளைப்பில் நீக்கி
உளம்கொள மகிழ்ச்சி செய்யின் உறுபுனல் ஊர்கொள்
ளாதென்று
அளந்தறி வறிந்துகூறி ஆங்கவர் தொழுது நின்றார்

12 மன்னனும் அவர்கள்தம்மேல் மகிழ்ந்தருட் பார்வைநல்கி
என்னுளம் மதித்தவாறே இங்கினிது உரைத்தீர் என்று
கொன்னுறு வளைப்பினூடு நிற்கும்நல் குணத்தினாரை
முன்னுற அழைத்து நட்பால் முகமர்ந்து இதுமொழிந்
தான்

13 பாம்பணி செய்யவேணிப் பரம்பரன் அடியார் கையில்
ஆம்பொருள் நமதேயானால் அறம்யிறக்காவ துண்டோ
தேம்படும் அலங்கல்மார்பீர் செயலிதற் குமதுமேனி
சாம்பிய தவமே யான்செய் தண்டமே தகவிலாமை

14 உற்றவித் தகைமை முன்னே உணருமிவ் வுணர்விலாமை
குற்றமித் துணையும் நம்மேல் கொண்டனம் குறை
கொளாமல்
மற்றினிப் புகலு மாறென் வைகைநம் ஊர்கொளாமல்
நற்றவத் தலைவர் நீரே அடைப்பியும் எனநவின்றான்

15 அருட்பெரு வழுதி இவ்வாறு அன்புரை பகர்ந்தபோதும்
தரிப்பரி தெனமுனம் தழலென வெகுண்டபோதும்
விருப்பொடு வெறுப்பிலாத மெய்ம்மையார் தம்மை
யாண்ட
திருப்பதம் நினைத்தார் வைகைச் செழும்புனல் ஊர்
கொளாமல்

16 சுந்தரப் பரிமேல் வந்த தோற்றமே மனத்தில் உன்னி
அந்தரத் திறைஞ்ச நன்னீர் அடங்கியுள் வாங்கிச் செல்ல
வெந்துயர்ப் பிறவியான விடங்கிளர் வேலை நீந்தி
வந்தருள் கரையில்சேர்வார் வைகையகம் கரையில்சென்
றார்

17 முறைமுறை வணங்கிநின்ற ஆரியர் முகத்தை நோக்கி
அறைதிரை நெடுநீர் வைகை அணைகடி தடைத்தல்
வேண்டும்
உறையுமிம் மாந்தர் எல்லாம் ஒல்லையில் வம்மின்என்று
பறையறை வித்து நம்மூர்க் கிவ்வுரை பரப்பும் என்றார்

18 ஆரியர் கடிதின் ஓடி அகன்பறை அறைவித் தம்பொத்
தேரியல் வீதிதோறும் சென்றுரை பரப்பு முன்னே
கூரிய கொட்டு மண்சேர் கூடையும் கொண்டுவைகை
நீரியல் கரைமேல் வந்து நின்றனர் மதுரையுள்ளார்

19 நீறுகொண் டிலங்கு மேனிமறையவர் நியமம் செய்த
வீறுகொண் டிடங்கள்தோறும் ஆரியர் விரைவில்சென்று
கூறுகொண் டெவர்க்கும் வேறு கோலறை அளந்து
செங்கை
மாறுகொண் டுறுக்கி வைகைவன்கரை அடைக்கலுற்றார்

20 கண்பெறு கழையின் முத்தும் கடகரி மருப்பின் முத்தும்
வெண்பணி லத்தின் முத்தும் மேதகுகரும்பின் முத்தும்
வண்புனல் திரைகள் வீச வரையெனக் குவைகள் செய்து
பண்படப் பொருத்தி நீருள் பதித்துயர் வரம்பு செய்வார்

21 பரித்திரள் நிறுத்தும் என்பார் பாம்புகள் உருட்டும் என்
பார்
திரைப்புனல் மிகுத்ததென்பார் தேவர்கட்கபயம் என்
பார்
நிரைப்படும் அகிலோடாரம் நெறிப்பட வொதுக்கி நீடு
வரைப்பிடைக் குவித்து நிற்பார் ஆயினர் மதுரையுள்ளார்

22 ஏருடைப் புதுநீர் வைகை இவ்வகை அடைக்கும் எல்லை
நீருடைப் பொலிந்த வேணிநின்மலற் கன்பு மிக்காள்
சீருடைத் தவத்தின்மிக்காள் செம்மனச் செல்வி என்னும்
பேருடை நரைமுதாட்டி பிட்டுவிற் றுணவு கொள்வாள்

23 ஆங்கவட்கு அளந்து நீக்கும் கோலமறை அடைப்பதின்றி
ஓங்கலைப் புதுநீர்வைகை உடைப்பெலாம் அடைக்கும் எல்லை
தீங்குள தறுகணாளர் சென்றவட்கு உறுகண் செய்ய
ஈங்கெனக்கு உறுதியாவார் யாவரோ என்றிரங்கி

24 பிட்டினைக் கூலிகொண்டு பெருங்கரை அடைப்பாரின்றி
நெட்டிலைச் சூலமேந்து நின்மலன் கோவில் எய்தி
மட்டறத் தளர்ந்த கொங்கை மார்பினில் கண்ணீர்வார
எட்டுருத் திரண்டபாதம் இறைஞ்சி நின்று இதனைக் கூறும்

25 நெட்டரவக் கச்சுடையாய் நீலநிறத் திருமாதின்
வட்டமுலைத் தழும்புபட வந்தனையும் திருமார்பா
கட்டியசெஞ் சடையாயுன் கண்ணருள் கொண்டு எப்பொழுதும்
பிட்டினைவிற் றுண்பேற்கும் பேரிடும்பை உளதாமோ?

26 யாருடன் நான்இனிப்புகல்வேன் எனுடையாய்ன்னு வைகையினன்
நீருடையா தடைக்கும்வகை நீசிறிதின்று அருளாயேல்
சீருடையாய் உனக்கடிமை செய்யுமவர்க்கு எளியை எனும்
பேருடையாய் எனப்பலரும் பேசுமொழி பழுதாமே?

27 தாயுமிலை தந்தையிலை தமருமிலை தமியேனைப்
பேயினுடன் நின்றாலும் பிரித்தறிய ஒண்ணாது
தீயதென திலம்பாடென் சிந்தையில்வெந் துயர்தீர
நீயருளாது ஒழியின்உயிர் நீப்பேன்மற் றென் செய்வேன்

28 இன்றெனக் குறிதியாக யானிடும் பிட்டுவாங்கி
வன்திறல் கூலியாளாய் வன்கடை அடைப்பாரில்லை
உனதனக்கு அபயம்யான் என்றுரைப்பவள் தன்மேல் அன்பு
சென்றவட்கு ஆளாமாறு துணிந்தனர் தேவதேவர்

29 ஆடையும் துணிந்த சீராகியே கூலியாளாய்
கூடையும் தலைமேல் கொண்டு கொட்டுடைத் தோளராகிப்
பீடைகொண்டு அயர்வாள் காணப் பெரும்பசி உடையார்போல்
வேடை கொண்டு ஒல்லைவந்தார் வேண்டிய வடிவம் கொள்வார்

30 வந்தெனை ஏவல்கொள்வார் உளர்கொலோ மற்றிங் கென்று
புந்தியின் மகிழ்ந்து கோயில் வாயிலில் புகன்ற போதில்
அந்தநன் மொழியைக் கேளா அன்னைதன் அயர்ச்சிகூரும்
சிந்தனை ஒழிந்து கூலியாளரைச் சென்று சேர்ந்தாள்

31 புடையின்மேல் உலகோர் இன்றிப் புனைந்துள புலித் தோலாடை
உடையின் மேல்அசைக்கும்கச்சாயோங்குநச்சுரகமின்றிச்
சடையின்மேல் மதியமின்றி தாங்கிய மழுமான் இன்றி
விடையின்மேல் இன்றி நின்றவெளியனை வெளியில் கண்டாள்

32 மைந்தநீ எனக்கிங்களாய் வருகென மூன்னர்க் கூலி
தந்தியேல் வருவனென்று சாற்றலும் துகரலிப்போது
இந்தவா ரமுதம்போலும் இனியபிட்டு அளிப்பேன் அல்லால்
அந்திவா இதனை விற்றே அளிப்பனின் கூலி என்றாள்

33 இரும்பசியுடையேன் அன்னே இனியபிட்டளிப்பைஆகில்
குரம்புகொண்டடைப்பேன் யானே கோலறை முழுதும் என்னக்
கரும்புறத்துகில் மேல்இட்டபிட்டினைக்கரத்தால்அள்ளி
விரும்பியிங்கிதனைக் கொள்வாய் என்றனள் விருப்பமிக்காள்

34 கூற்றடும் கமலபாதர் குறுந்துணிக் கரியசீரை
ஏற்றிடும் பிட்டுவாங்கி இன்புற அமுதுசெய்து
மாற்றரும் பசியை அன்னே மாற்றினை இனிப்போய் வைகை
ஆற்றில்நின் கூற்றில் உண்டாம் அருங்கரை அடைப்பன் என்றார்

35 நன்றுநன்று இன்னும் அன்னே நயந்து பிட்டளித்தல் வேண்டும்
என்றுதம் துணிந்தசீரை ஏற்றது நிறைய வாங்கித்
தின்றுதின்று அலைநீர் வைகைச் செழுங்கரை அதனிற் சென்று
குன்றெனும் தவத்தாய் உன்றன் கோலஙை காட்டு கென்றார்

36 மெய்த்தவம்புரிவார் தம்மில்விழுப்பமிக்குடைய அன்னை
இத்தடம் கரையை வல்லே எம்பிநீ அடைப்பாய் என்ன
பைத்தவெம்ப குவாய் நாகம் பனிமதிப்பாதி கொன்றை
கொத்துடன் முடிக்கவல்லார் கோலஙை அடைக்கலுற்றார்

37 பேர்ப்பர்மண் கூடை பெய்வர் பிறைமுடி மேற்சும்மாடு
சேர்ப்பர்பின் சுமந்து வைகைத் திண்கரை சொரிந்து மீள்வர்
வேர்ப்பர்மெய் இளைப்பார் போலமென்று பிட்டிரதநாவில்
பார்ப்பர்அன்னைதன்மேல்பரிந்தருட்பார்வை செய்வார்

38 பிட்டுநன் றென்று கூறிப் பிறைமுடி அசைப்பர் வேடன்
இட்மென் தசையில் சால ஈசனுக்காம் இதென்பார்
கொட்டுடன் கவிழ்த்த கூடை கொண்டுநின் றாடல் செய்வார்
வெட்டிமண் குவிப்பார் ஓடி விரைந்தடிப் பாய்ந்து மீள்வர்

39 பரிவுடை மனத்தினாலும் பரமர்தம் செய்தி கண்டு
கரையினை அடைத்தல் வேண்டும் என்றுதன் கருமம் கூறாள்
உரனுடை வழுதிதூதர் காண்பரேல் உறுகண் செய்வார்
இருவினை உடையேன் மற்றிங் கென்செய்வேன் என நினைந்தாள்

40 மற்றவள் நிலைமை வெள்ளி மன்றுள்நின் றாடுகின்ற
கொற்றவர் அறிந்து பின்னும் கூடைமண் கரைமேற் கொட்டி
உற்றவிக் கரையை அன்னே ஒல்லையில் அடைப்பேன் இன்னே
சற்றிதற் கிரங்காதேகு உன் தகவுடை மனையில் என்றார்

41 நீறணி புனிதமேனி நின்மலன் விடுப்ப ஏகித்
தோறிரை முகத்தினாள்தன் தொன்மனை புகுதும் எல்லைக்
கூறரும் தவத்தின் மிக்கான் கோலறை அடைப்ப அஞ்சி
மாறிடுதிரைக்கைதன்னால் தொழுதனள் வைகைமங்கை

42 சிறந்தமண் கூடை வேணித் திருமுடிக் கொண்டையாக
நிறங்கிளர் கொன்றை நீழல் நிறைமணல் அணையதாக
உறுந்தொழில் முயற்சியாலே உயங்கிமெய் இளைத்தார் போல
மறந்துல கெங்குமான வள்ளலார் பள்ளி கொண்டார்

43 ஆங்கவர் துயிலுமெல்லை அருட்பெரு வாழ்வின் மிக்கார்
ஓங்கிய கருமஞ்செய்வார் ஆகிஒண் பிரம்பு தாங்கிப்
பாங்குநின் றவரை நாடிப் பகிர்ந்தகோல் அறையிலுள்ள
தீங்குநன் குணர்வீர் என்னச் செற்றகண் கரையிற் சேர்ந்தார்

44 நன்குற அடைத்தல் செய்தார் யாவரும் எனநயந்து
சங்கரன் அடைக்கு நீடுதடம் கரை அவர்கள் எய்தி
எங்கணும்உயர்ந்துதாழ்ந்ததுஇவ் விடம்யார்க்கு நேர்ந்த
பங்கிது மொழிமின் என்ன நின்றவர் இவை பகர்ந்தார்

45 பெருவள நீடுகூடல் பிட்டுவிற்று உணவு கொள்வாள்
ஒருமுது மடந்தைக் காளாய் ஒருவன் வந்திங்ஙன் எய்தி
இருநிலம் அகழ்ந்து கூடையுள் சொரிந்து இரங்கிநிற்பன்
சிரமிசை எடுப்பன் மீள்வன் சிந்துவன் நகுதல் செய்வான்

46 பாடுவன் ஆடல்செய்வன் பையவோர் கூடை மண்ணை
நீடுதிண் கரையில் ஏறச் சொரிகுவன் நெடிது நிற்பன்
ஓடுவன் ஓடி மீள்வன் ஒருகைமண் கரையிலேறப்
போடுவன் போக என்னில் வருவன் வா வென் னில்
போவன்

47 பிட்டினை நுகர்வன் ஐயா பெரிதுநன் றென்று கையைக்
கொட்டுவன் செய்கை காணில்அரசிளங்குமரன் ஒப்பான்
நெட்டலர் கொன்றைநிழல் நெடுந்துயில் கொள்கிறான்
கட்டுரை சிறிதும் கேளான் அவன்தனைக் காண் மின்
என்றார்

48 என்றலும் அவனை இங்கே கொணர்மினென்று அவரில்
நின்ற
வன்திறல் ஒருவன்கூற ஆரியன் வல்லை ஓடிச்
சென்றலும் ஞானயோகச் செழும்துயில் ஒழிந்து மூன்று
துன்றிய புரங்கள் செற்றார் துண்ணென விழித்தெழுந்
தார்

49 விழித்தலும் கடிதுசென்ற ஆரியன் வெருவ நோக்கி
மொழிக்கனல் சிந்திஅந்த முன்னவன் தன்னை எய்த
அழைதலும் வருதல் செய்யாது அஞ்சிநின்று இரங்கல்
கண்டு
பழித்தவன் செங்கைபற்றி ஈர்த்தனன் பரிவிலாதான்

50 ஆங்கவன் கடிதில் தள்ளி அண்ணலை எண்ணிலாத
தீங்கினன் முன்னர்க் கொண்டுசேறலும் வெருட்சிஎய்தி
பாங்கு நின்றவருள் நின்ற பாவியைப் பாவி நோக்கி
ஈங்குவெம் குருதி சோர அடித்திடிங் கிவனை என்றான்

51 கடுத்தசொல் வண்கணாளன் கதத்துடன் மாறுகையில்
எடுத்தனன் முனிவர் விண்ணோர் எடுத்தனர் தொழுது
செங்கை
அடித்தனன் அடித்தபோதில் அன்புடை அரிவை பாகம்
கொடுத்திலர் துணுக்கம் எய்த மறைந்தனர் குறைவிலா
தார்

52 தார்மேல் நின் றிலங்குபுய வழுதிமேலும்
தன்மனைமங் கையர்மேலும் அமைச்சர் மேலும்
ஆர்மேலும் சென்று பொருஞ் சேனைமேலும்
அயன்மேலும் மால்மேலும் அறவோர் மேலும்
தேர்மேல் வெம்பகல் மேலும் மதியின் மேலும்
சிறந்துள விந்திரன் மேலும் தேவர் மேலும்
பார்மேலும் கடல்மேலும் மரங்கள்மேலும்
பட்டதரன் மெய்யிலடி பட்டபோதே

53 தந்தமுரு வொழிந்துபிறி துருவமாகிச்
சதுர்முகனும் சங்காழிதரித்த மாலும்
அந்தமுதல் தெரிவரிதாய் வெளியே நின்ற
அண்ணலார் வடிவிலடி பட்டபோதில்
எந்தவுல கங்களிலும் இருந்துளோர்கள்
எம்முடலில் அடியுறைத்த தென்றுகூற
முந்திஎழும் பன்மொழிகள் உகாந்த எல்லை
மோகரிக்கும் எழுகடலின் முழக்கம் போன்ற

54 மாயையெனும் கரும்பெரிய புனல்மேல் மொக்குள்
வண்ணமெனும் எண்ணிலா அண்டத்துள்ளும்
ஏயவகை எண்பத்து நான்கு நூறா
யிரமான பல்யோனி எவற்றினுள்ளும்
ஆயவுயிர்க் குயிராகி நிற்கும் தன்மை
அவனிதலத் தஞ்ஞானர் அறிந்து பாதச்
சேயமலர் வழுத்துவதற்கோ கூலியாளாய்
சென்றுமுடி மண்சுமந்தார் தில்லைநாதர்

## வேறு

55 மையணையும் திருமிடற்றார் மெய்யில் அடி வாதவூர்
ஐயருடம்பினும் வந்து படுதலுமே அயர் வெய்தி
உய்யவெனை ஆட்கொள்வான் உவந்தொருவர்க்காளாகி
மெய்யரெழுந் தருளினரோ என்றென்று மிகநொந்து

56 தம்பெருமை அறியாத தம்மிறைவர் தமக்கிரங்கி
கம்பிதமும் கண்ணீரும் வரக்கவற்சி உறும்போதில்
வெம்பிறவிதொலைத்தார்முன் ஆரியர்கள் விரைந்தோடி
உம்பர் பிரான் திருவிளையாட் டெல்லாமங் குரைத்
தார்கள்

57 வேட்டுருகும் பெருங்காதல் வித்தகர் இத்தன்மையெல்லாம்
கேட்டுமனம் தளர்ந்துமிகக் கிளர்ந்துவிழிப் புனல்பெருக
வாட்டிகழும் சடையண்ணல் மண்சுமந்த இடம்கொடுபோய்
காட்டுமென மொழிந்தவரோடு அவ்விடநேர் கடிதெய்தி

58 அழுங்கியரும் பெருநரகில் அடியேனும் வீழாமல்
எழுந்தருளும் பெரியோனே எங்கணுளாய் என்றென்று
தொழுங்கரமும் கண்ணீரும் துளங்கியமெய்ப் புளகமுமாய்
விழுந்து புரண்டு இவ்வாறு புலம்பினர்மெய் அன்பாளர்

59 நீறுபடும் பொன்மேனி நின்மலனே நெடுங்கங்கை
ஆறுபடும் சடைமுடியாய் அடியவர்கட் கெளியானே
மாறுபடும் புரம்எரித்தாய் மாறுபடும் போதுடலில்
கூறுபடும் சிவஞானக் கொம்பினுளம் குழையாதோ

60 கொங்கையால் மணிமார்பில் குறியிடும் வீறுடைய
மங்கையாள் பெருமானை மண்சுமக்க மதித்தாளோ
கங்கையாள் அலைக்கரத்தால் கரைத்திலளோ புள்ளூநாவாம்
பங்கையாசனன் அறியாப் பணிமுடியென்று அறியாளோ

61 பிரமனுடன் திருமாலும் பிறப்பகலப் பலகாலும்
பரிவினுடன் தருமலரோ பத்தரிடும் பச்சிலையோ
புரிதருசெஞ் சடையோநற் புதுமதியோ ஆயிரவாய்
வரியரவின் பலபடமோ மண்சுமக்கும் சும்மாடு

62 கலையறியும் புகழ்வைகைக் கரைதிருவம் பலமாக
அலையெறியும் புனலோசை அந்தரதுந் துபியாகத்
தலைவனிடங் கண்டார்கள் அரவமெனும் தவமுனியும்
கொலைதவிரும் புலிஎன்னும் குலமுனியும் ஆனாரோ

63 மீனேறும் கொடித் தென்னன் விழிக்கேற விரைதுரகம்
தானேறுவது கண்டு தரும்கலை பொற் செண்டேறத்
தேனேறு மலர்க்கொன்றைத் திருமுடிமேல் மண்ணேற
யானேறும் சிவபதமும் எனக்கேற வின்னாது

64 பொன்னுலகத் துள்ளோரும் புரந்தரனும் திருமாலும்
மன்னுமறைக் குரியோனும் வழியடிமைத தொழில் செய்ய
அன்னைதனக்கு ஆளாகி அணிவைகை அடைத்தடியுண்டு
என்னையருட் பணிகொள்ள இசைந்தனையோ இறையோனே

65 கட்டுமறைத் துணிச்சீரைக் கச்சையுமத் திருத்தோளில்
கொட்டுமுடித் தலைமீது கவிழ்த்ததொரு கூடையுமாய்ப்
பிட்டுநல் தவமுடையாள் பின்புவரும் திருக்கோலம்
இட்டமுறத் தொழும்படிநான் கண்டிலனே இறையோனே

66 தாரூரும் சடைமுடியாய் தவம்பெரிது முயன்றவர்கள்
நீரூரும் புகழ்வைகை நெடுங்கரைமேல் நின்றாரோ
சீரூரும் கனகமுடித் தென்னவனோ மதுரைஎனும்
பேரூரில் இருப்பவரோ பிட்டமுதிட்டு அருள்வாளோ

67 பொன்மௌலித் தலைமீது புண்ணியர்மண் சுமந்தேறும்
கொன்மவியும் கோலன்றையும் குளிர்வைகைப் பேராறும்
கன்மமெனும் பகைநீங்கக் கண்ணுதல் வெம்பரியேறும்
தென்மதுரை மூதூரும் அல்லவோ சிவலோகம்

68 இன்னவகை அன்புடையார் இரங்கினர் ஆயிடைவைகைத்
துன்னுதிரைப் பேராறும் தொலையவடிந் ததுபின்னர்த்
தென்னவனும் சிவன்செயலாம் எனத்தெளிந்து வாதவூர்
மன்னவர் தம்பால்வந்து வணங்கியிது கூறுவான்

69 அந்தரர்தம் பதியினிழிந்து அருள்புனைமாத் தியர்குலத்
தில்
வந்தருளித் தமியேற்கு மந்திரியாய் மகிழ்வெய்தி
எந்தைவயப் பரியேறல் காட்டியெனக்கு ஒழியாத
பந்தமறத் திருவுள்ளம் பற்றினைநல் தவத்தோனே

70 கருமாளத் திருமேனி காட்டினனென்று உணராமல்
திருமாலும் பரவரியான் தேவருடன் பரியேறும்
அருமாயச் சூழலினால் அழுக்காடை அண்டர் தொழும்
பெருமானுக் களித்தேனென் பிழைசெய்தேன் பெரியோ
னே

அப்பணிசெஞ் சடையானை அரும்பரிமேல் ஆளாக்கும்
மெய்ப்பொருள் என்றுணராமல் வெய்யவினைப்பொருள்
வேண்டிச்
செப்பருமித் தறுகண்மை செய்வித்தேன் சிறுமையுளேன்
எப்பிழையும் பொறுத்தருளாய் யான்நரகிற் புகுதாமல்

72 தூநாகம் அணிந்தபிரான் துங்கமிகும் பரியேறிப்
பூநாறும் சடைமேல்மண் சுமந்தபுகழ் போதாதோ
யானாளும் நின்பணியே செய்தொழுக இவ்வுலகம்
தானாள வேண்டுமினி என்றிரந்தான் தமிழ்மாறன்

73 வன்திறல் மன்னிவ்வாறு உரைத்தலும் வாதவூரர்
தென்திசை புரக்குநீதித் தென்னவன் தன்னைநோக்கிப்
பின்திகழ் சடையான் மன்னும் பெருந்துறை நகரிலேக
இன்றெனை விடுப்பதேமற் றிவ்வுல களிப்பதென்றார்

74 தென்புலத் தலைவன் தானும் சிந்தையில் நொந்து
முன்னோன்
அன்பருக்கு அரசர்வாழ்வில் ஆசையிங் குளதோ என்று
மென்பதத் திறைஞ்சி ஐயா வேண்டிய செய்கஎன்று
தன்புகழ்க் கூடல் மூதூர்புகுந்தனன் தானைசூழ

75 சற்றவத் தொழில்செய்யாத தானைமன் போனபின்னர்
அற்றவர்க் கற்றசோதி அருள்பெரு வாழ்வு வேண்டிக்
கொற்றவர்க் குற்றகோலம் குறையென நீத்துமேலாம்
நற்றவக் கோலம் கொண்டார் நம்பனுக் கன்புமிக்கார்

76 அத்தனை ஆலவாயில் அண்ணலை இறைஞ்சி அந்த
மைத்தவழ் சோலைநீடு மதுரையம் பதியை நீங்கி
வித்தகர் தம்மையாண்ட மேனிகண்டு இறைஞ்ச வேண்டும்
பித்தினர்கடிதுசென்றார்பெருந்துறைபொருந்த எண்ணி

77 மிடைடுகெட வைத்தபாத வித்தகர் ஊரை நோக்கி
நடையிடும் எல்லைதன்னில் நன்மன விரைவும் காற்றும்
தடைபடு கன்றை நாடும் கபிலையும் ததும்பி நின்று
மடையினை உடைக்கும் நீரும் ஆயினர் வாதவூரர்

78 கண்ணுழை யாதகானும் பதிகளும் கடிதில் நீங்கி
எண்ணறு முனிவர்மேவும் எழிற் பெரும் துறையில் எய்தி
புண்ணிய இனத்தர் சூழமுன்போல் இருந்தபோதில்
விண்ணவர் அதிபன் பொற்றாள் வீழ்ந்திது பணிந்து சொல்வார்

79 தீண்டுதற் கரியமார்பில் சேயிழை தனத்தினாலும்
ஈண்டொரு மாற்றினாலும் எய்திய தழும்பபோற்றி
வேண்டிய வடிவமாகி வெம்பரி மேற்கொண் டெம்மை
ஆண்டருள் செய்யவந்த அண்ணலே போற்றி போற்றி

80 அண்டருக் கரியாய் போற்றி அடியவர்க் கெளியாய் போற்றி
வண்டமிழ்ப் பாண்டிநாடு வாழமண் சுமந்தாய் போற்றி
கண்தனக் கினியமேனி காட்டிஎன் சென்னி மீது
முண்டகத்திருத்தாள் வைத்த முத்தனேபோற்றிபோற்றி

81 போற்றியென்று இன்னவாறு புகன்றவர் முடிமேல் செங்கை
ஏற்றியங்கு இனியகூறி எழுகென எழுந்தபின்னர்
நீற்றையும் புணைந்து ஞான நிறையருட் பார்வை நல்கி
வீற்றிருந் தன்பர் கூட்டம் விளங்கினர் களங்கமில்லார்

82 அந்தமும் முதலுமில்லார் அடியவர் தம்மைநாடி
வந்துள கருமமெல்லாம் முடித்தனம் மகிழ்ச்சிகூர
நந்திகழ் வடிவம்காண வேண்டிநல் கயிலையுள்ளார்
சிந்தனை செய்தார் வல்லே ஆண்டுநாம் சேறல்வேண்டும்

83 வாழ்ந்திரும் இன்பின் யாமும் ஏகுவம் என்ன அந்த
சூழ்ந்தநள் உருவாம் அன்பர் தோத்திரம் பலவுஞ்செய்து
தாழ்ந்தெதிர் இறைஞ்சி ஐயா தரிப்பது என்று மண்மேல்
வீழந்தயர்ந்து அழுதார் எம்மைவிடுதியோ என்று நொந் தார்

84 பரிந்தழும் அடியார் தம்மேல் பாமனும் அன்புகூர்ந்து
வருந்துவ தொழிமி இந்தமணமலி குருந்த நீழல்
பொருந்திய தெய்வபீடம் பொலிவொடு குயிற்றிமீதே
திருந்திய மறையும் தேடுநம்பதமாகச் செய்து

85 தாங்கரும் அரந்தைநீங்கி யாமெனும் தன்மை கண்டு
நீங்கரும் அன்பினாலே நித்தலும் நயந்திறைஞ்சி
ஈங்குள் மனத்தார் எல்லாம் அமர்ந்திரும் ஒருநாளிந்த
தீங்கல் பொய்கையூடு செழுந்தழல் வந்து தோன்றும்

86 எழுந்தழல் விளைந்தபோதில் யாவரும் தடத்தினூடு
விழுந்துபின் எய்திநம்பால் விடுகநும் கவற்சி என்று
தொழும்தவம் இயற்றும்தொண்டர் சூழ்ந்துபின் செல்ல மெல்லச்
செழுந்திருக் கயிலைநாடிச் சென்றனர் தில்லைநாதர்

87 நீங்கரும் அன்பர்எல்லாம் நில்லுமின் என்றுகூற
ஆங்கவர் இறைஞ்சி எந்நாள் ஐயநிற் காண்பதென்று
தாங்கரும் மயக்கம் எய்தி தாயகல் மகவுபோலப்
பூங்கழல் வணங்கி நின்றார் போயினர் மாயைவல்லார்

88 இங்கிவர் நின்ற பின்னும் இன்னருள் வாதவூரர்
தங்கிளை வாழவந்த தலைவர்பின் சென்றபோதில்
பொங்கிள முலையாள் பாகர் புரிந்தவர் வரவுகாணா
அங்கொரு கொன்றை நீழல் இருந்தனர் அரந்தைநீக்க

89 தன்புடைக் கவடுகொண்டோர் தடங்கிரிநிரந்தமாலைப்
பொன்படைத் தனையகொன்றை பொலிவுற இருந்த
போதில்
மென்பதத் திறைஞ்சிக் கண்ணீர் விழவிழத் தொழுது
நிற்கும்
அன்பரைப் பரிவால் ஐயர் அருகுவைத்து அருளிச்செய்
வார்

90 அவ்வியம் இல்லார் தங்கட் கருள்தரமுன்னாள்மன்னும்
திவ்விய தலமாம் இந்தச் சிறந்துள குருந்தநீழல்
எவ்வுலகெங்கும் உள்ளோம் ஆயினும் ஈங்குளோர்கள்
வெவ்வினை அகற்றியாளவேண்டி ஈண்டுறைவோம் என்
றும்

91 பொங்கொளிச் சுழுனையூடு புலம்பிசைக் குறியேயான
மங்கல சங்கமல்லால் வாய்ந்தபல் லியங்கள் யாவும்
இங்கெமக் காகா ஓசை அடங்கிடம் ஆதலாலும்
நங்குலக் கவுரிகாண நடநவி லுதலினாலும்

92 ஒழுங்குடன் இன்னவாறிங் குணர்ந்துநற் குருந்தநீழல்
செழுந்தவக் குழுவில் நீயும் நங்கழல் சேவைசெய்தே
எழுங்கனல் மடுவில் காணில் யாவரும் அதனிற் சென்று
விழும்பொழுது உடன்வீழாமல் அவ்வுழைவிரைவில்நீங்கி

93 உத்தர கோசமங்கை என்னும்நம் மூரில் சென்று
சித்தியங் கெவையும் எய்தித் தெய்வீக லிங்கமேனி
வைத்தநம் பதிகள் தம்மில் இவையிவை வணங்கில் அங்கே
இத்திகழ் வடிவே காண்டி காட்டுதும் என இயம்பி

94 இந்நகர் வணங்கிநீங்கி எழுங்கழுக்குன் றம் என்னும்
அந்நெடும் பதியிறைஞ்சி ஆண்டுநின்று ஈண்டுப் போந்து
பொன்னின் அம்பலத்தில்எய்திப்புத்தரைவாதில்வென்ற
பின்னர்எம் பதமேயான பெரும்பதம் பெறுதி என்றார்

95 மன்னுமன் புடையார் தெய்வ வாசகம் புகலுமாறும்
பன்னகம் புனைவோன் மேவும் பதிபல வணங்குமாறும்
பொன்னினம் பலத்திலெய்திப் புத்தரைவென்றுமன்றன்
தன்னரும் கமலபாதம் சார்தலும் பகர்தல் உற்றாம்

## திருவம்பலச் சருக்கம்

1 வரந்தர இருந்தார் தம்மை வாதவூரர் இறைவர் போற்றி
பெருந்துறை நகரில் அன்றிப் பிஞ்ஞகா புலியூர்மன்றில்
பொருந்துவை முத்தி என்று புகன்றதிங் கெவனோ என்னத்
திருந்திய தவத்தாய் கேட்டி என்றவர் செப்பல் உற்றார்

2 இத்தலத்திடையே சீடம் எடுத்துள இடத்திலன்றி
வைத்துள இடத்தே அந்தவேட்டுவ வடிவம்கொள்ளும்
வித்தக உனக்கிங் கன்பால் மெய்யுணர் வுரைத்தோம் மேன்மை
ஒத்திடும் சிவாநுபூதி முத்தியம் பலத்தில் உண்டாம்

3 இடம்படும் உடம்பின்மூலத் தெழுந்தநற் சுழுனைநாடி
உடன்கிளர் ஒளியேயாகி ஒளியில் அஞ்செழுத்துஒன்றாய்
நெடுங்குழல் ஓசையாகி நிலவுமவ் ஓசை போயங்கு
அடங்கிய இடமே என்றும் ஆடும் அம்பலமதாகும்

4 எண்டரும் பூதமைந்தும் எய்திய நாடி மூன்றும்
மண்டல மூன்றுமாகி மன்னிய புணர்ப்பினாலே
பிண்டமும் அண்டமாகும் பிரமனோடு ஐவராகக்
கண்டவர் நின்றவாறும் இரண்டிலும் காணலாமே.

5 ஆதலால் இந்த அண்டத்தறிவரும் பொருளாயென்றும்
தீதிலா மூலநாடிப் திகழ்சிவ லிங்கமேனி
மீதிலா மந்த நாத வெளியின்மேல் ஒளிமன்றங்குக்
காதலால் மடவாள் காணக் கருத்துற நிருத்தம் செய்வோம்

6 அந்தநல் நடனமே தென்னில் ஐந்தொழில் நிகழ்த்தலாகும்
பந்தம தகற்றும் இந்தப் படிவமும் அதுவேயாகும்
வந்துலகததில் யாரும் காண்பரேல் வழுவா முத்தி
தந்தருள் அளிக்கும் தெய்வ தலமுமத்தலமே கண்டாய்

7. தாவரும் பணில நேமி தரிப்பவர் பிரமர் என்போர்
யாவரும் புலிபாம் பென்னும் இருவரும்புரத்திலுள்ளார்
மூவரும் தெய்வ மூவாயிரவரும் முனிவர் தாமும்
தேவரும் தொழுது போற்றும் எல்லையத் தில்லைமூதூர்

8 மற்றிவை தெளிவாய்என்று பணிந்தெதிர் வணங்கி நிற்பார்
நெற்றியில் நீறுசாத்தி நிற்றிஎன் றகல நில்லார்
சற்றிடம் சென்றார் பின்னும் இங்கிவர் தன்மை கண்டு
கற்றையம் சடையார் நின்று கண்ணருள் செய்துபோந்து

9 கண்ணெதிர் நடக்குமாறு கண்டுளம் களித்து நிற்கும்
புண்ணியர் காணமுன்னர் மறந்தனர் புலியூரையர்
துண்ணென இரக்கம் எய்தித் தொழுதுகை தலைமேல் கொண்டு
நண்ணரும் அன்பர் கூட்டம் நணுகினர் வாதவூரர்-

10 அருந்தவம் அகலா நெஞ்சத் தன்பரும் தாமும் அந்தத்
திருந்திய குருந்தின்கீழே தெய்வ பீடிகையும் செய்து
வரந்தரு செய்ய பாதமலர் வகுத் திறைஞ்சி ஆங்கண்
இருந்தனர் இருந்த நாளில் எய்தியது இயம்பல் உற்றாம்

11 வெண்பிறை முடித்தவேணி விண்ணவர் அன்பிலாத
பண்பினர் எனினும் தம்மைப் பாடினர்க் கிரங்குவா
றென்று
எண்பெறு நமச்சிவாய வாழ்க என்றெடுத்து நாதன்
வண்பதம் புகழ்ந்து ஞானவாசகம் புகலலுற்றார்

15 சொற்பதம் கடந்து நின்ற சோதிவந்து அருளை நல்கும்
அற்புதம் அறியேன் என்றும் அதிசயம் கண்டாம் என்றும்
எற்பொலி சடையாய் நெஞ்சம் குழைத்தனை என்னை
என்றும்
சிற்பரன் தனதபாதம் சென்னியின் மன்னும் என்றும்

13 ஐயனே நின்னைக் காண ஆசைப்பட்டேன் நான் என்றும்
உய்கிலேன் வாழேன் என்றும் உனக்கடைக்கலமேஎன்றும்
செய்யுமாறறியேன் அந்தோ செத்திலேன் என்றும்
பொய்யர்
பொய்யனே நின் பொற்பாதம் புணருநாள் எந்நாள்
என்றும்

14 ஆதரித் தழைக்கில் இங்கே அதெந்து என்றருளாய் என்
றும்
போதயிக் குடையபாடல் இவையிவை புகன்றபின்னர்
மாதிரத் தெவரும் போற்றவரும் திருவார்த்தை எண்
ணம்
தீதறச் சிறந்த வெண்பாத் திகழேழு நான்கும் ஓதி

15 இயல்புடன் மொழியும்பள்ளியெழுச்சிஏசறவு நெஞ்சத்து
அயர்வற உரைக்கும் மின்னேர் அனைய பூங்கழல்கள்
என்றும்
உயிருணி எனுநற் செய்யுள் பிரார்த்தனை ஓங்குநீதி
வியனொடும் கூடற்பாண்டி விருத்த மெய்த் தமிழும்கூறி

16 மருவும் தொண்டருடன் கூடிவைகிச் சிலநாள் செல்ல முதற்
பரமன் சொல்லும் படியேபின் பயிலும் பொய்கைத் தழல்கண்டு
கருதும் திருவஞ் செழுத்தோதிக் காணக்கிளரும் கனல் மீது
விரவும் பேரன்புடையார்கள் எல்லாஞ் சென்று வீழ்ந் தார்கள்

17 வீழ்ந்தபோதில் புலியூரர் விடைமேலேறிக் கவரியுடன்
சூழ்ந்தங் கிமையோர் மலர்சிந்தித் தொழவிண் ணிடையே தோன்றுதலும்
ஆழ்ந்த தடத்துள் கனல்முழ்கும் அன்பர் அடங்காத் துயர்நீங்கி
வாழ்ந்து வணங்கிக் கணநாத வடிவாய்த் திருமுன் வந் தார்கள்

18 துரியத் தலையில் பயில்வாரும் தொழுதங் கெழுவார் முகநாடி
ஒருசற்றகலா தமர்நீர் இங்கொழியத் தனிநாம் எய்தியதும்
கரையில் திரைபோய் விழவீசும் கழுநீர்வாசம் கமழ்வாவி
எரியில் புகுவீர் என்றதுவும் யாதோஎனினிங்கிது வாகும்

19 உத்தமன் என்னும் திருவாதவூரனை மன்னும் புலியூரில்
புத்தரை வெல்லும் படிநாம் இப்புவிமிசை வைத்தோம் யாமேகில்
சித்தம் அயர்ந்தே துயர்கூரும் செய்தியனாமென் பது தேரா
இத்தலமீதே சின்னாளிங் கெம்முடன் வாராதிரு,மென் றோம்

20 மலமகல் பவரும் புவிமீதே மானுடவடிவம் தனைஎய்திச்
சிலபகல் எனினும் பயில்காலைச் சேர்தரும் மலவாதனை என்றே
பலமலர் கமழும் தடமீதில் பரவரு ஞான அனல் சேர் வித்து
இலதென நீடும் சடம் வேவித்து இவ்வுடல் ஈந்தோம் இந்நாளில்

21 என்று விளம்பிக் கணநாதர் எங்கணு மல்கப் புலியூரின்
மன்று விளங்கப் பயில்வாரும் வானில் மறைந்தார் அவ்
வெல்லைத்
துன்றியஞானச்சிவநாமச்சொற்றமிழ்வல்லார் வேறாகச்
சென்றொரு கொன்றைச் செழுநீழல் திகழ இருந்தார்
சிவயோகம்

22 அன்பர் அழற்கே புகுமாறும் ஐயர்விடைக்கேவருமாறும்
முன்பு தமக்காம் உருவெய்து முன்னவன் நற்றாள்தொழு
மாறும்
பொன் பொதுவிற்கே அன்பாளர் புகுவதும் எல்லாம்
ஒருகாலத்து
இன்புறு மெய்ப்போ தகயோகத் தியல்பொடு கண்டார்
என்செய்தார்

23 செங்கை குவித்தார் விழிநீரைச் சிந்தினர் எந்தாய் வந்
தாய்பின்
எங்கண் ஒளித்தாய் எனமாலுற்றெய்தினர் பொய்கைக்
கரைமீதே
கங்கை முடித்தார் விடையேறிக் கண்ணுற நண்ணும்
தலமோஎன்று
அங்கண் நிலத்தேபோய் வீழ்வுற்று அழுதழுதந்தோ
எனநைந்தார்

24 அன்னை நிகர்ப்பீர் என்னை ஒழித்தே அன்பாளர்
பொன்னடி பெற்றே பொய்கை அழற்கே புகவோ
மின்னுற வைத்தீர் நும்மருள் கூடா வினையேனுக்கு
இன்னல் அளித்தீர் எங்ஙன் ஒளித்தீர் எனநொந்தார்

25 அந்நிலை தெளிந்து பொய்கை அகன்றுயர் குருந்தநீழல்
பன்னரும் மறைகள் காணாப் பதமலர் பற்றிவீழ்ந்து
மன்னிய நிலத்தில் உள்ளார் வல்வினைப் பிறவிமாள
இன்னருள் சதகம் மெய்தானரும்பி என்றெடுத்துச்
சொன்னார்

26 இத்திறம் கூறியாங்கே புலம்பிநின் றிரங்கும் எல்லை
நித்தன் அன்றுரைத்த நீர்மை நெஞ்சினுள் நினைந்து பின்னர்
அத்தலத் திறைஞ்சி எங்கோன் அருட்பெரு விடைபெற் றேகி
உத்தரகோசமங்கை ஊர்தனில் ஒல்லை புக்கார்

27 சடையவர் கோயில் எய்தித்தம்மைவந்தடிமைகொண்ட
வடிவது காணாராகி மயங்கி வெய்துயிர்த்து வீழ்ந்து
விடுதிகொல் என்னைஎன் றுநீத்தல்விண்ணப்பம்என்னும்
தொடைகெழு பாடல் ஓதக்காட்டினர்தொல்லைமேனி

28 கன்னலை அமுதை அங்கேகண்டு கொண்டு இறைஞ்சிச் சின்னாள்
அந்நகர் இருந்துதங்கோன் அருள்மொழிப்படியே சென்று
தந்நிகர் இல்லாத்தெய்வத் தலம்பல வணங்கி நீங்கிச்
சென்னிநன் நாட்டில் எய்தித் திருவுடை மருதூர் சேர்ந் தார்

29 அப்பதி தொழுதபின்னர் அன்புடன் ஆரூர் எய்திச்
செப்பரு மலர்த்தாள் போற்றித் திகழ்திருப்புலம்பல்ஓதி
எய்ப்பற இயைஞ்சி அண்ணல் இயம்பியபதிகள் எல்லாம்
தப்பற வணங்கி நீங்கித் தடமதிற் புகலி சார்ந்தார்

30 குன்றென வயங்கு கோயில் கோபுரவாயில் நீங்கிச்
சென்றுயர் கயிலையான செய்திகண்டிறைஞ்சும் எல்லை
மன்றிடை நடித்தபாத மலரடி பிடித்துக் கொண்டு
பின்திகழ் சடையோன் முன்னர் பிடித்தபத் தருளிச் செய்தார்

31 தொல்வினைப் பகைமை உள்ளார்யாவரும் தொழு தால் இங்கு
வெல்வர்அப் பகையைஎன்று விருப்புடன் சிலநாள்வைகி
மல்குமத் தலத்தைநீங்கி வண்கழுக் குன்றில் அன்பால்
செல்வதற் கிசைந்து தில்லைத்திசைகுறித்திறைஞ்சி ஏகி

32 உத்தர நெடுந்திசையில் ஏகி ஒளிகுன்றா
முத்தநதி சூழுமுது குன்றினை வணங்கி
அத்தலம் அகன்றுயர் அருட்டுறையி தென்றே
மெய்த்தவர்கள் எண்ணியுறை வெண்ணெயை அடைந்தார்

33 அந்நகர் வணங்கிய பின் அன்புடன் அகன்றே
நன்னர்வதி சென்றுநடு நாடும் உயர்காடும்
கொன்னிப மடங்கலுறை குன்றமும் இகந்தே
மன்னும் அருணாபுரி மருங்கணைய வந்தார்

34 மாடமொடு கோபுரமும் மன்னுமணி முத்தம்
சூடுமதிலும் பெரிய தோரண முகப்பும்
நீடு கமுகு அடவி நெருங்கியுள தண்கா
ஊடுயர்தல் கண்டுவகை கொண்டு தொழுது உய்ந்தார்

35 அன்றிருவர் தேட அழலான தொருவெற்பாய்
நின்றவடிவோ மனம்நிறைந்த பெருவாழ்வோ
என்று மலை அண்ணலை இறைஞ்சி அருள்கொண்டே
சென்று அருணையாகிய செழும்பதி புகுந்தார்

36 சோலையும் மதிலும் பல்பூந்தோரண மறுகும் தெய்வ
சாலைகள் பலவும் நீங்கிச் சந்நிதி மறுகில் சென்று
மாலையும் பாம்பும் திங்கள் மத்தமும் முடியில் வைத்தோன்
ஆலயம் இறைஞ்சிக் கண்டார் தம்மை அன்றாண்டமேனி

37 மாலுடன் பிரமன் தேவர் வந்துனக் கடிமை என்றென்று
ஓலிடும் பொழுதில் ஆலமுண்டிருள் கண்டபோற்றி
மேவிடும் பவநோய் தீரவிண்ணவர் மண்ணோர் பச்சைப்
பாலுடன் கலந்துட் கொள்ளும் பனிமலை மருந்தே போற்றி

38 நெடியவன் கேழலாகி நீணில மகிழ்ந்தும் காணா
அடிகள் என்தலைமேல் வைத்த அருட்பெரும் கடலே
போற்றி
படியிடம் புரக்கும் உண்ணாமுலைஎனும் பச்சைமேனிக்
கொடியிடம் கொண்ட செம்பொற் குன்றமே போற்றி
போற்றி

39 வென்றிடும் கன்னி மேதிச்சென்னி விக்கிரமன் தன்னை
கொன்றதன் பாவம் நீக்குறித்திட அருள்வாய்போற்றி
அன்று வந்தென்னையாளும் அணி அண்ணா மலையாய்
போற்றி
என்றுதம் பரிவால் ஏத்தி இறைஞ்சி அங்குறையுறு நாளில்

40 மாதர் கொள்மாதர் எல்லாம்மார் கழித்திங்கள் தன்னில்
ஆதிரை முன்னீரைந்தே யாகிய தினங்கள் தம்மில்
மேதகு மனைகள் தோறும் அழைததிருள் விடிவதான
பேசிவர் தம்பிற்கூடிப் புனற்றடம் ஆடல்செய்வார்

41 அன்னவர் இயல்புகண்டார் ஆங்கவர் புகன்றதாக
மன்னிய திருவெம்பாவை வாசகம் பேசிப்பின்னர்க்
கன்னியர் பாடியாடும் கவின்கொள் அம்மனைக்கண்டன்
னார்
பன்னிய பாடலாக அம்மனைப் பாடல் செய்தார்

42 கிவிரவும் அன்புடையார் அந்த மேதகுதலத்தை நீங்கிப்
பரிவுடன் கச்சி ஏகாம்பரந்தனில் பரனை ஏத்தி
தெரிவரும் காமக்கோட்டி சிறடிவணங்கித் தேவர்
வரநினைந்திறைஞ்சும் தெய்வ வண்கழுக்குன்றில் சென்
றார்

43 கோட்டிதழ் கமழும் கொன்றைச் சென்னியன் குலவும்
அன்பர்
சூட்டிய மலர்த்தாள்போற்றித்துணைவநின்செய்யமேனி
காட்டினை கலங்காவண்ணம் இக்கழுக் குன்றில் என்று
பாட்டினைப் பொழிந்து சின்னாள் பயின்றுபின்பணிந்து
போந்தார்

44 அத்தலமுதலா நாப்பண் அடைந்துள தலமும் கானும்
மைத்தடங்கிரியும் காவும் வாவியும் நதியு நீங்கிப்
பைத்தவெம்பாம் பொடாடி நரியெல்லாம் பரிகளாக்கும்
சித்தர்தென் தில்லை மூன்றுகாவதம் என்னச் சென்றார்

45 தூமூரல் மடப்பாவையர் தோள் ஆசையில் ஆளாம்
மாமூகரும் இட்டுண்டு உயிர் வாழாதவர் தாமும்
தீமூள்கர அரண்மேல் அருள் செய்யாதவர் பலரும்
போமூர்வழி போகாதவர் புலியூர்வழி போனார்

46 செல்லும் சுரம் இருபால் ஒளிதிகழ் கொன்றைகள் மலரா
எல்லொன்றிய இமையோர் உலகென நின்றன எங்கும்
புல்லும் சிவ நாமத்தமிழ்போல வண்டிசைபாடச்
சொல்லும் பொருள்வல்லார் தமதைபோன்றன தோன்றி

47 தெள்ளும் சிவஞானம் சிறிதில்லார் தவவேடம்
கொள்ளும் செயலென ஒண்மலர் குலவும் கவிரெல்லாம்
பள்ளம்படர் புனல்போல் புலன்வழியே பயில்சிறியோர்
உள்ளம் தமை ஒக்கும் திகழ்மைக் கொண்டொளிர்காயா

48 பாயும் குலமந்தித் திரள்பயிலும் தொறும் அசையா
ஈயின்குழுஎழு தேனினிறால் சேர்மலர் நாகம்
ஆயம்திகழ்தாரா கணம் அகல் வான்மிளிர் மதியம்
ஏயும்படிகிளர் பொங்கரினிடை நின்றன எங்கும்

49 பங்கங்கிளர் கமுகின்திரங் பலசாமரை வீசக்
கொக்கின் தளிர் கோதும்பலகுயில் காகளம் ஊத்த
தொக்கன்பொடு விண்ணாதிபர் சொரியும் பலபொற்பூ
ஒக்கும்படி மலர்சிந்தின ஒண்சண்பக சோலை

50 நீங்காவளம் இவ்வாறுள நீள்சூத நரந்தம்
தேங்காரளி முரல் பாதிரி தெங்கின்திரள் வகுளம்
கோங்காசினி கொந்தார் செழுமந்தாரம் நெருங்கும்
பூங்காவை அகன்றார் புலியூர் நன்நகர் கண்டார்

51 சேணொன்றிய மதிலும் பணிநிகழ் கோபுர நிரையும்
சோணத்தரு கும்பம்கிளர் துணைமாளிகை பலவும்
காணுந்தொறும்எழில்செய்வதுகண்டுஅஞ்சலிகொண்டே
பூணுந் திருவருள் அன்பர் புகழ்ந்தார் உள்மகிழ்ந்தார்

52 வேதம் தரும்ஒலியும் தொழும் விண்ணோர் தமதொலி
யும்
கீதம் தரும்ஒலியும் கிளர் முழவங்களின் ஒலியும்
போதம் தரும் சிவஞானிகள் புகலாகம ஒலியும்
ஓதும்தமிழ் ஒலியும் கடல்ஒலி செய்தன புலியூர்

53 நிரையொன்றிய மணிமாளிகை நெடுவீதிகள் அகலா
வரையொன்றிய உயர்கோபுர மணிவாயில் புகுந்தே
உரையொன்றிய சிவஞான முணர்த்தும் சிவநன்னூல்
கரை கண்டவர் மணிமன்றெதிர் கண்டார் அருள்
கொண்டார்

54 பொன்னார் பொதுநின்றாடிய புனிதன்தனை முடிமேல்
அன்னாள் அடிவைக்கும் பரனாகும்படி கண்டார்
மன்னா உயிரன்னாய் மணிமன்றா சரண் என்றே
சொன்னார்பலகால்அன்பொடுதொழுதார்மிகஅழுதார்

55 விண்டே இருகண்ணீர் விழ வீழ்ந்தின்னடி முடிமேல்
கொண்டே பின் எழுந்தன்பொடு குறையா அருள்
நிறையா
வண்டேர் குழல் உமைபங்கனைவண்தில்லையுள்இன்னே
கண்டேன் எனநற்பாடல் கருத்தார உரைத்தார்

56 குன்றா அருள் மூலந்திகழ் குறியாகிய சுடரும்
மன்றாகிய வெளியூடு மகிழ்ந்தாடிய ஒளியும்
ஒன்றாகிய அநுபூதியில் உற்றார் செயலற்றார்
நின்றார் அசைவில்லா ஒருநிலை ஓவியமானார்

57 மைகால் குழலுமை பங்கினன் வழிபாடு மறந்தே
கைகால் அசைவிலாவாயின் கண்ணும் சிறிதிமையா
செய்காரியம் என்னோவிது தெருளா மருள்என்னா
மெய்காவலர் மணிமன்றை விடப்போமினி என்றார்

58 பூண்டருள் கொண்டகாவல் புரிபவர்உரைத்தல் கேளார்
தாண்டவம் நிகழும்ஞானத் தன்மையின் தொன்மைநாடி
காண்தகு துரியாதீதக் கழிபரத் தொழியின் மூழ்கி
நீண்டதோர் தம்பமாகி நின்றனர் நெடிதுபோது

59 போமெனப்போகார் ஒன்றும் புகல்கிலர் பித்தம் கொண்
டார்
ஆமெனக் காவலாளர் அஞ்சி நின்றிரங்கும் எல்லைச்
சாமுடற்குயிர் வந்தெய்தும் தன்மைபோல் குவித்த கஞ்
சத்
தேமலர்க் கரமேல் கொண்டு சிவசிவ போற்றிஎன்றார்

60 முன்னவன் செம்பொன் மன்றை மும்முறை வலம்
கொண்டங்குத்
தன்னிகரில்லா மூலத்தலைவனை வணங்கிப் பின்னர்
அன்னை அம்பிகை தன்பாதம் அன்புடன் இறைஞ்சி
அந்தப்
பொன்னவிர் கோயில் மேல்பால் புலீச்சரம் சென்று
சேர்ந்து

61 வரந்தர அமர்ந்தநாதன் மலரடிவணங்கி நாகேச்
சரந்தனில் இருந்த அண்ணல்தன் பதம்இறைஞ்சி நீங்கித்
திருந்திய மறையோர் வாழும் தில்லையம்பலம் சூழ்விதி
பெருந்துழி அமூர்தமான வாசகம் புகலல் உற்றார்

62 ஆடுமிக்குலா நற்றில்லை யாண்டவன் தனைக்கொண்
டென்னும்
பாடலைப் புகன்று கோவில் இருவகைப் பதிகம்கூறி
நாடுமச் சிவபுராணம் ஒழிந்தநல் அகவல் மூன்று
நீடுமெய்த்தமிழும் அன்பால் ஓதினர் நீதிமிக்கார்

63 கைவளை சிலம்பச் செம்பொற் கிண்கிணி கறங்கச்
சூழ்ந்து
மைவளர் சூழல்மேல் வண்டு மருண்டிசை திரண்டுபாட
மெய்வியர் வரும்ப வெம்போர் விழிக்கயல் புரட்டி
ஞாங்கர்
இவ்வகை நின்று சுண்ணம் இடித்தனர் மடந்தைநல்லார்

64 அத்திருவினையார் பாடல்கேட்டவர் இசைத்தாக
மெய்த்தமிழ் அதனால் நன்குமிகுதிருச் சுண்ணமோதிப்
மைத்திகழ் காவினூடு வருதலும் ஆங்கே பொய்தல்
தத்தயில் முயலும்காதற் சிறுமியர் தம்மைக் கண்டார்

65 கண்டபின் வறிதுகூறும் கசட்டுரை சிறிதுமற்றெம்
அண்டனை உரைமினீரென்று அவரவர் உரைத்ததாக
எண்டரு திருத்தெள்ளேணம் திருவுந்திஎழில்தோணோக்
கம்
பண்டிகழ் திருப்பூவல்லிப்பாடல் பொன்னூஞ்சல் சொன்
னார்

66 ஆங்கொரு சிறுமிதன்சீர் அன்னையை நோக்கிக்கூறும்
தாங்கிசை மொழியேயாகத் தருமவை சுரைந்தோதி
ஞாங்கரில் முரலும்தும்பி தன்னையும் நயந்துநாதன்
பூங்கழல் வழுத்துகென்றுபுனிதர்கோத்தும்பிசொன்னார்

67 பொங்கரின் இடையேவாழுந் பொற்பிளங் குயிலேகூவி
இங்கழை எம்பிரானை என்பதும் கிளியை நோக்கித்
திங்களஞ் சடையோன் பாதம் செப்பெனத் தசாங்மம்
என்னும்
தங்கிசைத் தமிழும் சொன்னார் தந்நிகர்ஒருவர்இல்லார்

68 மண்ணிடைத் தம்மைஆண்டவடிவினை அன்றிமற்றோர்
அண்ணலைக் கடவுள் என்பார்க் கஞ்சுதும் வினையேம் என்று
பண்ணுறச் சிறந்த செய்யுள்பகர்ந்து நற்பன்னசாலை
ஒண்ணகர்ப் புறஞ்செய்து அங்கிருந்தனர் உண்மை மிக்கார்

69 பரம்பரப் பொருளாம் இந்தப்பைந்தமிழ் ஓதிவையம்
பெரும் பிறப்பகல வந்துபிறந்தவர் செய்திஎல்லாம்
இருந்தநற் தொகுதிதோறும் இயம்பிநன் மகிழ்ச்சிஎய்தி
அரும்புகழ்த் தில்லையுள்ளார் யாவரும் அதிசயித்தார்

70 தத்துவமுடிவிலாடும் தாண்டவம் தம்முள் கண்டு
நித்தலும் சென்றுமன்றில் நிமலனைஇறைஞ்சி அன்பால்
இத்திறம் ஐயர் தில்லை எல்லையில் இருந்தார் இப்பால்
புத்தரை வாதில்வென்ற புகழினைஉரைத்தல்செய்வாம்

## புத்தரை வாதில் வென்ற சருக்கம்

1 தாழுநீடு வேணி அண்ணல் தாள்விடா ஓர்மாதவன்
ஆழிஞால வண்மை உண்மை ஆயும்நேய நெஞ்சினான்
சோழநாடு கண்டு தில்லைதொழுத பின்பு பழுதிலா
ஈழநாடு தன்னை நாட எண்ணி அங்கு நண்ணினான்

2 நண்ணுமாதி மாதவன் நலங்கொள் ஈழ நாடனாம்
அண்ணல்தான் இருந்தவூர்அடைந்துசேர்இடந்தொறும்
எண்ணிலாத காலம்வாழி தில்லைமன்றம் என்றுகூர்
உண்ணிலாவும்அன்பினால்உரைக்குமா,தொடங்கினான்

3 சென்றுசேர்இடம்தொறும்சிறந்தசெம்பொன் அம்பலம்
என்றுகூறி வைகுநாளில் ஈழநாடன் முன்புபோய்
நன்றிலாத மூகர்தாம் நயந்திறைஞ்சி மன்னகேள்
ஒன்றுயாம் உரைத்தும் என்று உவந்திவ்வாறு கூறினார்

4 ஒற்கமில் கருத்தனாம் ஒருத்தன் இந்நகர்க்குள்ளான்
நற்கலன்கள் அக்குமாலை நாளுமுண்பதயமே
நிற்கினும் நிலாவுசெம்பொன் மன்றெனும்
சொற்கிளந்து உரைக்குமென்று சொல்லிமுன் வணங்கி
னார்

5 இன்றிங்கிவனைக் கொணர்வீர் என்று இசைத்தான்
நிருபன் ஆங்கவரும்
சென்றன்புடையாய் வருகவுனை அழைத்தான் திறல்
மன்னவன் என்ன
நன்றென்பதுவும் தீதுமன்றி நாளும் பலியேற்று உண்ப
தொழிந்து
ஒன்றும் கருதா ரொடும்கருமம் உளதோ வேந்தற் கென
வுரைத்தான்

6 ஊரில் பலிகொண் டுண்கினும் மற்று ஒன்றும் கருமம்
இல்லெனினும்
பாரில் பயில்வார் உயிர்புரத்தல் பரமாம் நிருபர்க்கு
ஆதலினால்
வேரில் கமழ்தார் எம்மரசன் தன்பால் வருதல் வேண்டு
மெனச்
சீரில் திகழ்வேல் தூதருடன் சென்றான் ஒன்றும் தீமையி
லான்

7 முந்தும் பிடகம் மூன்றுணர்ந்து செயிர் நான்கொழிந்து
முதுசீலம்
ஐந்தும் புனைந்து பாரமிதை ஆறைந்தும்அடக்கும்இயல்
புடையோன்
கந்தம்கெடுதல் முத்தியெனக் காட்டும் குரவனுடன்
இருப்ப
சந்தம் சிறந்த புயனிருபன் இருந்தான் தானை புடைசூழ

8 உடுக்கும் தனிவெண் கோவணமும்
ஒளிர் பொக்கணமும் மாத்திரையும்
எடுக்கும் சதங்கை நெடும்பிரம்பும்
இலகும் திலகத் திருமுகமும்
அடுக்கும் சிறுபுன் முறுவலும் நின்று
அசையும் சடையும் கண்டரசன்
திடுக்கம் கொளவந் தருகாக இருந்தான்
திருவம்பலம் என்று

9 இருக்கும் தலைவன் தனைநோக்கி
இப்போதே அம்பலம் என்றிங்கு
உரைக்கும் தலைமை எவன்கொல் என
உலகாள்பவனுக்கு அவன் உரைப்பான்
பெருக்கும் புகழால் திகழ்வளவன்
பிரியா இருகண் பேரருளால்
புரக்கும் திருநாட்டு அறந்தழைக்கும்
புலியூர் என்ப தொன்றுளதால்

10 அந்தப்பதி முன் தில்லைவனம் அஃதே புவனம் அனைத்
தினுக்கும்
முந்தக் கிளரும் தெய்வதலம்அதனால்மூலத்தானமதாம்
இந்தப்புவிக்கு நாப்பண்ணென இலங்கும் பொதுவாம்
இடமதனில்
சந்தத் தனத்தாள் உமைகாணத் தலைவன் திருத்தாண்
டவம்புரியும்

11 மன்னும் திறலான் மனுமைந்தன் வடிவில்
தொழுநோய் மாற்றிநெடும்
பொன்னம் கிரிபோல் உருநல்கும் புனிதத் தடமுண்டு
அதில் மூழ்கி
முன்னம் புவியில் தவமொன்று முயலாதவரும்
ஐந்து தொழில்
என்னும் திருத்தாண்டடம் புரிதல் கண்டால்
உலகில் இனிப்பிறவார்

12 நண்ணும் பிறவி ஒழித்துயிர்க்கு நலஞ்சேர் முத்தி
கொடுப்பதற்கிங்கு
எண்ணும் சமயக்கடவுளரில் யானேவல்லன் எனப்
பதமேல்
வண்ணம் திகழ்பொற் கழலணிந்து மதுகைக் கொடியும்
கட்டியருள்
பெண்ணம்பிகை கண்காண நடஞ்செய்வான் அந்தப்
பெருந்தருக்கால்

13 தேக்கும் சடைமுடிக் கடவுள் இருதாள் கருதாத்திமனமும்
வாக்கும் செயலும் கொடியோரும் ஒருகால் பொன்னம்
பலம் எனில்
ஆக்கம்தரும் அஞ்செழுத்து இருபத்தோராயிரத்தோடு
அறுநூறு
நாக்கொண்டுரைக்கும் அதற்கு நிகர் என்றான் குன்றா
நற்புகழான்

14 நீறும் திருவஞ்செழுத்துமில்லா நிருபாதி நவம்பலம்என்று
கூறும் பொருளிங்கு இதுவாகும் என்றான் குன்றாம்
எனும் குணத்தான்
தேறும் பிடகம் மூன்றுமுறைசெய்யும்தலைவன் அல்லாது
வேறும் கடவுள் ஒன்றுளதோ என்றே புத்தன் வெகுண்
டுரைப்பான்

15 சென்றே தில்லை எனும்பதியில் சேர்வேன் வாது
செய்தவன் தான்
நின்றே நடிக்கும் கழலீடு நீடும் கொடியும் ஈங்கறுப்பேன்
ஒன்றே கடவுள்புத்தனென உலகோர் அறியஉரைத்தந்த
மன்றே போதிநிழற் பெருமான் பள்ளிஎன்ன வழங்கு
விப்பேன்

16 இந்தக்கருமம் தினம் மூன்றில் யானே முடிப்பேன்
என எழுந்து
தந்தச் சிவிகை மேல்கொண்டு தன்தாள்
வணங்கும் கணஞ்சூழ
நந்தக் கிளரும் திரைகடலும் நாடும் காடும்
அகன்றேகிப்
புந்தித் துயரம் கொண்டொல்லை சென்றான்
புத்தன் புலியூரில்

17 மன்னனும் தனது செல்வமகட்குள மூகைநீங்கப்
பொன்னினம் பலத்திலேக என்பது பொருந்த உன்னித்
தன்னொடும் தானைசூழத் தனிப்பெரும் சிவிகைஏறிச்
சென்னி நன்னாடு சேர்ந்து தில்லையின்எல்லை புக்கான்

18 இங்கிவன் செல்லு முன்னர் எய்திய புத்தன் அங்கிச்
செங்கரன் தில்லை எல்லை சிவிகையின் இழிந்து சென்று
பொங்குதண் புனல்சேர் சென்னிப்புலீச்சர அரன்பொற்
கோயில்
தங்குசெங் கனகசாலந் தயங்கு மண்டபத்திலானான்

19 ஆங்கவன் இருப்பச் சென்ற அரசனும் இறைஞ்சிஏத்தி
ஓங்கிய மகிழ்ச்சி எய்தி அமர்ந்துழி உரகராசி
தாங்கிய சடிலன் கோயில்தன்னிலுட் கருமம் செய்வோர்
ஈங்கிவர் வரவுகண்டே யாவரும் ஒருங்குசேர்ந்தார்.

20 தத்தமனம் நொந்துகனல் தானென வெகுண்டே
சித்தமயர் வெய்தும்வகை சின்மொழிகள் கூறா
அத்தனுறை தில்லைநகர் எல்லையை அகன்றே
புத்தகடி தேகுஇது பொறோம்என உரைத்தார்

21 தார்வளவன் முன்னர்உயர் தர்க்கஉரை கொண்டே
நீர்பரவு சைவநிலை அன்றென மறுத்துச்
சீர்மருவு புத்தனுயர் தெய்வமென இப்போது
ஏர்பெற நிறுத்தியலது ஏகுவதில் என்றான்

22 புத்தகுரு இன்னன புகன்றபின் எவர்க்கும்
இத்திறம் உரைக்குவம் எனக்கடி தகன்றே
மெய்த்தவர்கள் வேதமுதலோர் பரிகலத்தோர்
தத்தமனை தோறுமிது சாற்றினர்கள் அன்னோர்

23 புண்ணுழையும் வேல்நிகர் புகன்றமொழி கேளா
அண்ணலுறை கோயிலிடை யாவரும் அடைந்தே
வண்ணமணி மண்டபம் தெய்வத்திரு புத்தன்
எண்ணமது கேட்குவம் எனக்கடிது சென்றார்

24 தெய்வநரர் ஆனவர்கள் செல்லஎதிர் வாரா
மெய்யுணர் வில்புத்தனை வெகுண்டு பல சொல்லா
உய்வதறி யாதஒரு நீபயமு றாதே
இவ்வகை இருந்தமதி யாமைஎது என்றார்

25 அங்கமறை ஆகமபுராணம் அவையாலே
நுங்கடவுளே கடவுள் என்று நவில் வீரேல்
எங்கடவுளே கடவுள் என்று நவில்வேன்யான்
இங்கென்எதிர் கூறும்எனவே அவன் இசைந்தான்

26 போற்றுமறை அந்தணர்கள் புத்தனை வெகுண்டே
தோற்றனை எனக்கலைஞர் சொல்ல உனைவெல்வோம்
மாற்றமினி உன்னுடன் உரைக்குமது மற்றோர்
சேற்றிலெதிர் கல்லெறிதல் செய்வதல துண்டே

27 நன்றிதரு வாரும்ஒரு ஞாளிகுரை செய்தால்
நின்றதன் வெகுட்சியை நிறுத்தல் கடனாமால்
இன்றிழியும் நின்னுடன் இகழ்ச்சி எனினும் சீர்
ஒன்றுமிலை யானஉனை ஓர்உரையில் வெல்வாம்

28 மிக்கதிறல் மன்னவரும் மெய்யுணர்வினோரும்
தொக்கசபை முன்னர் நமதர்க்கவுரை சொன்னால்
தக்கதெனலாமிது தகாததிது என்றால்
எக்கலகமும்இலை இதேகருமமாமால்

29 உத்தரம் உரைக்க அறியாது புலியூரர்
புத்தனை முனிந்தனர் புடைத்தனர்கள் என்றே
இத்தலம் உரைத்துவிடும் என்று வளவன்பால்
மெய்த்தவர் விரித்தெழுதும் ஓலையை விடுத்தார்

30 அந்தணர் பெருந்தவர் அருங்கலை உணர்ந்தோர்
வந்தணுகு நாளைமணி மன்றுதொழ என்றே
புந்திமகிழ ஓலைபல போக்கிய பின் வெய்யோன்
முந்துற ஒளித்தனன் முளைத்தனன் இராவோன்

31 துங்கவான் என்னு மாதின்
சுடர்நுதல் திலகமென்னக்
கங்குலாம் மடந்தை பார்க்கும்
கவின்கொள் கண்ணாடி என்னச்
சங்கவார் குழையார் கிட்ட
தரளவெண் கவிகை எனத்
திங்கள்மா கடவுள் தோன்றச்
சிறந்தது ஞாலமெல்லாம்

32 இன்றொரு தினமும் தேரா இங்கிரு
நாளை யாங்கள்
உன்றனது உயர்ச்சி இன்மை
காட்டுதும் உலகிற் கென்று
நன்றிகொள் மனையில் சென்றே
யாரும்நல் உணவு மாந்தி
அன்றிருள் மேன்மையாளர்
அருந்துயில் பயிலும் காலை

33 அழகுற மன்றில் ஆடும்
ஐயர் கைபிரம்பு தாங்கித்
தழைசடை முடியும்மேனி
சாத்திய நீறுமாகி
விழைதரு வடிவம் கொண்டு
வெளிப்படக் கனவில் வெய்யோன்
எழுவதன் முன்னர் எய்தி
யாவர்க்கும் இது புகன்றார்

34 வருந்துவ மொழிமின் நம்மூர்
எல்லையில் வைகி அன்பால்
இருந்தனன் வாதவூரன்
இவ்வுரை கேட்ட போதே
பொருந்திய தர்க்க நூலால்
புத்தரை வெல்வான் இன்னே
அருந்தவமுடைய நீர்போய்
அழைத்திடும் அவனை என்றார்

35 கண்டனர் கனவு தன்னில்
விழித்தனர் கனக மன்றில்
ஒண்டொடி பாகன் அன்பால்
உரைத்தது கருத்தில் ஆய்ந்து
கொண்டனர் மகிழ்ச்சி செங்கை
குவித்தனர் முடியில் கோயில்
மண்டப மிசையே எல்லா
மாந்தரும் வந்து தொக்கார்

36 புல்லறி வுடைய புத்தன்
புகன்றதற் கிரங்கிப் பின்னர்
எல்லையில் கருணையான் வந்து
இருங் கனவதனில் எய்தச்
சொல்லிய மொழியினாலே
சோதி கொள் முகத்தராகி
வல்லிருட் கொடுங்கி வெய்யோன்
வரவிரி கமல மொத்தார்

37 தெய்விகமான மன்றில் திருநடம் புரியும் நாதன்
தைவருநீறும் செய்யசடையும் நற்பிரம்பும் தாங்கி
மைவிரி கங்குற்காலை வந்துநன் மகிழ்ச்சி எய்த
இவ்வகை மொழிந்தார் என்றே யாவரும் கனவு சொன்
னார்

38 அத்தனை மன்றுளாடும் ஐயனை வியந்து கூறித்
தத்தமில் அன்புகூர்ந்து தரித்துள வருத்தம் நீங்கி
மெய்த்தவ வாதவூரர் மேவிடத் தணுகுவோம் என்று
உத்தம பன்னசாலை ஒல்லையில் குறுகினார்கள்

39 கூடினர் பன்னசாலை கூரருள் குன்றை அன்பால்
நாடினர் நயந்து கண்டார் நளினவாசனத்தின் மீது
பீடினர் இருந்தயோகம் பெயர்ந்தனர் வியந்துமன்றில்
ஆடினர் உரைத்தஎல்லாம் ஆங்கவர்க்கு இயம்பினார்கள்

40 அந்தமொழி அன்பினர் செவிப்புலன் இலங்குதலும்
மன்றிறை பணித்தது உணரா
வந்தவருடன் கடிதுசென்று திருமன்றனை வணங்கி
அருள்பெற்று மயலாம்
சிந்தையர் இருந்தமணி மண்டபமதெய்தியவர்
தீயமுக நாடில் இடரே
நந்துமெனவே எழினிகொண்டு மறைவித்தெதிர்
இருந்தனர் நலம்கொள் அணைமேல்

41 மன்னுமறை அந்தணர் புராணிகர் அருங்கலைகள்
வல்லவர்நல் லோர்களுடனே
சென்னிவளவன் கடிதுவந்து திருமன்றன் எதிர்
சென்றுதொழு தங்கண் அகலா
மன்னுமணி மண்டபம் தெய்திஅருள் அன்பரை
வியந்தடி வணங்கி அருகாய்
நன்னர் அணையின்புறம் இருந்தனன் விரிந்தகலை
நாள்நிறைவு கொண்ட மதிபோல்

42 ஈழவள நாடனும் எழுந்தடி பணிந்து திறை
இட்ட குறை நல்கி இறைவா
வாழிமிக வாழியென நின்றபொழு தங்கவனை
மன்னர் பெருமானும் மகிழா
வேழமிவை நல்லவிலை இல்லைஇம் மணிக்கென
வியந்தருகிருத்தி எவரும்
சூழமவை தங்குதலும் அங்கயல் இருந்தனர்கள்
சூழ்ந்துகரி சொல்லும் அயலோர்

43 தில்லைநகர் அந்தணர் தபோதனர் சிறந்தினிது
இருந்துழி விரிந்த சிவநூல்
வல்லவர் இழிந்தகுண புத்தனுடன் வாதுசெய்யும்
மன்னுசபை காண வருவோர்
தொல்லை மறை தந்தவன் முகுந்தன் முனிவோர்
எழுவர் சூழுமிரு நான்கு திசைமேல்
எல்லையில் இருப்பவர்கள் உருத்திரர்கள் விஞ்சையர்
இராப்பகல் இராப்பகல் இலங்கு கதிரோர்

44 தன்பெருந் தானைசூழ இருந்ததண் பொன்னிநாடன்
தென்பெருந்துறை சூழ்நாடன் திருவடி வணங்கி நின்று
நின்பரம் சைவஞான நிலைமையை நிறுத்தல் பின்னர்
என்பரம் புத்தர்தம்மை ஈங்குயிர் செகுப்ப தென்றான்

45 வளவனிவ் வகையிற்கூற வந்தபொய்ப் புத்தரெல்லாம்
உளமயர் வெய்த வாதவூரர் உள்மகிழ்ச்சி எய்திக்
களவுரை பகர்வோய் வந்தகாரணம் உரைநீ என்னக்
கிளர்செவி நுழைவேல் என்னக் கேட்டவன் இதனைச்
சொல்வான்

46 மன்னும்எம் கடவுள் அல்லால் மற்றிலை கடவுள் என்றே
இந்நெடும் பதியில்எய்தி இயம்பி இங்கெவரும் காணப்
பொன்னினம் பலத்தே புத்தரை வைத்தல் வேண்டி
நென்னல் வந்திருந்தேன் இங்கு வேறில்லை நினைத்த
தென்றான்

47 என்றலும் வாதவூர்எம் இறைவர் புன்முறுவல் எய்தி
முன்தலம் ஒன்றும் இல்லாய்முயல் இபமாவதுண்டோ
நன்றது நிற்கஉன் றன் நற்பெரும் கடவுள்தானும்
சென்றவன் அடியில்சேரும் செய்தியும் செப்புகளன்றார்

48 அண்ணலார் உரைத்தபோதில் ஆங்கவன் வெகுட்சி
எய்திக்
கண்ணிலா தவற்கு வெய்யோன் கதிரொளி காட்ட
லாமோ
நண்ணலா எங்கள்நாதன் நற்புகழ் உரைக்கின் நந்தா
எண்ணில் ஆயிரங்கள் வேண்டும் என்றுபின இது புகன்
றான்

49 அறந்திகழ் பிடகநன்னூல் ஓதி அன்புடையனாகிப்
பிறங்குபல் யோனிதோறும் பிறந்துயிர்க் குறுதிசெய்து
மறந்தரு கோறலாதி நால்வகை ஒழித்து மாண்பு
சிறந்துள போதிநீழல் சேர்வன் எம்மிறைவனாவன்

50 மேவியகருவில் சேரும் உருவம் வேதனை குறிப்புப்
பாவனையுடன் விஞ்ஞானப் பஞ்சகந்தங்கள் கூடிப்
ஓவில் பல்லுணர்வுண்டாகி ஒழிவது பிறவித் துன்பம்
ஆவது பொன்றக் கேடாய் அழிவது முத்தி என்றான

51 வாதவூர் அண்ணலாரும் வன்புனல் பொன்னிநாடன்
தீதிலா முகத்தினோடு சிறந்தருள் பார்வை நல்கி
பேதையாய் அறிமால் கொண்டுபித்துரை பகரும் புத்
தற்கு
ஏதுயாம் இன்று சொல்வதென்று பின்னிது புகன்றார்

52 தருமமுண்டென்று நன்னூல் சாற்றினன் தலைவன்
என்னை
மருவியுணர்வுண்டாகி மறைந்திடும் கணத்தில் என்னை
பொருளுடன் உரைநீ தேடிப்புகலு முன்உணர்வு
போனால்
இருள்தரும் நின்னூல் சொல்வதெப்படி இயம்பல்
வேண்டும்

53 ஆதலால் அறநூல் என்பதுனக்கில்லை உயிர்கட்காகப்
பேதமாய் யோனிதோறும் பிறந்தனன் இறைவன் என்றாய்
தீதுசேர் ஒருவர் மாலைத்தீர்க்க வந்தவர்கள் தாமும்
போதமால் கொள்ளின் அம்மால் போவதங்குள்ள தாமோ?

54 கொல்வது கருதான் எங்கள் கோவென உரைத்தாய் முன்னம்
பல்வகை யோனிதோறும் பார்மிசைப்பிறக்கும் நாளில்
வெவ்புலி நரியே ஆகி வெம்பசி உற்றால் மற்றுப்
புல்லொடு தழையோ தின்பான் நின்பெரும்போதிநாதன்

55 கூரவெனும் உன்றன் நூலில் கந்தம் ஐந்துடனே கூடி
உருவமும் அழியும் என்றாய் உன் இறைக்குஉருவம்எங்கே
விரவிய யோனிதோறும் உயிர்க்கருள் செய்யவேண்டி
மருவொரு வடிவம்கொண்டான் என்பதே மதியிலாதாய்

56 காரண உயிரில்கூடும் காரிய உருவின்றேல் உன்
சீரணிபோதி நீழல் சேர்இறைக்கு உருவம் இல்லை
பூரண ஞானமில்லாய் பொன்றுதல் முத்தி என்னும்
பேருணர் வில்லா உன்றன் பிடகநூல்யாவர்சொன்னார்

57 இருபதிற் றொருவராக எண்ணும் உன்புத்த ரெல்லாம்
வருவது சிறந்த தாயர் வயிற்றினைப் பீறி என்பை
பரிவொடு சுமந்து பெற்றார் உயிர்கெடப்பழுதுசெய்தே
அருநரகத்தில் விழும் அவர்களோ கடவுளாவார்

58 கரவுடைப் பூதநான்கின் கலப்பினில் பேதமல்லாது
உருவினுக்குயிர் வேறின்றென்று உரைப்பைநின் பொய்மை நூலில்
இரவினில் துயிலும் காலுன் முகத்தினில் ஏறிப்போகும்
அரவினைப் பூதபேதம் அறிந்ததோ அறிவிலாதாய்

59 உருவமும் உயிரும்கூடும் உணர்வுனக்கில்லை இந்த
உருவமிங் கிறந்தகாலை உயிர்கடிதகன்று போகும்
உருவமும் உயிரும்கூடிப் பிறக்குமேல் அதனாலுன்றன்
உருவமும் உயிரும் வேறாம் என்றுரை உன்றன் வாயால்

60 வானமுமில்லை வானத்தோசையுமில்லை வானம்
ஆனதில் வழக்க தாமென்று அரற்றுவை உன்றன் நூலில்
கானிலம் புனல்தீ நான்கும் கலப்பதற் கிடமதாகும்
நீநவில் ஓசை வானின் நிகழ்ந்துள செய்தி என்பாய்

61 இடமிகும் திசைதான் இல்வழக்கென்னும் நீயே
வடநெடும் திசையில் போதிமரமென வணக்கம்செய்வை
புடவியில் அறிவிலாரும் பித்தரும் பொய்மையோரும்
உடன்நிகழ் அவையில் கூறில் ஒக்கும் நீஉரைப்பஎல்லாம்

62 மரம் உயிரல்ல என்பை மன்னும் ஐம்பூதமான
உருவினர் போல நன்னீர் உணவினால் கிளைகொண்
டோங்கும்
சருகெழும் உணவின்றாயின் ஆதலால் சனன பேதத்து
அருவினை அறுத்த எங்கோன்உயிர்க்கமைந்ததென்பாய்

63 வன்பெரும் பழுதுகோறல் மண்மிசைப்பிறர் செகுத்த
புன்புலால் தின்னல் நன்றென்று உரைப்பைநின் பொய்
மைநூலில்
தின்னை என்று உனக்கு நல்லூன் உடல் உயிர் செகுத்தே
ஊட்டி
உன்பசி தணித்தார் பாவம் எய்துவது உனக்கு நன்றோ

64 காரணம் நிற்க என்றும் காரியம் கெடுதல் வீடென்று
ஆரணம் பரவும் எங்கோன் ஆகமம்புகல்வார்சொல்வார்
போரணங் குயிரும் சேரப் பொன்றுதல் முத்தி என்று
பேரணங் குற்ற நீயே பிறிவறியாது சொன்னாய்

65 அழிந்திடின் ஐந்து கந்தம்முத்தி என்றுரைத்தாய் ஐந்தும்
அழிந்திடின் முத்திபெற்றார் ஆர்என வினவும் காலை
அழிந்திடும் ஐந்தில் உண்டாம் உணர்வென உரைக்கின் ஐந்தும்
அழிந்தன இலையாம் முத்தியாவதும் இல்லை என்றார்

66 பொங்குபுகழ் மங்கியுள புத்தனும் வெகுண்டே
எங்கடவுள் ஏது பெறும் முத்திஇல்லை என்றீர்
உங்கடவுள் யாது உமதுமுத்தி எதுஎன்னத்
தங்கு சிவஞானம் உணர் சைவர் இது சொல்வார்

67 ஆலமணி நீழலில் இருந்தறம் உரைக்கும்
கோலமது கண்டுபலர் கும்பிட நடிப்போன்
மேலணியும் நீறன் உமைகூறன் அருள்மேவும்
சீலன் அவன் நற்பெருமை செப்பஎளிதாமோ

68 தில்லைமணி மன்றிலுறை திங்கள் அணி எம்கோன்
எல்லை உளனோ மொழிய என்றருள் புரிந்தே
சொல்லுமளவில் பலதொடுத்து முயலாதே
நில்லுமிது கூறுமென நீசன் இது உரைத்தான்

69 முன்னர் வடநீழலில் இருந்தறம் மொழிந்தான்
என் இறைவன் என்னும் உரைஎன் எதிர்உரைத்தீர்
மன்னு செபமாலை கொடிக்குமது மற்றோர்
உன்னரிய நற்கடவுள் உண்டென நினைந்தோ

70 மல்லல் உலகத்தவர் வணங்கிட நடிப்பன்
தில்லைஇறை என்ன உரை செப்பினிர் செகத்தே
நல்லறிவினோர்கள் சிலர் நாடுபவர் உண்டாய்
அல்லது தம்இச்சைதனில் ஆடுபவர் உண்டே

71 வையம் முழுதுய்ய மணிமன்றினுள் நடிப்போன்
மெய்யணியும் நீறன்என மேன்மை கொடுரைத்தீர்
செய்ய ஒளிதங்கு திருமேனி தனில் நீறே
துய்யதெனவே உமது தொல்இறை புனைந்தான்

72 மங்கை ஒருபங்கன் என வண்மை கொடுரைத்தீர்
பங்குபடு பெண்வடிவு பாரின்மிசை உண்டோ
அங்கம் ஒருபாதி மடமாதின் உருவானால்
உங்கள் இறைநீர் துறவில் உற்றது அவம் அன்றோ

73 என்றவன் மொழிந்தபின் இகழ்ச்சி நகைசெய்தே
மன்றனடியார்கள் பெருவாழ்வு பெற வந்தார்
நன்றி உபதேசம் இது நற்றவம் இலாதாய்
உன்றன் எதிர் சொல்வதலவென்று இதுரை செய்வார்

74 ஓங்கு செபமாலை கொடிருத்தல் உலகெலாம்
ஈங்குயர் தவங்கள் செய என்றினிது கொள்ளாய்
தாங்கிய படைத்தொழில்கள் சார்பொடு பழக்கும்
பாங்குள பணிக்கர் கரபத்திரமதாகும்

75 ஈட்டிய தவப்பயன் இல்லாதவர்கள் போல் ஊன்
நாட்டமுடையார் எதிர் நடித்திடுவன் என்றாய்
காட்ட அனல்போல் உடல் கலந்து உயிரை எல்லாம்
ஆட்டும் ஒருநட்டுவன் எம்அண்ணல் என எண்ணாய்

76 நீற்றினை அணிந்தது என் நின் இறைவன் என்றே
சாற்றினை உயிர்க்கிடர் தணிக்க என எண்ணாய்
தோற்றியுள தம்புலவர் துன்பமுறும் வெந்நோய்
மாற்றும்வகை அன்னையர் அருந்திய மருந்தாம்

77 புல்லறிவு கொண்டு பலபொத்து மொழி புத்தா
நில் அவனலால் ஒருவர் நீறணிவ துண்டோ
நல்ல திருநீற்றினுள நன்கு மறைதானே
சொல்லும் அதலால் ஒருவர் சொல்ல எளிதாமோ

78 பாகமதில் உத்தமியை வைத்தல் பழுதென்றாய்
போகமுலகுக் கருள் புரிந்தருள் என்றே
மாகமுகில் ஒத்த குழல் மங்கையொடிருந்தான்
யோகம் உயிர்கட்குதவ யோகவுருவானான்

79 அந்தர் கரமுற்ற தடியன்றி அறியார்போல்
இந்த மொழிகற்றனை இனிப்பிறிது தேராய்
மைந்துபுனை சந்தவிடையான் மலரின் மன்னும்
கந்தமென நின்றநிலை கண்டிலை கண்ணில்லாய்

80 ஆதிசிவயோகி மிகுபோகி அருவாகும்
சோதி வெகுரூபி சுகவாரி துயரில்லா
நீதி மணிமன்றதனில் நின்ற நிலை அல்லால்
யாதுமுடியாது யாதுபதம் யார்அறிவர் என்றார்

81 மைந்தர் மடவார் தமது வாக்கிறைவி நீயே
இந்தவகை பொய்மொழி இயம்புவதென் என்றே
அந்தமிலவாகிய அருங்கலைகள் வல்லார்
முந்துகலை மாதினை முனிந்திது மொழிந்தார்

82 தொக்க நான்மறை சொல்லும் நீஇவை சொல்வதென்
கலைமாதராய்
தக்கன் வேள்வியில் உன்றன் நாசிதடிந்ததின்றுமறப்பதே
முக்கணான் அருள்இல்லை என்றிடும் மூகர்நாவை
அகன்றுநீ
நக்கனார் திருவாணை ஏகென நாமடந்தையும் அஞ்சி
னாள்

83 அஞ்சி வஞ்சகர் நாவில்நின்றும் அகன்றபின்பவர்
தாமெலாம்
நஞ்சயின் றவர் போல் ஒடுங்கி நடுங்கி மூகர்களாயினர்
நெஞ்சம் நொந்துபின் ஈழநாடன் நிறைந்திடும் சிவ
ஞானநூல்
எஞ்சலின் றியசெல்வர் பாதம் இறைஞ்சி நின்றிது கூறு
வான்

84 சொல்ல வல்லவர் மூகையா யினர் சொல்லிலா ஒரு
மூகையாம்
வல்லி என் புதல்விக்கு மூகை மறைந்து நல்லுரை கூடி
னால்
நல்லதொண்டன் உமக்குநான் எனநாயனார் அவள்
தன்னைநீ
ஒல்லை இங்கழை என்ன வந்தவள் உண்மைசேர் அவை
நண்ணினாள்

85 நண்ணி அங்கு முன்நின்ற கன்னியை நன்மையாளரும்
— நாடியே
கண்ணின் இன்னருள் செய்து பின்னர் கரைத்து முன்னர்
இருத்தியே
உள்நடுங்கி இருந்தபுத்தன் உரைத்ததர்க்கம் அவைக்
கெலாம்
தண்ணறுங்குழல் வல்லி நல்லுரை சாற்று கென்று
விளம்பினார்

86 பற்றுநன்குணராத புத்தர் பகர்ந்தர்க்க மவைக்கெலாம்
கற்றுணர்ந்தவர் போல மன்னிய கன்னி மாறுரை
கூறினாள்
மற்றுமங்கையர்சாழலாம்விளையாடலாக மகிழ்ச்சியால்
உற்றதன் பொருள்தன்னை வாசகமாக உண்மையர்
ஓதினார்

87 ஈழமன்னனும் அஞ்செழுத்தும்இயம்பிநீறு புனைந்துபின்
தாழநின் றடிமைத்திறம் தவறாத தொண்டினன் ஆயி
னான்
சோழனும் புலியூரின் மன்னிய தொன்மையாளரும்
அம்பலம்
வாழ்களன் றுதுதித்துநின் றெழில்வாதவூரரை ஏத்தினார்

88 தக்கசீர்பயில் ஈழமன் உயர்சைவனார் எதிர்நின்று நன்கு
அக்கமாலை புனைந்து நீறும் அணிந்து தொண்டினான பின்
துக்கமாகிய சீவரத்துவராடை மூடும் உடம்பினார்
மிக்ககா தரமூகைதீர்த்திட வேண்டுமென்றுவணங்கினான்

89 இன்னவாறருள் செய்குவாய் இனிஎம்பிரான் என் அன்புடன்
பொன்னிசூழ் வளநாடனும் புலியூருளாரும் இறைஞ்சினார்
மன்னுசீர் புனைவாதவூரர்மகிழ்ந்துபார்வையைநல்கவே
முன்னராக வணங்கியே அவர் முகைதீர்ந்திது கூறினார்

90 மாசிலாதமனத்தினாய்முனம்மன்னுதீவினைசெய்தலால்
ஆசிலாத வெண்ணீறணிந்து நல்அஞ்செழுத்துரை செய்திலேம்
பூசலாகிய நீறுடன் புனை அக்கமாலைகள் காவியாம்
தூசுதா துவராடையைச்சுடு என்றுதுன்றி வணங்கினார்

91 கோட்டம் இன்றிய உண்மையார் நகைகோட்டுகின்ற முகத்தராய்
ஈட்டுமுன்செய் தவத்தினார் இவர்என்று சிந்தையில் எண்ணியே
வாட்டரும் திருநீறணிந்து வயங்குருத்திரசாதனம்
பூட்டியங்கவர் சீவரங்கிளர்பொங்குதீக்கிரை யாக்கினார்

92 பொய்யிலா அருள் ஐயரும் புலியூருளார்களும் முன்புசேர்
மையலாகிய வேடமின்றி வயங்கு நீறணிவார்களும்
துய்யகாவிரி நாடனும் துகழ்தீரும் ஈழர்தம் மன்னனும்
செய்ய மாமணி மன்றுளார் திருமுன்பு சென்று வணங்கினார்

93 பொன்றுகின்றது முத்திஎன்று புகன்று நின்றுழல் புத்தர்தாம்
மன்றுகண்டு வணங்கி அன்புடன் மாபெருந்தவராவதே
இன்றிதன் பொருள் ஆவதென் பலவாறுடன் கடல் மீதிலே
சென்ற தண்புனல் அல்லரோ உயர்தில்லை எல்லையை நண்ணினார்

94 மன்றகன்றபின்யாவரும்செலவாதவூர்உறை வள்ளலார்
சென்றிலங்கு திருப்புவீசர் சிறந்தபாதம் வணங்கியே
நன்றி துன்றிய அங்கண் வைகினர் நல்லதில்லை உளா ரெலாம்
என்றும் இங்கிரும்ஐயர்நீர்இனிஎன்றுதம்மனை ஏகினார்

95 பொன்னிநாடனும் ஈழநாடுபுரந்தமன்னனும் முன்புசேர்
மன்னுதீவினை தீரமன்று வணங்கி நீறணிவார்களும்
முன்னராக இறைஞ்சி ஞானம் முதிர்ந்தகோவைஅகன்று போய்
மின்னுமாமணி மாடமாளிகை தம்மில் அன்புடன் மேவினார்

96 புன்மைவேடம் அகன்று நீறுபுனைந்துளார்களும் மன்னனும்
தொன்மையார் திருவாதவூரர் துலங்குபாதம் வணங் கியே
நன்மையார் மணிமன்றிறைஞ்சி நயந்துநெஞ்சினில் வஞ்சமாம்
வன்மையான தொழிந்து தில்லைதம் மன்னும் ஊரென வைகினார்

# திருவடி பெற்ற சருக்கம்

1 உடம்படப்பொய்யைமெய்யா உரைத்திடுசமயம்என்னும்
தடம் கயத்திரளை வெல்லும் தனிப்பெருமடங்கல்
அன்னார்
நெடுந்தவப் பெருமையாலே நினைப்பரும் சைவஞானம்
இடம்படக் புகல்வார்பின்னர் எய்தியசெய்திசொல்வாம்

2 ஆடல்வெம் படையினாட்சி எழுச்சியொடு அச்சோ
என்னும்
பாடலும் தெய்வலோக யாத்திரைப் பத்தும் ஓதித்
தேடலும் திகைப்பும்மீளத்தெளிதலும்சிறுமை கொண்டு
வாடலும் களிப்புமில்லா நற்பெரு வாழ்விலானார்

3 போற்றும் அஞ்செழுத்தும் நீறும் புவிமிசைவிளங்கத்
துன்பம்
மாற்றிடும் சைவஞான வாசகம் புகலவந்தார்
சீற்றமில் புலியும்பாம்பும் சீர்பெற விளங்கு மன்றில்
ஏற்றினன் புலியூர் மேலைச் சிவபதம் என்று கண்டார்

4 ஐய்யர் அங்குறையுநாளில் ஆடகமன்றில் ஆடும்
மெய்யர் தம்கருணையாலோர் வேதிய வடிவம்கொண்டு
துய்யமுப் புரிநூல் மார்பும் துலங்கு புத்தகமும் தோன்ற
செய்யமென் பாதம்நோவச் சென்று முன்னாக நின்றார்

5 முன்புறநின்ற வேதமுதல்வரை முகத்தில் நோக்கி
இன்புற வாதவூரர் இரும்என இருந்த பின்னர்
கொன்புனை மறையின் மிக்கீர் எங்குளீர் கூறும் என்ன
மன்பெரு வளம்சேர் பாண்டி மண்டலத் திருப்போம்
என்றார்

6 பாண்டி நாடென்றபின்னர் பரிவுடன் செறிவுகூறி
ஈண்டுநீர் வருதல் வேண்டும் காரியம் இயம்பும் என்ன
ஆண்டநாயகன்தன் ஆணை ஆகிய கருமம் நிம்மைக்
காண்டலே என்று பின்னும் கருத்துற இதனைச்
சொன்னார்

7 மண்ணிடைப்புகுந்தும் மேலைவானிடைப் பறந்தும்
முன்னர்
கண்ணனும் அயனும்தேடிக் காண்பதற்கரியார் தம்மைப்
புண்ணிய மன்றிலாடும் புனிதரைப் பரியில் ஏறப்
பண்ணு நும் பெருமையாலே வாழ்ந்தது பாண்டிநாடு

8 தென்பெருந் துறையில் ஐயன் திருவடி சேவைசெய்து
துன்பம் ஒன்றின்றி வாவிசூழ் கழுக்குன்றில் சென்று
பொன்பொலி மன்றில் எய்திப் புத்தரைவாதில்
வென்றீர்
என்பதுகேட்டுப் பின்னர் யாவரும் மகிழ்ச்சி கொண்டார்

9 ஆதியை மன்றில் ஆடும் ஐயனை அன்பினாலே
ஓதிய தமிழின் பாடல் உள்ளவை ஓதஎண்ணி
மாதுயரகல இன்னே வந்தனம் எழுதல் வேண்டும்
வேதியர் பெருமான் இன்று விளம்பிடும் விளங்கஎன்றார்

10 விண்ணகம் பரவும்நாதன் இவ்வகை விளம்பச் சிந்தை
நண்ணும் அன்புடையராகி நற்சடை முடியார் தம்மை
எண்ணரும் தமிழின் பாட்டால் இயம்பிய ஐயர் அப்
பேரது
உண்ணெகிழ்ந்துள மெய்ஞ்ஞான வாசகம் உவந்து
சொன்னார்

11 அங்கவர் உரைத்த எல்லாம் அம்பலத்தாடும் ஐயர்
செங்கையில் ஏடுவாங்கித் தெளிவுற வரைத்த பின்னர்
பொங்கிய அருளினாரும் புகன்றிடர் அகலத் தையல்
பங்கினர் தம்மைக் கோவைபாடுதல் வேண்டும் என்றார்

12 மன்னிய தவந்தின் மிக்கார் அதற்குளம் மகிழ்ந்துகூற
முன்னுற இருந்து கோவை எழுதினர் முடிந்த பின்னர்
பொன்னவிர் வேணியார்தாம் புத்தகம் சேமித் தங்கண்
மின்னென மறைந்தார் சொன்ன வித்தகர் அயர்ச்சி
கொண்டார்

13 எழுந்தனர் எங்கும்ஓடி நாடினர் என்கொல் என்னா
அழிந்தனர் மன்றுளாடும் ஆதி என்றறிந்த பின்னர்
பொழிந்தனர் கண்ணீர் எங்கே போயினை என்று மண்
மேல்
விழுந்தனர் பரமானந்தவேலை வெள்ளத்துளானார்

14 செந்தமிழ்க் கன்புமிக்கார் சென்றுதம் மன்றில் எய்தி
அந்தரத்தவரை மாலை அயனை நான்முகத்து நாடி
நந்தமக்கடிமை பூண்டு நயந்தவன் ஒருவன் சொன்ன
இந்தநற்பாடல் கேண்மின் என்றவர்க் கெடுத்துச்
சொன்னார்

15 மெய்த்தவ வாதவூரன் விளம்பிட எழுதும் இந்தப்
புத்தகம் மன்றுளாடல் புரிந்தவன் எழுத்தாம் என்று
முத்தியை உதவும்கோவை முடிவிடத் தெழுதிப் பின்னர்
சித்திர மலர்க்கையாலே திருந்தமைக்காப்பும் செய்தார்

16 வெண்பிறை முடித்தவேணி வித்தகர் உலகுக்கெல்லாம்
நண்புடை வாதவூரர் நற்றம் உணர்த்த எண்ணி
எண்பெறு முனிவர் விண்ணோர் இறைஞ்சும் அம்பலத்து
வாயில்
வண்படி மீதே உண்மை வாசக முறையை வைத்தார்

17 வைத்தபின் பூசைசெய்யும் அந்தணன்வந்து கண்டிப்
புத்தகம் இங்கு நண்ணும் புதுமை தெய்வீகமாம் என்று
சித்தம் அங்குருகி நின்றுதில்லை உள்ளார்கட்கெல்லாம்
இத்திறம் கூறல் வேண்டும் என்று மங்கன்று போந்து

18 செந்திருமருவும்தொல்லைத்தில்லைநன்நகரில் உள்ளார்
தந்திருமுன்பு சென்று சாற்றினார் இந்த நீர்மை
அந்தணர் மொழிந்தபின்னர் அதிசயம் இது என்றோடி
வந்தவர் படிமேல் அண்ணல் வைத்த புத்தகம் கண்டார்
கள்

19 யாவரும் தம்முள்நாடி எம்மிறை உறையும் மன்றுள்
தேவரும் புகுதவொண்ணாதெய்விகம்இதுஎன்றெண்ணி
மேவும் அன்பதனால் அண்ணல் விளம்பிய சைவநூலோ
நாவு செந்தமிழோ என்று பார்ப்பது தக்கதென்றார்

20 தேக்கிய அருளும் அன்பும்சிறந்தவர்எல்லாம்சொல்லும்
வாக்கினில் ஒருவர் சென்று மலர்கொடு வணக்கம்செய்து
பூக்கமழ் சடையோன் வைத்த புத்தகம் தன்னைச்சேமம்
நீக்கினர் ஓதினார் நீதிகொள் அகவல் நான்கும்

21 திருச்சதகம் முதலாகச் சிறந்ததமிழ் அறுநூறும்
விரித்த அகப்பொருட் கோவை விளங்க ஒருநாநூறும்
உரைத்தனர் பின்முடிந்தவிடத்து உயர்வாதவூரன் மொழி
தரித்தெழுதும் அம்பலவன் எழுத்தென்று சாற்றினார்

22 கேட்டவர்கள் எல்லோரும் கிளர்புளகம் குறுவேர்வு
காட்டிட ஒண்கண்ணீரும் கசிந்துருகு சிந்தையுமாய்
ஈட்டிய மெய்த்தவமுடையார் இயம்பிய இத்தமிழன்றி
வீட்டுநெறிக் கினிச்சிவநூல் வேறுளதோ என்றார்கள்

23 பூரணவன் திருநாமம் புகழும் அருந்தவர் சொல்ல
யாணர்இதன் பொருள் தேனை இன்றுணர்வோம் என்றெண்ணி
மாணுடை மன்றகன்றேகி மறைவல்லார் போதி நீழல்
வீணருடன் பெருவாது வென்றவர்முன் சென்றார்கள்

24 சென்றவர்கள் திருமுன்பு திருமுறை வைத்து அண்டர்பிரான்
இன்று செயும் செயல்இதுஎன்று இயம்பினர் நின்று எல்லோரும்
ஒன்றுறும் என்புன்பாடல் உவந்தருளப் புவிமீதில்
அன்றுசெயும் தவமறியேன் என்றழுதார் அன்பாளர்

25 புண்ணியர் இங்கு இவ்வாறு புலம்பினர் பின்புலியூரில்
எண்ணரும் அன்புடையார்கள்இதமுடன் அஞ்சலிசெய்து
பண்ணுலவும் சிவஞானப்பாடல் கொளும்படிநும்பால்
நண்ணுலம் அரன்செய்த தென்னீர் நவிலும் எனச்
சொன்னார்கள்

26 அல்லல் எனும் பிறவியிலார் அண்ணல் செயும் செயல்
யாவும்
சொல்லினர் பின்புலியூரர் தொழுதுமனம் களிகூர்ந்து
தில்லையில் எம்பெருமானைச் செப்பியஇத்தமிழ்மாலை
நல்ல அரும்பொருள் கேட்கவேண்டும்என நவின்றார்கள்

27 ஓங்குபுகழ் திருவாதவூர் உறை எம்பெருமானும்
தேங்கிய மெய்ச்சிவஞானச் சிந்தையுடன் களிகூர்ந்து
பூங்கனகப் பொதுஎதிரே போய்ப்புகல்வேன் எனப்போக
ஆங்கவர்முன் சென்றாரும் அன்பொடுபின்சென்றார்கள்

28 நின்றபுகழ்ப் புலியூரர் நேயமுடன் புடைசூழச்
சென்றருளுக்கு இடமான செம்பொனின் அம்பலம் எய்தி
ஒன்றிய இத்தமிழ்மாலைப் பொருள் இவர் என்றுரை
செய்து
மன்றதனில் கடிதேகி மறைந்தனர் அங்கவர்காண

29 செய்காட்டும் கமுகட வித்தில்லையுளார் பொருள்
கேட்கக்
கைகாட்டித் தம்முருவம் காட்டாமல் மறைந்தாரைப்
பைகாட்டும் பேரரவப் பணியுடையார் தமக்கன்பு
மெய்காட்டிப் பாலுடனே மேவியநீர் ஆக்கினார்

30 அண்டனை அண்டர்கோனை அன்பினர் அடையுமாறு
கண்டனர் புளகமெய்திக் கம்பிதமாகி நின்று
விண்டனர் கசிந்து சிந்தை வேர்த்தனர் மேனிஎங்கும்
கொண்டனர் மகிழ்ச்சி செங்கை குவித்தனர் தில்லை
உள்ளார்

31 பூதம் நடங்கள் தொடங்கின போதம் மகிழ்ந்து அணு
கும் கண
நாதர் புகழ்ந்தனர் தும்புருநாதர் அங்கிசைகொண்டனர்
வேதமொடு அந்தர துந்துபி மீதுமுழங்கி எழுந்தன
மாதவர் இந்திரர் ஐந்தரு மாமலர் சிந்தி வணங்கினர்

32 ஞான நடம்பயில் சங்கரன் நாமம் இருந்துள நெஞ்சினர்
மோன சுகந்தமுடன் சிவபூசை முயன்று நயந்தவர்
ஊனமில் அன்பொடு தென்புலியூரில்உறைந்து சிறந்தவர்
வானகமும் பரவும் திருவாசக இன்பம் நுகர்ந்தனர்

33 ஈனம் மிகுந்துள தோலும் என்பும் நரம்பும் சீயும்
ஆனஉடல் சிவரூபமாம் இதனைத் தெரியாமல்
ஊனுடலுக்கு இரைதேடி உழன்றுலகில் தடுமாறி
மாநரகில் புகுதுமதோ மாயவலைப் படுவார்கள்

34 வாதவூர் அந்தணர்தம் திருவாய்மை விளங்கு திருக்கதை
ஓதினர் அன்புடன் ஒண்செவியூடு முகந்து கேட்டவர்
போத மெய்ஞானமுறும் சுகபோகமுடன் புகழ் பெறுவர்
தீதில் பாவங்கள் தொலைந்து பின்சேர்குவர் வன்
சிவலோகமோ



# வாழ்த்து

பூதலமாதும் வாழ்க பொன்மழை பொழிந்து வாழ்க
வேதம் ஆகமமும் வாழ்க வேந்தர் செங்கோலும்வாழ்க
தீதில் ஐந்தெழுத்தும் திருநீறும் சிவனடியாரும் வாழ்க
வாதவூர் இறை புராணம் படித்தவர் கேட்டோர் வாழ்க

— முற்றுப் பெற்றது —



விஜயா பிறிண்டேர்ஸ்
505, மெயின்வீதி
பருத்தித்துறை.